பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00


www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 24 வியாழக்கிழமை (08~07~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:226

### சோதனையிட முயன்ற சமயம் விபரீதம்

# கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் வெடித்துச் சிதறினார் பெண் குண்டுதாரி

## இன்ஸ்பெக்டர் உட்பட 5 பேர் பலி; 10 பேர் காயம்
## அமைச்சர் டக்ளஸுக்கு வைக்கப்பட்ட இலக்காம்




குண்டு வெடிப்பு இடம்பெற்ற கொள்ளுப் பிட்டிப் பொலீஸ் நிலைய முன்றில்...
(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

கொழும்பு,ஜூலை8

**தற்கொலைக் குண்டுதாரி எனக் கருதப்படும் இளம் பெண் ஒருவர் கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்குள் வைத்து நேற்று நண்பகல் குண்டை வெடிக்க வைத்ததில் அப்பெண்ணும், சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட நான்கு பொலீஸாருமாக மொத்தம் ஐவர் உயிரிழந்தனர். மூன்று பெண் பொலீஸார் உட்பட எட்டுப் பொலீஸார் மற்றும் இரு சிவிலியன்கள் எனப் பத்துப் பேர் காயமடைந்தனர்.**

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இலக்கு வைத்துத் தற்கொலைத் தாக்குதல் நடத்த வந்த பெண்ணே அது சரிப்பட்டு வராமல் பொலீஸாரிடம் சிக்கிய நிலையில் கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்குள் வைத்து உடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட சமயம் குண்டை வெடிக்க வைத்தார் எனக் கூறப்பட்டது.**

இக்குண்டு வெடிப்புச் சம்பவம் நேற்று நண்பகல் 12.10 மணியளவில் இடம்பெற்றுள்ளது. நேற்றுக்காலை 11 மணியளவில் கொள்ளுப்பிட்டி, காலி வீதியில் அமைந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகத்தில் கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது.

நேற்றுப் புதன்கிழமை பொதுமக்கள் தினம் என்பதால் பொதுமக்களைச் சந்திப்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அமைச்சிலேயே இருந்தார்.

அப்போது அங்கு வந்த இளம் யுவதி ஒருவர் தனது பிரச்சினை தொடர்பாக அமைச்சரைக் காண வேண்டும் என வரவேற்பாளரிடம் கூறியுள்ளார்.

அந்த யுவதியின் சுயவிவரங்களைக் குறித்துக் கொடுக்கும்படி கேட்ட வரவேற்பாளர் அந்த யுவதியை வழமையான சோதனைகளுக்கு உட்படுத்தும்படி கோரியுள்ளார்.

அந்த யுவதியோ, தன்னை சோதனைகளுக்குட்படுத்துவதை ஆட்சேபித்துள்ளார். சோதனைக்குட்படாமல் அமைச்சரைச் சந்திக்க அனுமதிக்க முடியாது என வரவேற்பதிகாரி மறுத்துவிட்டார் என்று கூறப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைகள் ஆரம்பமாகின

கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பொலீஸார் ஆரம்பித்துள்ளனர்.

பொலீஸ் நிலையத்தினுள் குண்டினை வெடிக்கவைத்த தற்கொலைத் குண்டுதாரியுடன் காணப்பட்டதாகக் கூறப்படும் யுவதி ஒருவரையும பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 25 இற்கு மேற பட்டோரிடம் பொலீஸார் வாக்குமூலம் பெற்றிருப்பதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-9)

## புலிகள் மீது குற்றம் சுமத்துகிறார் டக்ளஸ்

லண்டன்,ஜூலை8

நேற்று நடைபெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொணடனர் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

நேற்றிரவு பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

அவர் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

"இத்தகைய நடவடிக்கைகளை புலிகளே மேற்கொள்வார்கள் என்பதில் எந்தவித சந்தே

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

கொழும்பு,ஜூலை8

நேற்றைய தற்கொலைக் குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்த பாதுகாப்புச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக தலைநகரில் மேலதிக துருப்புக்கள் நிலைகொள்ளச் செய்யப்பட்டு தேடுதல்கள் தீவிரப்படுத்தப்படும் என்றும் - கூறப்பட்டது.

"கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 'கொழும்பு கட்டளைத் தலை

(16ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த மீறல் ஆகாது; கண்காணிப்புக்குழு கருத்து

லண்டன்,ஜூலை8

கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை யுத்தநிறுத்த மீறல் என்று கூற இயலாது.

இப்படித் தெரிவித்திருக்கிறார், சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரியான திஸா சிம்போகா.

நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அப்பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்,

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக அரசின் சமாதான செயலகம் எம்முடன் தொடர்புகொண்டு பேசிவருகின்றது. இச்சம்பவம் மிகத் தீவிரமான ஒன்றுதான். இது தொடர்பாக பொலீஸ் விசாரணை நடைபெற்றுவருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக நாங்கள் ஆராய்ந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்தினார் சொல்ஹெய்ம்

லண்டன்,ஜூலை8

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட தனது விஜயத்தின்போது ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக சொல்ஹெய்ம், பாலசிங்கத்திடம் எடுத்துவிளக்கினார்.

கருணா விவகாரத்தை படைத்தரப்பு கையாளும் விதம் குறித்து புலிகளின் தலைமைப் பீடம் கொண்டுள்ள அதிருப்தி மற்றும் விசனத்தை பாலசிங்கம், சொல்ஹெய்மிடம் தெரிவித்தார். கிழக்கில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நடத்தும் நிழல் யுத்தம் குறித்த புலிகளின் கடும் அதிருப்தியையும் அவர் வெளியிட்டார்.

போர் முனைப்போடு செயற்பட்டுவரும் இலங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை குழப்பும் முயற்சி அல்லவாம்

கொழும்பு,ஜூலை8

தற்கொலைக் குண்டுவெடிப்புச் சம்பவம், நாட்டின் சமாதானத்தைக் குழப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அல்ல என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுவிடயமாக சுதந்திரக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இச்சம்பவம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை திட்டமிட்டு கொலைசெய்ய எடுக்கப்பட்ட முயற்சி என்று கிடைக்கும் தகவல்களிலிருந்து தெரியவருகிறது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் கொலை செய்வதற்கு ஏதாவது ஒரு குழுவினால் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும்.

ஐ.தே.க., இந்தச் சம்பவத்தைச் சுட்டிக்காட்டி நாட்டின் சமாதானம் மீறப்பட்டுள்ளதாகச் செய்யும் பிரசாரம் தொடர்பாக நாம் எமது

(16ஆம் பக்கம் பார்க்க)

### மாணவர் ஒன்றிய வாக்குறுதியையடுத்து

## யாழ். பல்கலை. மருத்துவபீட மாணவி உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி கி.புஷ்பமாலா, மருத்துவபீட நிர்வாகம் தன்னைப் பழிவாங்குவதைக் கண்டித்தும், 5 கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்றுமுன்தினம் முதல் மருத்துவபீட வளாகத்தில் மேற்கொண்டிருந்த உண்ணாவிரதப் போராட்டத்தை யாழ் பல் கலைகழக மாணவர் ஒன்றியம் வழங்கிய வாக்குறுதியையடுத்து நேற்றிரவு 8.30மணியளவில் கைவிட்டார். இந்த மாணவியின் போராட்டம் தொடர்பாக நேற்று மதியம் ஒருமணியளவில் யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் சு.மோகனதாஸ் தலைமையில் மருத்துவபீட துறைசார் தலைவர்கள், மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் கூட்ட மொன்றை நடத்தினர்.

இக்கூட்டத்தின் ஆரம்பத்தில் பாதிக்கப்பட்ட மாணவியின் பரீட்சைப் பெறுபேற்றினை மீள் பரிசீலனைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் துணைவேந்தர் தெரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. ஆட்சியின் விளைவு இது குற்றம் சுமத்துகிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஜூலை8

ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்துச் சென்ற போலி சமாதான நடைமுறையின் பிரதிபலனை பொதுமக்கள் அனுபவிக்க நேர்ந்திருக்கிறது.

- இவ்வாறு தெரிவித்துள்ளது ஜே.வி.பி.

கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே அது இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் கடந்த ஒன்றரை வருட காலமாக கொழும்பில் நடமாடி அமைச்சர் டக்ளஸை கொலைசெய்யத் திட்டமிட்டமை தெரியவந்துள்ளது. தலைநகரில் தற்கொலைக குண்டுதாரிகள் ஊடுருவி இருக்கிறார்கள் என


(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



தற்கொலைக் குண்டு வெடிப்பு இடம்பெற்ற கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் முன்புறத் தோற்றம். ஜன்னல்கள் சிதறிக் காணப் படுகின்றன.

குண்டு வெடிப்பு இடம் பெற்ற கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் உட்புறத் தோற்றம்.



# இனியும் புலிகள் பொறுமை காப்பதை நாங்கள் உத்தரவாதப்படுத்த முடியாது!

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை8

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்குப் பதிலாக தமிழ்மக்களையும் விடுதலைப் புலிகளையும் சீண்டும் செயல்களில் அரசு தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலை நீடித்தால் புலிகள் இனியும் பொறுமை காப்பார்கள் என்பதற்கு நாங்கள் உத்தரவாதம் கூறமுடியாது.

- இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை இலக்குவைத்து நடத்தப்பட்டிருக்கும் தாக்குதல்களைக் கண்டித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அறிக்கை ஒன்று விடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் இந்த அறிக்கையை நேற்று விடுத்திருக்கின்றார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

05.07.2004 அன்று மட்டக்களப்பில் மீண்டும் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நிராயுதபாணியாகச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை இலக்குவைத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளேயே தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் பிள்ளைகள். தமிழ்மக்களின் மீட்சிக்காக கண்ணிமை துஞ்சாமல் கடமை புரிபவர்கள். அவர்கள் மீது நடத்தப்பட்ட இந்த அராஜகம் கண்டு தமிழ்ச் சமூகம் கொதிப்படைந்துள்ளது. தெற்கின் சமாதான முயற்சிகளின்மீது பெருத்த சந்தேகம் தமிழ்மக்கள் மத்தியில் வலுப்பெற்றுள்ளது. இதனைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடனடியாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வஞ்சகத்தனமாகவும், கோழைத்தனமாகவும் மேற்கொள்ளப்பட்ட இந்த அராஜகத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கின்றது. இத்தகைய செயல்கள் சமாதான நடைமுறையை மீட்கக் கடினமான பெரும் பின்னடைவுக்குள் தள்ளிவிடும் என்று எச்சரிக்கின்றது.

ஸ்ரீலங்கா அரசு இதயசுத்தியோடு பேச்சை மீண்டும் ஆரம்பிக்கத் தயாரான நிலையில் இருக்குமானால், இத்தகைய சம்பவங்கள் எதுவும் நடந்திருக்க நியாயமில்லை. பேச்சு நடத்துவதற்குரிய சூழலை உருவாக்கும் பணியில் ஈடுபடுவதற்குப் பதிலாக தமிழ் மக்களையும், போராளிகளையும் சீண்டும் செயலில் ஈடுபட்டுள்ளது அல்லது இவ்வாறு நடக்கப் பார்த்துக்கொண்டிருக்கிறது. போராளிகள் பொறுமை காத்துக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்தும், இவ்வாறுதான் இருப்பார்கள் என்பதற்கு நாம் உத்தரவாதம் கூறமுடியாது.

தமிழ்மக்கள், போராளிகளை நீங்கள் தொடர்ந்தும் பொறுமை காத்துக்கொள்ளுங்கள் என்று கூறவும் மாட்டார்கள். என்பதை ஓர் எச்சரிக்கையாக சிங்களத் தலைவர்களுக்கும், சிங்கள மக்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். உடனடியாக குறுக்கு வழிகளைக் கைவிட்டு சமாதான நடைமுறை தொடர்பாக நேர்மையான அணுகுமுறையை மேற்கொள்ளுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவுறுத்த விரும்புகிறது..

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

## சி.கே.கந்தசாமி நினைவுக் கூட்டம்

கொழும்பு,ஜுலை8

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் சி.கே.கந்தசாமியின் ஞாபகார்த்தக் கூட்டம் ஒன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (11ஆம் திகதி) மாலை 4.00 மணிக்கு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளை நடத்துகின்றது.

ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் இந்நிகழ்வில் 'அதிபர்களின் ஆளுமை' என்ற தலைப்பில் அமரர் சி.கே.கந்தசாமி நினைவுப்பேருரையை நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் அமரர் சி.கே.கந்தசாமி ஞாபகார்த்த மலரும் வெளியிடப்படவுள்ளது. அவரது பணிகளும் நினைவுகூரப்பட்டுள்ளன.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த முன்னாள் அதிபர்களுள் ஒருவரான சி.கே.கந்தசாமி இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் காலமானார் என்பது தெரிந்ததே.

(ஐ-க)

## முன்னோடிப் பாசறை

யாழ்ப்பாணம்,ஜுலை8

அகில இலங்கை பெண் சாரணியப் பாசறையில் கலந்துகொள்ளும் பெண்சாரணர்களை தெரிவுசெய்வதற்கான முன்னோடிப் பாசறை ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் சனிக்கிழமை காலை 8 மணி வரை யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பாசறையில் கலந்துகொள்ளும் சிறந்த 30 பெண் சாரணர்கள் அகில இலங்கைப் பாசறைக்கு தெரிவுசெய்யப்படவுள்ளார்கள் என மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார்.(எ-9)

# மேல் மாகாணத்திலேயே தேர்தல் வன்செயல் அதிகம்

## கண்காணிப்பு நிலையம் அறிவிப்பு

கொழும்பு,ஜுலை8

தேர்தல் தொடர்பான 276 சம்பவங்கள் கடந்த திங்கட்கிழமை 5ஆம் திகதிவரை பதிவாகியிருப்பதாகத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் அறிவித்துள்ளது. இவைகளால் 33 சம்பவங்கள் பாரதூரமானவையென்றும் இவைகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற ஒரு கொலை, அனுராதபுர மாவட்டத்தில் இடம்பெற்ற ஒருகொலை முயற்சி மற்றும் பல்வேறு இடங்களில் 10பேர் காயமுற்றமை, 15பேர் தாக்குதலுக்குள்ளானமை, நான்கு தீயிடல் சம்பவங்களும் அடங்கும். இச்சம்பவங்கள் தேர்தல் நடைபெறவிருக்கும் மாகாணங்களிலும் பல்வேறு இடங்களில் நடைபெற்றுள்ளன.

சிறியவையாகக் கருதப்படும் 243 சம்பவங்களில் 207 சம்பவங்கள் தேர்தல் சம்பந்தப்பட்டவை. ஏனையவைகளில் 18 அச்சுறுத்தல்களும் 4 சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டவையாகவும் 14 விஷமத்தனங்களுக்குட்பட்டவையாகவும் கணிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவங்களின் பரவல் தன்மையைப் பார்க்கையில் மேல்மாகாணமே 120 வன்செயலகளுடன் அதிக சம்பவங்கள் இடம்பெற்றபகுதியாகக் காணப்படுகின்றது. 51 சம்பவங்கள் கொழும்பு மாவட்டத்திலும் கம்பஹா மாவட்டத்தில் 46 சம்பவங்களும் களுத்துறை மாவட்டத்தில் 23 சம்பவங்களும் இடமபெற்றுள்ளன. இவைகளில் 95 சம்பவஙகள் தேர்தல் தொடர்பானவை அல்லது தேர்தல் சட்டத்தை மீறியது தொடர்பானவையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(ப)

# கோணாவளைக்கு புதிய பாதை அமைப்பு

தென்மராட்சி,ஜுலை8

சரசாலை வடக்கு வயல்கள் ஊடாக கோணாவளைக் கிராமத்துக்கு இம்மாத இறுதியில் புதிய பாதை அமைக்கப்படவுள்ளது.

இப்புதிய பாதை அமைப்பதற்கு சாவகச்சேரி பிரதேச சபை ஐந்து உழவு இயந்திரங்களை வழங்கவுள்ளதாகவும்- சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் உழவு இயந்திரத்திற்குரிய எரிபொருளையும் பாதை அமைக்கும் பணியில் ஈடுபடுவோருக்குச் சிற்றுண்டி வகைகளையும் வழங்கவுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

சரசாலை, கோணாவளை, மந்துவில் ஆகிய கிராம மக்கள் இப்பாதை அமைக்கும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்க மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் நரவிராஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மு.செ.சரவணபவ, சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கு.நபாலச்சந்திரன், சாவகச்சேரி மின்சார சபை அத்தியட்சகர் வ.சடாச்சரமூர்த்தி உட்பட அரச திணைக்கள அதிகாரிகளும் சரசாலை, கோணாவளை, மந்துவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் கலந்துகொண்டனர்.(எ-117)

# 'இசகு பிசகு' நிலையில் சிக்கிய நீதித்துறை அதிகாரி!

நீதிச்சேவையில் அதியுயர் பதவி வகிக்கும் அதிகாரி ஒருவர் இளம் பெண் ஒருவருடன் காருக்குள் இசகு பிசகாக இருந்த வேளையில் பொலீஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டாராம்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றத்தை ஒட்டியுள்ள புற நகர்ப் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் முன்னிரவு நாடாளுமன்றப் பிரதேசத்தில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த பொலீஸார் பொதுவிளையாட்டு மைதானத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான கார் ஒன்று நிறுத்திவைக்கப்பட்டிருப்பதைக் கண்டுள்ளார்.

பொலீஸார் அருகில் சென்று பார்த்தபோதுகார் கண்ணாடிகள் அனைத்தும் பூட்டப்பட்ட நிலையில் கார் ஆடி அசைவதை அவதானித்துள்ளனர்.

எனினும் காரின் ஜன்னல்கள் ஒளிமறைப்புக கண்ணாடிகளால், உள்ளே இருப்பவர்களை அடையாளம் காணமுடியவில்லையாம்.

அதனால், பொலீஸார் காரைத் தட்டி கண்ணாடியைத் திறக்கச் செய்துள்ளனர். கார் திறக்கப்பட்ட போது உள்ளே இருந்தவர்கள் நிலையை கண்டதும் பொலீஸாருக்கும் சகிக்க முடியவில்லை.

விவகாரத்தைப் பொலீஸார் விசாரிக்க முற்பட்டபோது காருக்குள் இருந்தவர் பொலீஸார் மீது எரிந்து விழுந்திருக்கின்றார். பொலீஸாரும் விடல்லை. வாக்குவாதம் நீடித்தது. காருக்குள் இருப்பவரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும்படி பொலீஸார் வற்புறுத்தினர். அப்போதுதான் அவர்தாம் யாரென்பதைக் கூறினாராம்.

அவ்வளவுதான், பொலீஸாருக்குப் பெரிய அதிர்ச்சி, காருக்குள் இருந்தவருக்கு 'சல்யூட்' அடித்து விட்டு அவர்கள் நகர்ந்துவிட்டனர்.

அந்தப் பெரிய ஆசாமிக்கு எதிராகப் பொலீஸாரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. ஆனாலும் தங்களது பதிவுப் புத்தகத்தில் அவர்கள் அந்த விடயத்தைப் பதிவு செய்து விட்டனராம்.

எனினும், அந்தப் பதிவையும் அகற்றுவதற்கான பெரிய இடத்து அழுத்தம் தற்போது பிரயோகிக்கப்பட்டு வருவதாக வேறு வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் அறிவிப்பாளரான பெண்மணி ஒருவரின் இளம் மகளான மேடை நடிகை ஒருவரே மேற்படி உயர் பதவி அதிகாரியுடன் உல்லாசமாக இருந்தவர் எனக் கூறப்படுகின்றது. வேலியே பயிரை மேய்ந்த கதைதான் இது! என்று அலுத்துக் கொள்கிறார் பொலீஸ் அதிகாரி ஒருவர்.

(க)

# உதயன்

## சமாதானக் கதவு மூடப்படுகின்றதா?

தெற்கில் - தலைநகர் கொழும்பில் - மீண்டும் தற்கொலைக் குண்டு வெடித்திருக்கின்றது.

சுமார் இரண்டரை வருட கால அமைதி நிலைமை பெரும் வெடிப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதைத் திரும்பத் திரும்ப - எச்சரிக்கையாக - இப்பத்தியில் சுட்டிக்காட்டி வந்தோம். அது உச்சநிலையை எட்டியிருக்கின்றது என்பதற்கு கட்டியம் கூறும் நிகழ்வாக இக்குண்டு வெடித்திருக்கிறது எனலாம்.

அமைதி முயற்சிகளில் - சமாதான நடவடிக்கைகளில் - இனப்பிணக்குக்கு இணக்கத் தீர்வுகாணும் எத்தனத்தில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அவரது அரசுக்கும் உள்ள நேர்மையான ஈடுபாடு என்னவென்பது நேற்றுமுன்தினம் பொலன்னறுவை மாஜிஸ்திரேட் நீதிமன்றத் தில் பொலீஸ் தரப்பு மேடையேற்றிய கண்துடைப்பு நாடகம் மூலம் அப்பட்டமானதை அடுத்து இக்குண்டு வெடித்திருக்கின்றது.

இந்த இரண்டரை வருட சமாதான காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம்பெற்ற வன்முறைகள், சூட்டுச்சம்பவங்கள், குண்டுவெடிப்புகள் வரிசையில் கணக்கெடுத்துப் புறம் ஒதுக்கத்தக்கதல்ல இந்தத் தற்கொலைக் குண்டு வெடிப்பு.

இலங்கையின் முன்னைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் ஒப்பமிட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையே இந்தச் சமாதான சூழ்நிலைக்கு வழிகோலியது; வித்திட்டது.

அந்த உடன்படிக்கையின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கிய அம்சத்தை இப்பத்தியில் ஏற்கனவே, பிரஸ்தாபித்திருந்தோம்.

யுத்த நிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டி வளர்க்கும் போக்கைப் பின்பற்றுவதன் மூலம் மட்டுமே சமாதான முயற்சிகளை முன்னெடுக்கமுடியும் என ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டிருந்த விடயமே அது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் ஆரம்பத்தில் காணப்பட்ட சுறுசுறுப்புகள் மங்கி, பிற்காலத்தில் தேக்கமடைந்த போதிலும், அவ்வேளையில் இரு தரப்புக்குமிடையிலான பரஸ்பர நம்பிக்கை சீர்குலைந்து போய் விடவில்லை. நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் நல்ல சூழ்நிலையில் நீடித்தன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசிடமிருந்து பாதுகாப்பு அமைச்சு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 'பிடுங்கி' எடுத்த போதுதான் இலங்கை அரசுத் தரப்புக்கும், புலிகளுக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கையில் கீறல் விழத் தொடங்கியது.

பாதுகாப்பு அமைச்சு பிரதமர் ரணிலின் அரசின் கீழ் இருந்த சமயத்தில் - ஜனாதிபதியிடமிருந்து நேரடியாக உத்தரவுகளைப் பெற்று கடற்படைத் தளபதி செயற்பட்ட போது - புலிகளின் கப்பல்கள் ஆழ்கடலில் தகர்க்கப்பட்டன. புலிகளின் போராளிகள் உயிர்துறக்கவும் நேர்ந்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அடிபட்டுப்போகாத பரஸ்பர நம்பிக்கை, ஜனாதிபதி சந்திரிகாவின் முழு அதிகாரத்தின் கீழ் அரசும், நிர்வாகமும் முழு விடயங்களும் வந்ததும் சீர்கெடத் தொடங்கின.

தமிழர்களுக்கு அவர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்யக்கூடிய உரிமைகள் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்க்கின்ற பேரினவாதிகளுடன் அணி சேர்ந்தமை, கருணா விவகாரத்தைப் பயன்படுத்தித் தமிழர் தரப்பைக் கூறுபோட எத்தனித்து மேற்கொள்ளப்படும் சதித்திட்டம்.

ஒருபுறம் சமாதான முகத்தைக் காட்டிக்கொண்டு மறுபுறம் தனது போர் வெறித் தீவிரத்தை முடுக்கிவிடும் ஒளிவுமறைவு செயற்பாட்டை முன்னெடுத்தமை - இப்படி சந்திரிகா தலைமை எடுத்துவைத்த காலடிகள், நிலைமையை மோசமாக்கி நாட்டை மீண்டும் கொடூரப் போர் என்ற மீள முடியாத சகதிக்குள் சிக்கவைக்கும் வழியை நோக்கி நகர்த்திச் செல்லுகின்றன. இந்த வழி காட்டலின் விளைவுகளை - விபரீதங்களை - புரிந்துகொள்ளாமல், தென்னிலங்கை மக்கள் அத்த கைய வழிகாட்டலுக்கு ஆதரவு தந்து, ஊக்கப்படுத்தி உற்சாகமளிப்பது வேதனையிலும் வேதனை.

நாடும் மக்களும் கடந்த காலக் கொடூரப் போரின் பேரழிவுகளை அவ்வளவு சுலபமாக மறந்துவிட்டு, போருக்கு வழிசெய்யும் தலைமைக்குப் பின்னால் அணி நின்றால், நாட்டினதும் மக்களினதும் தலைவிதியை யார்தான் மாற்றமுடியும்?

போரா? சமாதானமா? - அமைதியா? யுத்தமா? - எது வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டிய கடைசிக் கட்டத்தில் மக்கள் இன்று உள்ளார்கள். நாடும் அதே நிலையிலேயே உள்ளது.

போருக்குக் கட்டியம் கூறுவோருக்கு மீண்டும் மகுடம் சூட்டுவதா என்பதைத் தீர்மானிக்கும் மற்றொரு வாய்ப்பு இரண்டு நாள்களில் - சனிக்கிழமையன்று - மாகாண சபைத் தேர்தல் வடிவில் தென்னிலங்கை மக்களுக்கு வழங்கப்படுகின்றது. எப்படி அவர்கள் முடிவு எடுக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போமே!

### உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்படுவதால்

# வறிய குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தத் திட்டமிட்ட ரீதியில் செயற்பாடு

வலி.மேற்கு,ஜூலை8

யாழ்ப்பாண மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் பெற்றுவந்த குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான திட்டம் ஒன்றை யாழ். அரச செயலகம் வகுக்கவுள்ளது.

இவர்களுக்கான உணவு நிவாரணம் நிறுத்தப்படும்போது இக்குடும்பங்களின் ஜீவனோபாயம் பாதிக்கப்படாமல் இருப்பதே இதன் நோக்கமாகும்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய ஜீவனோபாய உதவிகளையும், ஒழுங்கான அபிவிருத்தி சுய வேலைவாய்ப்புத் திட்டங்களையும் இனங்கண்டு செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் மேற்கொண்டுள்ளார். இதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்றினை யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் உதவி அரச அதிபர்களுக்கும் அரச அதிபரின் பணிப்பிற்கிணங்க திட்டமிடற் பிரதிப்பணிப்பாளர். நா.சிவபாதசுந்தரம் அனுப்பிவைத்துள்ளார்.

இச்சுற்றறிக்கையில், வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்பங்களின் தரவுகளைக் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் திரட்டி வைத்திருக்குமாறும் இக்குடும்பங்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்களது பிரிவில் கடமையாற்ற வரும்போது இக்குடும்பங்களை முன்னுரிமைப்படுத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக அதற்கான ஆவணங்கள், அட்டவணைகள் என்பவற்றை வேறாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனம், சமுர்த்தி அமைச்சு, அரசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் நிதி உதவியுடன் கிராமிய மட்ட புனர்வாழ்வுக்கழகங்கள், கிராமிய நிறுவனங்கள், உள்ளூராட்சி அமைப்புக்கள் என்பவற்றின் ஊடாகச் செயற்படுத்தப்படவுள்ளன.

செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தும்போது விவசாயத்திணைக்களம், கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம், கடற்றொழில் திணைக்களம் போன்ற திணைக்களங்களுடைய தொழில நுட்ப ஆலோசனைகள் பெறப்பட்டு செயற்திட்டங்கள் அதனடிப்படையில் இனம் காணப்பட்டுச் செயற்படுத்தல் அவசியம் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-175)

# சுங்கத் திணைக்களப் பாதுகாப்புக்கு தனிப் பொலீஸ் பிரிவு செயற்படும்

கொழும்பு,ஜூலை8

சுங்கத் திணைக்களத்தின் பாதுகாப்புக்கெனத் தனியான ஆயுதம் தரித்த விசேட பொலஸ் பிரிவு ஒன்று நிறுவப்படவிருக்கின்றது. இந்தப் பிரிவு நிறுவப்படும்வரை சுங்க அதிகாரிகள் தொடர்புகொள்ளும் வகையிலான விசேட பிரிவு செயலாற்றும்.

நிதி அமைச்சரோடும் குற்றவியல் புலனாய்வுத்துறைப் பிரதிப்பொலீஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ணவோடும் சுங்க அதிகாரிகள் நடத்திய பேச்சின் போது இந்தமுடிவு எடுக்கப்பட்டது.

கடந்த வாரம் சுங்க அதிகாரி அத்துலலங்கா தேவா மீது நடத்தப்பட்ட கொலை முயற்சி பற்றிப் புலனாய்வு செய்வதற்கான குழுவொன்றும் பிரதிப்பொலீஸ்மா அதிபர் விக்கிரமரட்ணவின் கீழ் நியமிக்கப்பட்டது. இந்த விசாரணையை மகரகம பொலீஸார் நடத்தும் முறை குறித்துச் சுங்க அதிகாரிகள் அதிருப்தி வெளியிட்டனர். குறிப்பிட்ட சம்பவம் பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்கு இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா வரை பரிசு வழங்குவதற்கும் சுங்கத் திணைக்களம் ஆலோசித்து வருகின்றது.

சில காலத்துக்கு முன்னர் சுங்க அதிகாரி சுஜித் பிரசன்ன என்பவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மேலும் பல அதிகாரிகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வந்ததால் அவர்களில் பலர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். அந்த வழக்கிலும் லங்காதேவ பொலஸாருக்கு உதவி வந்தார். சில தினங்களுக்கு முன் மூன்று பேர் கொண்ட கும்பல் ஒன்று அவரைக் கொலைசெய்ய முயன்றது என்றும் அவர் அத்தாககுதலில் இருந்து தப்பினார் என்றும் கூறப்படுகின்றது. (ப)

# தென்னிலங்கை மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் இங்கும்

## இலங்கை வங்கி முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

தென்னிலங்கை மக்களுக்கு வழங்கப்படும் அத்தனை சேவைகளும் இங்கும் வழங்கப்பட்டுவருகின்றன - என்று இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையின் முகாமையாளர் ந.சிவரத்தினம் உதயனுக்கு அனுப்பியுள்ள மறுப்பு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

"குடாநாட்டு மக்களின் சேமிப்புகள் தென்னிலங்கைக்கே பயன்படுகின்றன. இது மிகவும் வேதனைக்குரியது என்கிறார் இலங்கை வங்கி முகாமையாளர்" என்ற தலைப்பில் உதயன் 04.07.2004 இதழில் வெளியான செய்தி தொடர்பான குறிப்பிலேயே அவர் மேற்கண்டவாறு பிரஸ்தாபித்துள்ளார்.

அவரது அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

தங்கள் பத்திரிகையில் வெளிவந்த குறிப்பிட்ட செய்தி எனக்கும் இலங்கை வங்கிக்கும் விபரீத விளைவுகளை உண்டு பண்ணியுள்ளமையைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

எனது உரையின் சாராம்சம் வருமாறு:-

போர்க்காலச் சூழ்நிலையில் எமது மக்களின் சேமிப்புகள் தென்பகுதியில் பயன்படுத்தப்படுவதாக மக்கள் ஆதங்கப்பட்டுக்கொண்டனர். அப்போது சில கட்டுப்பாடுகள் நிலவியது உண்மையே. ஆனால், சமாதான சூழ்நிலையினாலும் எமது மேலதிகாரிகளின் தொடர்ச்சியான யாழ். விஜயங்களினாலும் இப்போது தென்னிலங்கை மக்களிற்கு வழங்கப்படும் அத்தனை சேவைகளும் இங்கும் வழங்கப்படுகின்றன.

கூறப்போனால் அங்குள்ள சேவையைவிட விசேட சேவைகள் இப்போது இலங்கை வங்கியினால் இப்பகுதி மக்களுக்கு வழங்கப்படுகின்றன. உதாரணமாக யாழ். நகரில் இயங்கும் எமது மூன்று கிளைகளுமே (யாழ். மேற்றரக் கிளை, எமது கிளை மற்றும் திருநெல்வேலிக் கிளை) தென்பகுதியிலுள்ள பல கணனி மயப்படுத்தப்பட்ட கிளைகளுடன் நேரடித் தொடர்புகொள்ளும் (On line) முறையைக் கொண்டுள்ளன. அத்துடன், தன்னியக்கப் பணப்பரிவர்த்தனைக் கணனிப் பொறியையும் (A.T.M. வசதி) கொண்டிருக்கின்றன. இப்படியான ஒரு நிலை இலங்கையில் எந்த நகரத்திலும் இல்லை.

நேற்றையதினம் செவ்வாய்க்கிழமை (06.072004) தான் வாடிக்கையாளரதும் விசேடமாக மாணவர்களினதும் தேவையைக் கருத்திற் கொண்டு A.T.M. சேவை பல்கலைக்கழக வளாகத்தில் எமது பதில் பொது முகாமையாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது - என்று உள்ளது.

# 740 குடும்பங்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருள்கள்

வலி.மேற்கு,ஜூலை8

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற 740 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தினால் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

படுக்கை விரிப்பு, பாய், பிளாஸ்ரிக் பாத்திரம், கூரைசீற், வாளி, சவர்க்காரம், ரீ - சேட், நுளம்புவலை, குசினிப் பாத்திரங்கள் போன்ற பொருள்கள் விநியோகிக்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் விநியோகிக்கப்பட்ட பொருள்களின் பெறுமதி சுமார் நாலாயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸின் துரித நடவடிக்கையினால் திட்டமிடல் பிரிவினர் பொருள்களின் விநியோகத்திற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். (ஐ-175)

# சமூக மேம்பாட்டுப் பணிகள் பற்றி மாதர் சங்கங்களுடன் கலந்துரையாடல்

## பெண்கள் பண்பாட்டு மையம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஜூலை8

சமூக மேம்பாட்டுப் பணியில் மாதர் சங்கங்களை இணைக்கும் நோக்குடன் குடாநாட்டைச் சேர்ந்த மாதர் சங்கங்களுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்த பெண்கள் பண்பாட்டு மையம் ஏற்பாடுசெய்துள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் 12ஆம் திகதி திங்கட்கிழமையும் இந்தக் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர் உட்பட வலிகாமம் பிரதேசத்தில் இயங்கும் மாதர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் 11ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிமுதல் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

தீவகக் கோட்டத்தைச் சேர்ந்த மாதர் சங்கங்களுக்கான கலந்துரையாடல் 12 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் -

வடமராட்சி, தென்மராட்சி கோட்டங்களைச் சேர்ந்த மாதர் சங்கங்களுக்கான கலந்துரையாடல் அன்று பிற்பகல் 2.30 மணிக்குக் கொடிகாமம் பிரதேச சபை மண்டபத்திலும் -

நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கலந்துரையாடல்கள் அனைத்திலும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் கலந்துகொள்வார். மாதர் சங்கங்களின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளைக் கலந்துரையாடல்களில் பங்குபற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

பெண்களுக்கு உரியதாகவும் எப்பிரதேசத்தை மாற்றியமைக்கவேண்டும். தமிழீழப் பெண்கள் வாழ்வில் அதிசயிக்கத்தக்கதோர் முன்னேற்றம் காணவேண்டும். இதற்காக ஒட்டுமொத்தக் கிராமிய மேம்பாட்டிலும் பெண்களை இணைத்துக்கொள்வது மிகவும் அவசியமானது. பெண்களின் முன்னேற்றமும் கிராமத்தின் முன்னேற்றமும் தொடர்பாகக் கோட்ட ரீதியாகக் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வுக்கான வழிவகைகளைக் கலந்தாலோசிக்கும் பொருட்டு இந்தக் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### நாளை

ஆனி 25
வெள்ளிக்கிழமை
(09.07.2004)
திதி : ஸப்தமி
காலை 6.30 வரை.
நட்சத்திரம்: ரேவதி
முழுவதும்
சுபநேரம்: 5.58 - 7.28
ராகுகாலம்: 10.28 - 11.58
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சிக்கனம் நிறைந்த வாழ்வு
சிறப்புப் பெறும்.

SLIATE

Release of **"ECHO"**
By
NDE CIRCLE
Dept. of English
Advanced Technical Institute, Jaffna.
9th July 2004.
Time 10.00 a.m

(33900)(34-14-26)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**சின்னையா நடராசா**

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை எம்மனம்
என்றும் உங்கள் நினைவோடு
நாம் இங்கு வாழ்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்,
மருமக்கள்.

பெருந்தெரு,
புலோலி.
(33889)(26-14)

## மணநீக்கத் தீர்வையெழுதி மணவிலக்கு அளிக்கும் பின்னுறுதித் தீர்வை

## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

நடராசா பெண் இராணிமலர்,
உரும்பிராய் வடக்கு - உரும்பிராய்,
வழக்காளி

வழ. இல. மணவிலக்கு/426

எதிராக
அருணாசலம் நடராசா,
உரும்பிராய் வடக்கு - உரும்பிராய்
எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. இ.த.விக்னராஜா அவர்கள் முன்பாக 2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17ஆம் திகதியன்று வழக்காளியும், வழக்காளியின் சட்டத்தரணிகள் - திருவாளர்கள் கனகரத்தினம் அசோசியேட்ஸ் (நிறுவனத்தினர்) பிரசன்னமாயிருக்க முடிவெய்ய வந்தபோது மேற்குறிக்க எதிராளிக்கு இவ்வழக்கில் அழைப்புக் கட்டளை உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டு, பதில் சேவகம் மூலம் வழங்கப்பட்டு அவர் இவ்வழக்கில் தோன்றி மறுமொழி அணைக்கத் தவறியமையால்,

இவ்வழக்கு ஒருமுக விளக்கத்துக்கு எடுக்கப்பட்டு - மேற்குறித்த எதிராளி வழக்காளியை வேண்டுமென்று துறந்தார் என்ற குற்றத்தைப் புரிந்துள்ளார் என மன்று கருதியதால் பின்வருமாறு மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித் தீர்வை எதிராளிக்கு உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு பதில் சேவகம் செய்த திகதியிலிருந்து அதனடுத்த (3) மூன்று மாத காலத்துக்குள் மேற்குறித்த எதிராளி இப்பின்னுறுதித் தீர்வையை இம்மன்றின் முழுவிதிப்பாக ஏன் எழுதக்கூடாதென்பதற்குத் தகுந்த காரணங்கள் காட்டினாலன்றி - மேற்குறித்த எதிராளி - வழக்காளியை வேண்டுமென்று துறந்தார் என்ற காரணத்துக்காக மேற்குறித்த வழக்காளிக்கும் எதிராளிக்கும் 1973 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற விவாகப்பதிவை ரத்துச் செய்து ஒரு மணநீக்கத் தீர்வையை இம்மன்று விதிக்கின்றது என இம்மன்று கட்டளையிட்டுத் தீர்வையளித்துள்ளது.

இப்பின்னுறுதித் தீர்வை இம்மன்றின் முழு விதிப்பானவுடன், இவ்வழக்கின் வழக்காளி தனது கன்னிப்பெயரான சிவகுரு மகள் இராணிமலர் என்ற பெயரை மீளப்பெற்று, மணமாகாத பெண்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் அனுபவித்துவரலாமென இம்மன்று கட்டளையிட்டுத் தீர்வையளிக்கின்றது.

2004 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17ஆம் திகதி என்னால் வரையப்பட்டது.

(ஒப்பம்)
**இ.த.விக்னராஜா**
மாவட்ட நீதிபதி,
மாவட்ட மன்று,
யாழ்ப்பாணம்.

ஒப்பம்........
(கனகரத்தினம் அசோசியேட்ஸ்)
வழக்காளியின் சட்டத்தரணி.

(33903)(42-14-26)

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் **கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை**
(அஞ்சல் உத்தியோகத்தர், வரணி)

27.05.2004 வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியையில் பங்குபற்றியும் அனுதாபச்செய்தி அனுப்பியும் மற்றும் பல வழிகளிலும் தமது பங்களிப்பை ஆற்றிய அனைத்து நெஞ்சங்களிற்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், நாளை (09.07.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

குடும்பத்தினருடன்
சகோதரன்: க.இராசரத்தினம்
(இளைப்பாறிய உப அஞ்சல் அதிபர், வரணி).

கரம்பைக்குறிச்சி கிழக்கு,
வரணி. (33898)(34-14-26)

## மாணவர்களுக்குச் சத்துணவு

யாழ்ப்பாணம்,ஜுலை8

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆறாம் ஆண்டில் கல்விகற்கும் மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டுவருவதாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் அ.நல்லதம்பி தெரிவித்துள்ளார். அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் சத்துணவு வழங்கப்படுகின்றது.

இதற்கான நிதியினை லண்டனில் வசிக்கும் ரி.எஸ். இராசரட்ணம் வழங்கியுள்ளார்.

ஆறாம் ஆண்டில் கல்விகற்கும் 38 மாணவர்கள் இதன்மூலம் பயன்பெறுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-7)

## எய்ட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

உலக சுகாதார நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினர் நடத்துகின்ற எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 13ஆம் திகதி காலை 8மணியிலிருந்து மாலை 5மணி வரை யாழ்.தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களான வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம ஆகிய இளைஞர் சேவை மன்றங்களில் வெளிக்கள, உள்ளக உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுபவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

வைத்திய நிபுணர்கள், மாவட்ட சுகாதார சேவைப்பிரிவு உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டு எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கவுள்ளனர். (10-130

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை8

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள மட்டுவில் கிராமத்தின் சமூக, பொருளாதார, கல்வி, விளையாட்டு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பான முக்கியமான ஆலோசனைக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மட்டுவில் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் சமாதான நீதிவான் க.தவசிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்துகொள்ளவுள்ளார். (10)

## விளையாட்டு விழா

யாழ்.மாநகரசபை பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.யோகராசா மற்றும் நல்லூர் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.திருமறவன் ஆகியோரும் கலந்துகொள்வர். (10-5)


**ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை மாதிரி வினாக்களின் தொகுப்பு**

**த.தவசேகர்** B.Sc., P.G.Dip.in Ed.
யாழ்.மாவட்டத்தின் முக்கிய புத்தக நிலையங்களிலும் வகுப்புகளிலும் சனிக்கிழமை (10/7) முதல் கிடைக்கும்.
(33875)

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் கொம்பியூட்டர் பிறிண்டிங் செய்து பைண்டிங் செய்துகொள்ளவும் -
கலர், லேசர், ஸ்கானிங்,
ரென்சில்கட்டிங், றோணியோ, சீ.டி.
ரைற்றிங் போன்ற வேலைகளுக்கும்
இன்றே நாடுங்கள்:
**ராஜ் புக் பயிண்டிங் அன் கொம்பியூட்டர் பிறிண்டிங்**
43, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்
உங்கள் பதிவுகளை இன்றே மேற்கொள்ளலாம்

விளம்பர அன்பளிப்பு: (33890)(35)
**சி.குமரேசு**
வரணி வடக்கு, மாசேரி.


## ஆன்மீகச் சொற்பொழிவு

குடத்தனை,ஜுலை8

துன்னாலை வடக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிறுதோறும் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் 11 ஆம் திகதி 'இராமாயணம் காட்டும் வாழ்வியல் தத்துவங்கள்' என்னும் விடயம் பற்றி ஆசிரியர் இரா.திருமாறன் சொற்பொழிவாற்றவுள்ளார். (10-78)

## பிரிவுபசாரம்



யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றி 07-07-2004 முதல் சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றவரான ஆசிரியர்

**திரு.க.நவரத்தினம்**

M.Phil. அவர்கள் எல்லா நலனும் பெற்று சிறப்புடன் வாழ இறைவனை இறைஞ்சுகின்றோம்.

(சி-36243) (26-14)

- கல்லூரிச் சமூகம்.

உ

ஓம் குருநாதர் துணை

**வரணி - மாசேரி**
**அருள்மிகு புராதன குருநாதர் கோயில்**
**மகாபொங்கல் திருவிழா விஞ்ஞாபனம்**

குருநாதர் அடியார்களே!

☆ 08.07.2004 (ஆனி 24) வியாழன் காலை 9.00 மணி சந்தையிலிருந்து பண்டம் எடுத்தல்
☆ 09.07.2004 (ஆனி 25) வெள்ளி இரவு 9.00 மணி ஆலயத்திற்குப் பண்டம் எடுத்தல்
☆ 10.07.2004 (ஆனி 26) சனி காலை 7.00 மணி வளர்ந்து நேருதல், தொடர்ந்து பொங்கல், படையல், விசேட பூசைகள், பரிகலம் வழிவிடல், அன்னதானம் என்பன இடம்பெறும்.

*அனைவரும் வருக! குருநாதர் அருள் பெறுக!*

(33899) (24-14-26)

- ஆதீன தர்மகர்த்தா.

உ

**நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய**
## விசேட பொதுக்கூட்டம்

காலம்: 25-07-2004 ஞாயிற்றுக்கிழமை
மாலை 6.00 மணி
இடம்: சட்டநாதர் ஆலய அன்னதானமடம்

ஆராயப்படும் விடயங்கள்
1. அன்னதான மடம்
2. தற்போதைய நிர்வாக சபையின் ஆயுட்காலம்
3. ஆலய காணி வழக்கு இல.காணி/303

*சிவன் மகோற்சவ உபயகாரர்கள், அம்மன் மகோற்சவ உபயகாரர்கள், நவராத்திரி, திருவெம்பாவை, தினபூசை, சங்கராந்தி தீர்த்தம், வெள்ளி, செவ்வாய் உபயகாரர்களாகிய பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம். இந்த அறிவித்தலைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு பொதுச் சபை உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.*

சி.அமிர்தலிங்கம்
செயலாளர்.

க.ஏகாம்பரம்
தலைவர்.

(33893)(42-14-19-26)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
26
-
12
-
1951



உதிர்வு
19
-
07
-
2003

**திருமதி மாணிக்கம்பிள்ளை சின்னப்பிள்ளை**

ஆண்டொன்று போனாலும் எம் அன்புத் தெய்வத்தின்
நினைவு எம் நெஞ்சை விட்டுப் போகவில்லை
பாசத்தின் பிறப்பிடமாய் பண்பிலே தெய்வமாய்
அன்பின் உறைவிடமாய் அறிவுரையில் ஆசானாய்
அரவணைப்பில் அன்னையாய் வாழ்ந்து
எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்து சென்ற
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாலாவி வடக்கு,
கொடிகாமம்.

என்றும் உன் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(33907) (26-14)

## மரண அறிவித்தல்

**தில்லைநாதன் சிவநேசன்**
(சங்கீத ஆசிரியர்)



சண்டிலிப்பாய், கட்டுடையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட தில்லைநாதன் சிவநேசன் நேற்று (07.07.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன் தம்பதிகளின் மூதத மகனும் காலஞ்சென்ற கந்தையா தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி கிருஸ்ணசாமி, திருமதி ஸ்ரீரங்கநாதன், சிவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீசண்முகநாதனின் (ஆய்வுகூட உதவியாளர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி) அன்பு மைத்துனரும் Dr.சாளினி, அக்ஷி, தீபிகை ஆகியோரின் அன்பு மாமனாரும் கோகிலாவின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் சண்டிலிப்பாய், கொட்டுப்பனை இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ஈஸ்வரி வாசா"*
*சண்டிலிப்பாய் வடக்கு,*
*சண்டிலிப்பாய்.*

தகவல்:
திருமதி சி.பரமேஸ்வரி
(மனைவி).

(33902) (24-14-19-26)

# அவசரப் பாதுகாப்புச் சட்டத்திற்கு ஈராக்கியப் பிரதமர் அங்கீகாரம்

பக்தாத்,ஜூலை8

ஈராக்கில் வன்முறையைத் தடுப்பதற்கு வசதியாக கொண்டுவரப்பட்ட அவசரகால பாதுகாப்புச் சட்டத்தை அங்கீகரித்து இடைக்கால அரசின் பிரதமர் இயட் அலவி நேற்றுக் கையெழுத்திட்டார். புதிய பாதுகாப்புச்சட்டம் அங்கீகரிக்கப்பட்ட கையுடன் பக்தாத் நகரின் மத்திய பகுதியில் உள்ள பிரதமர் அலுவலகம் அருகே மோட்டார்க்குண்டுகள் விழுந்து வெடித்தன. இதில் 6 பேர் காயமடைந்தனர்.

ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தவும், சோதனை நிலையங்களை நிறுவவும், சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கவும் புதிய சட்டம் இடைக்கால அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஆனால், இந்த அதிகாரம் சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே தற்காலிகமாக நடைமுறைப்படுத்தப்பட முடியும்.

அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளின் ஆதிக்கத்தைப் பாதுகாக்கவே புதிய சட்டத்தில் இத்தகைய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஈராக்கின் இடைக்கால அமைச்சரவையும், அதிபரும் அங்கீகரித்த பின்னர் இந்தப் புதிய பாதுகாப்புச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

இதற்கிடையில் நேற்று பக்தாத் நகரின் மத்திய பகுதியில் ஷெல்தாக்குதல்கள் இடம் பெற்றன.

பிரதமர் அலவியின் தேசிய உடன்படிக்கைக் கட்சி அலுவலகம் அருகே உள்ள மருத்துவ நிலையம் மற்றும் அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படை அலுவலகம் ஆகிய இடங்களில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதில் 6பேர் காயமடைந்தனர். இந்த ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து கிளர்ச்சியாளர்களுக்கும் கூட்டுப்படையினருக்கும் இடையில் நகரின் மையப்பகுதியில் மோதல் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. (ஒ)

## பாலகிருஷ்ணா வீடு திரும்பினார்

ஹைதராபாத்,ஜூலை8

இந்தியத் திரைப்படத் தயாரிப்பாளரும் அவரது நண்பரும் சுடப்பட்ட வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, ஹைதராபாத்தில் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த நடிகர் பாலகிருஷ்ணா கடந்த திங்கட்கிழமை வீடு திரும்பினார்.

இவரது வீடு ஜ-ப்ளி ஹவுஸ் பகுதியில் உள்ளது. அங்கு கடந்த மாதத்தில் தயாரிப்பாளர் சுரேஸையும் ஜோதிடர் சத்யநாராயண சௌத்ரியையும் துப்பாக்கியால் சுட்டதாக பாலகிருஷ்ணா மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. நீதிமன்றக் காவலில் இருந்துவந்தார் அவர்.

ஆனால், நெஞ்சு வலிப்பதாகவும் கையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறி, மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சைபெற்று வந்தார் பாலகிருஷ்ணா.

இந்நிலையில், பாலகிருஷ்ணாவுக்கு கடந்த ஜூன் 25ஆம் திகதி நிபந்தனைப்பிணை வழங்கியது நீதிமன்றம். இதைத் தொடர்ந்து மருத்துவமனையிலிருந்து தற்போது வீடு திரும்பியுள்ளார் பாலகிருஷ்ணா. (ஒ)

# இந்திய அரசின் 'பட்ஜெட்' 8ஆம் திகதி: சில திட்டங்களுக்கு வெட்டு விழலாம்

புதுடில்லி,ஜூலை8

இந்தியாவில் பதவியேற்றுள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தனது முதல் வரவு - செலவுத் திட்டத்தை இன்று சமர்ப்பிக்கவுள்ளது. முதல் வரவு செலவுத்திட்டம் என்பதால் சலுகைகளை எதிர்பார்க்கலாம். எனினும், சில திட்டங்களில் வெட்டு இருக்கும் என்றே தெரிகிறது. நீர்ப்பாசனம், விவசாயம், கல்வி, சுகாதாரம் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தல் போன்றவற்றிற்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளிக்கப்படலாம் என்று கருதப்படுகிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போககுக் கூட்டணி அரசு பதவியேற்றது. இந்த அரசு தனது முதல் பட்ஜெட்டை வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கிறது. இதற்காக நாடாளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டத்தொடரில் ரயில்வே வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப் பட்டுவிட்டது.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் பழைய திட்டங்கள் பலவற்றிற்கும் வெட்டு இருக்கும் என்று தெரிகிறது. அதேபோல் பலவேறு புதிய திட்டங்களும் அறிவிக்கப்படலாம். நிதியமைச்சர் ப.சிதம்பரம் இதனை ஏற்கனவே கோடிட்டுக்காட்டி விட்டார். அனைத்து மத்திய அமைசசர்களையும் தங்கள் துறைக்கான ஒதுக்கீடுகளை மறு மதிப்பீடு செய்யவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார். அதேபோல் பழைய அரசு சமர்ப்பித்துள்ள இடைக்கால வரவு - செலவுத திட்டத்தில் அறிவிக்கப்பட்ட சில திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனால், தற்போது மத்திய அரசு சமர்ப்பிபது முதல் வரவு செலவுத் திட்டம் என்பதால் சில புதிய கவர்ச்சிகரமான திட்டங்கள் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. அதேசமயம், பழைய அரசு செயல்படுத்தி வந்த திட்டங்கள் முற்றிலும் மாற்றப்படும் என்றே தெரிகிறது.



அமெரிக்காவின் 'ஹாம்ஷைர்' மாகாணத்தில் கேக் மீது மெழுகுவர்த்திகளை ஏற்றிவைப்பதில் புதிய சாத்னை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அந்த மாகாணத்தில் உள்ள நகரின் ஆண்டு விழாவையொட்டி 40 அடி நீள ராட்சத கேக்கை உருவாக்கினார்கள்.

அதன் மீது 15பேர் 15 ஆயிரம் மெழுகுவர்த்திகளை ஏற்றினார்கள். இதற்கு முன் 12 ஆயிரம் மெழுகுவர்த்திகளை ஒரே கேக்கின் மீது ஏற்றியதுதான் உலக சாதனையாக இருந்தது. அந்த சாதனை இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

# வாக்காளர் மீது தலிபான்கள் தாக்குதல்

காபூல்,ஜூலை8

ஆப்கானிஸ்தானில் வாக்களிக்க வந்த வாககாளர் மீது தலிபான்கள் தாக்குதல்கள் நடத்தினர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி நடந்து வந்தது. அமெரிக்க நகரங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பின்னர் ஒசாமா பின்லேடனுக்குத் தஞ்சம் கொடுத்த காரணத்துக்காக ஆப்கான் மீது அமெரிக்கப் படைகள் தாக்குதல் நடத்தின. இதனால் தலிபான்கள் ஆட்சி அகற்றப்பட்டது. தற்போது ஆப்கானிஸ்தானில் ஹமீட் கர்சாய் தலைமையிலான இடைக்கால அரசின் ஆட்சி நடைபெறுகிறது.

ஆப்கானீஸ்தானில் இன்னும் பாதுகாப்பு நிலை மேம்படாத காரணத்தால் தேர்தலைத் தள்ளிவைக்கும்படி தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியிருந்தது. ஆனால், அதிபர் கர்சாய் தேர்தல் நடைமுறையை ஆரம்பிக்கும்படி உத்தரவிட்டார். பொதுத் தேர்தலும்- அதிபர் தேர்தலும் செபரெம்பர் மாதத்துக்குள் நடத்தி முடிக்கப்பட உள்ளன. தற்போது ஒவ்வொரு மாகாணத்திலும் தேர்தல் நடந்து வருகிறது. கந்தகாரில் தேர்தல் நடைபெற்றது. மொத்தமுள்ள 98 லட்சம் வாக்காளர்களில் இதுவரை 56லட்சம் பேர் வாக்களித்துள்ளனர்.

கந்தகாரில் இருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பான்ஜ் - வாயி மாவட்டத்தில் வாக்களிக்க வந்த வாக்காளரைத் தலிபான்கள் தாக்கியதில் அந்த நபர் படுகாயமடைந்தார். வெளிநாட்டுப் படையினர் தலிபான் தீவிரவாதிகளை நோக்கிச் சுடத் துவங்கியதும் அவர்கள் தப்பி ஓடினர். (ஒ)

# வீரப்பனால் தடைப்பட்டிருக்கும் புதிய ரயில் பாதைத்திட்டம்

சென்னை,ஜூலை8

இந்தியாவில் சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்தே வலியுறுத்தப்பட்டு வரும் புதிய ரயில் பாதைத் திட்டம், சந்தனக் கடத்தல் வீரப்பனால் தடைப்பட்டு நிற்கிறது.

சாம்ராஜ் நகர் - மேட்டுப்பாளையம் இடையிலான திட்டத்துக்குத்தான் இந்தக் கதி நேர்ந்துள்ளது.

சாம்ராஜ் நகரில் இருந்து பெங்களூர் வரையிலான ரயில் பாதை ஆய்வுப்பணி ஏற்கனவே முடிந்துவிட்டது. சாம்ராஜ் நகர் - சத்தியமங்கலம் இடையிலான 162 கி.மீ.தூரத்தில், சுமார் 62 கி.மீ.தூரம் வனப்பகுதியில் உள்ளது.

இந்த வனப்பகுதியில் சந்தனக் கடத்தல் வீரப்பன் நடமாட்டமிருப்பதால் அங்கு ஆய்வுப் பணி மேற்கொள்ள ரயில்வே துறையினர் இதுவரை முன்வரவில்லை. ஆய்வுப் பணிக்குச் செல்லும் அதிகாரிகள் வீரப்பனால் கடத்தப்படுவார்கள் அல்லது கொல்லப்படுவார்கள் என்ற அச்சமே இதற்குக் காரணம்.

ஆண்டாண்டு காலமாக அத்திட்டம் முடங்கிக் கிடக்கிறது. இதற்கு ஒரு முடிவு கட்டியே தீர வேண்டும் என்ற நோக்கத்தில் களம் இறங்கியுள்ளார் தமிழத்தைச் சேர்ந்த ரயில்வே புதிய இணை அமைச்சர் ஆர்.வேலு.

இத்திட்டத்துக்கான ஆய்வுப் பணியை உடனே ஆரம்பிக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட அவர், தென்னக ரயில்வே பொது மேலாளரிடம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

வீரப்பன் காட்டுக்குள் ஆய்வுப்பணி மேற்கொளளும் ரயில்வே ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அதிகபட்ச பாதுகாப்பு அளிக்க ஏற்பாடு செய்யுமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.(ஒ)

# ஈராக்கிற்கு இந்தியப்படை செல்ல வாய்ப்பு எதுவும் கிடையாது

## வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் உறுதி

புதுடில்லி ஈராக்குக்கு இந்தியப் படைகளை அனுப்புவதற்கு வாய்ப்பு ஏதும் இல்லை என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர் சிங் கூறியுள்ளார்.

ஈராக் பிரச்சினை குறித்து லோக்சபாவில் நேற்றுமுன்தினம் சிறப்பு விவாதம் நடைபெற்றது. உறுப்பினர்களின் பல்வேறு கேள்விகளுக்கு இறுதியில் பதிலளித்துப் பேசிய அமைச்சர் நட்வர்சிங், ஈராக்கிற்கு படைகளை அனுப்புவது என்ற கேள்விக்கே இடமில்லை என்றார்.

முன்னதாக, ஈராக் பற்றிய சிறப்பு விவாதத்தில் கலந்து கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பி.கே.வாசுதேவன் நாயர் பேசியதாவது: அமெரிக்காவின் ஏகாதிபத்திய மற்றும் நாடு பிடிக்கும் போக்கு, மூன்றாவது உலக நாடுகளுக்கு பெரிய சவாலாக உள்ளது. உலகின் 2ஆவது எண்ணெய்வளம் மிக்க நாடான ஈராக்கை ஆக்கிரமிக்க அமெரிக்கா ஆசைப்பட்டதற்குக் காரணம் அங்குள்ள எண்ணெய் வளங்களை கொள்ளையடிக்கவே. ஈராக்கில் பொம்மை அரசாங்கத்தை நிறுவிய பின்பும் அமெரிக்க - பிரிட்டன் கூட்டணிப் படைகள் அங்கு தங்கியிருப்பது பெருத்த சந்தேகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்துகிறது. சித்திரவதைக் கூடாரமாக ஈராக் மாறியுள்ளது. இருபத்தோராம் நூற்றாண்டின் மிகப் பெரிய வெட்கக்கேடு இது. அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் பிரபல சர்வாதிகாரி ஹிட்லரைப் போன்று செயற்படுகிறார். ஹிட்லரின் சர்வாதிகாரத்துக்கு எந்த வகையிலும் தற்போதைய நிகழ்வுகள் குறைந்தவை இல்லை.

-இவ்வாறு அவர் கூறினார். (ஒ)

# ஈராக்கில் குழந்தையைக் கொன்றது அமெ.படை

பக்தாத்,ஜூலை8

ஈராக் தலைநகர் பக்தாத்தில் சோதனைச் சாவடியில் வாகனத்தை நிறுத்தும்படி அமெரிகக இராணுவம் விடுத்த எச்சரிக்கையை மீறி சென்ற கார் மீது துப்பாக்கியால் சுட்டதில், அதில் பயணஞ் செய்த குழந்தை இறந்தது.

மற்றொரு குழந்தை படுகாயமடைந்தது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றது.

அங்குள்ள ஒரு சோதனைச் சாவடியில் வாகனங்களைச் சோதனையிடும் பணியில் அமெரிக்க இராணுவ வீரர்கள் ஈடுபட்டிருந்தனர். அபபோது ஈராக்கியர் ஒருவர் காரில் வந்தார். காரை நிறுத்தும்படி அமெரிக்க இராணுவம் உத்தரவிட்டது.

காரை நிறுத்தாமல் ஈராக்கியர் செல்லவே கார் மீது இராணுவத்தினர் துப்பாக்கியால் சுடடனர். இதில் பயணஞ்செய்த குழந்தை இறந்தது. காரை அந்த குழந்தையின் தந்தையே செலுத்திச்சென்றார். குழந்தையின் தந்தையிடம் ஈராக் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சோதனைச் சாவடிகளில் நிறுத்தாமல் செல்லும் வாகனங்களை சுடும் அதிகாரம் அமெரிக்க இராணுவத்துக்கு தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## உலக அரங்கில்



பிரிட்டிஷ் இளவரசி டயானா 1997 ஆம் ஆண்டு பிரான்ஸில் நடந்த கார் விபத்தில் பலியானார். டயானா நினைவாக லண்டனில் ஹைடே பூங்காவில் அழகிய நினைவுச் சின்னம் இப்போது அமைக்கப்படடுள்ளது. அழகிய நீரோடை போல அமைக்கப்பட்டுளள இந்த நினைவுச் சின்னத்தை பிரிட்டிஷ் ராணி எலிசபெத் திறந்து வைத்தார். திறப்பு விழாவில் இளவரசர் சார்ல்ஸ், இளவரசர் பிலிப், டயானாவின் மகன்கள் வில்லியம், ஹரிஸ் மற்றும் உறவினர்கள் கலந்துகொண்டனர். டயானாவின் இறப்பால் அரச குடும்பத்தின் மீது மக்களுக்கு உள்ள ஆத்திரத்தை தணிக்கும் நடவடிக்கை இது என்று பரவலாகக் கருதப்படுகின்றது; பேசப்படுகின்றது.

## பலஸ்தீனத்தில் திரைப்பட விழா

ரமல்லா,ஜூலை8

பலஸ்தீனத்தின் மேற்குக்கரையில் இவ்வார முடிவில் தொடங்கும் முதல் திரைப்படவிழாவில் 80 படங்கள் திரையிடப்பட உள்ளன.

ரமல்லாவில் கட்டப்பட்டுள்ள புதிய பண்பாட்டு மையத்தில் நடைபெறும் முதல் விழாவாக இது அமையும். இவ்விழா 6 நாள்கள் நடைபெறும்.

இதேவாரத்தில் ஜெருசலத்தில் நடைபெறும இஸ்ரேலின் சர்வதேச திரைப்பட விழாவுக்குப் போட்டியாக இதை நடத்துவதாக யாரும் கருத வேண்டியதில்லை என்று விழா அமைப்பாளர் ஆதம் ஜோபி கூறினார்.

ஒரே நேரத்தில் இருநாட்டவர்களின் திரைப்பட விழாவும் நடைபெறுவது நல்லது தான். ஒருவரை ஒருவர் கொல்வதற்குப் பதிலாக இந்த வாரம் முழுவதும் சினிமா பார்த்து மகிழ்வோம் என்றார் அவர்.

மேலும், பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு தொடரும்வரை அந்நாட்டுத் திரைப் படங்கள் இவ்விழாவில் இடம்பெறாது என்றும் அவர் கூறினார். (ஒ)

## பத்ரிநாத் யாத்திரிகர்கள் நிலச்சரிவில் சிக்கிப் பலி!

டராடூன்,ஜூலை8

வட இந்தியாவில் நிலச்சரிவு காரணமாக பத்ரிநாத் யாத்திரிகர்கள் 30பேர் பலியாகியுளளனர். மேலும், கோவிந்காட் பத்ரிநாத் வீதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு விட்டதால் புனிதப் பயணம் சென்ற 5ஆயிரம் யாத்திரிகர்கள் ஆதரவில்லாமல் தவிக்கிறார்கள்.

இதன் காரணமாக பத்ரிநாத் யாத்திரையை அடுத்த 20நாள்களுக்கு உத்தராஞ்சல் மாநில அரசு ரத்துச் செய்துள்ளது.

நடுவழியில் சிக்கியுள்ள யாத்திரிகர்களை மீட்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் அனைவரும் தொடர்ந்து பத்ரிநாத் நோக்கி செல்ல இயலாது என்பதால் வீடு திரும்பும் படி அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். (ஒ)




# சுன்னாகம் கிழக்கு அருள்மிகு ஸ்ரீசொர்ணவரத பத்திரகாளி அம்பாள்

## தேவஸ்தான நூதன ஆலய நவகுண்டபக்ஷ

## மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர் - 08.07.2004

### பிரதம குருக்களின் ஆசி




"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" அவ்வாறு பிறந்து விட்டால் மண்ணில் நல்லவண்ணம் வாழ சிவதர்மங்கள் செய்தல் அவசியம். அந்த வகையில்தான் ஆலயங்கள், கல்விக்கூடங்கள், அநாதை ஆச்சிரமங்கள் போன்றவற்றை மக்கள் ஒன்றுசேர்ந்து நிர்மாணித்து வருகின்றார்கள்.

சைவமதத்தில் சிவாலயங்கள் அமைப்பதுபோல சாக்த மத தெய்வமான அன்னை பராசக்திக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்கின்றனர். அன்னை பராசக்தி ஒவ்வொரு கற்பத்திலும் ஒவ்வொரு நாமத்துடன் காட்சி கொடுத்து அருள்பாலிக்கின்றாள். அர்த்த நாரீஸ்வர வடிவத்தில் வலப்பாகத்தில் இருந்து வீரபத்திர மூர்த்தமும் இடப்பாகத்தில் இருந்து பத்திரகாளி மூர்த்தமும் தோன்றி தக்கனுடைய மமதையை நீக்கி, அருள் பாலித்துள்ளனர் என்றால் என்னே. அவர்கள் மகிமை பத்திரம் + காளி என்றால் சுகத்தைத் தந்தருளும் பராசக்தி தாய் என்று பொருள்படக் கூறலாம்.

இந்தவகையில், சுன்னாகம் கிழக்கு வாழ்மக்கள் சகல சௌபாக்கியத்துடனும் சுபீட்சத்துடனும் வாழவேண்டுமென்ற பெருநோக்குடன் சிறிய ஆலயமாக இருந்த சொர்ணவரத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தினைத் துவிதள சுந்தரவிமானத்துடன் கூடிய பெரிய ஆலயமாக அமைத்து வலதுபுறம் விநாயகர் ஆலயமும் இடதுபுறம் பாலமுருகன் ஆலயமும் அமைத்து வாசலின் இடதுபுறம் இராஜ கம்பீரமாக காட்சியளிக்கும் மணிக்கூட்டுக் கோபுரமும் அருகில் வைரவர், சந்தான கோபாலர் ஆலயங்களும் அமைத்து இன்று (08-07-2004) வியாழக்கிழமை காலை 9.30 - 10.30 மணி வரையுள்ள சிங்க லக்ன சுபமுகூர்த்த வேளையில் நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

இது அவர்களின் பக்தி நிலைக்கு ஒரு வரப்பிரசாதம். எமது நாட்டு மக்களும் வெளிநாடுகளில் உள்ள எமது நாட்டு மக்களும் சாந்தி, சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் சிறப்புற்று வாழ எல்லாம்வல்ல சர்வலோகநாயகி அன்னை பராசக்தி ரூபிணி சொர்ணவரத பத்திரகாளி அம்பாளைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

பிரதம சிவாச்சாரியார்
**சிவஸ்ரீ ச.ஸ்ரீசண்முகானந்தக் குருக்கள்**
**மயிலணி, சுன்னாகம்.**



### முத்திப்பேற்றையளிக்கவல்ல சர்வலோகநாயகி பத்திரகாளி அம்பாளின் பத்மபதம் பணிவோம்

அருள்மிகு ஸ்ரீ சொர்ணவரத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான நூதன ஆலய நவகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் இன்று அம்பிகையின் திருவருளால் நடைபெறுகின்றது. இந்தப் பத்திரகாளி அம்பாள் பல வருடங்களுக்கு முன் ஓர் ஆலமரத்தின் கீழ் இருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்து வந்துவேண்டுபவர்களுக்கு வேண்டும் வரங்களை கொடுத்து வந்த அம்பிகைக்குப் புதிதாக மூலஸ்தானம் மற்றும் பல மண்டபங்கள் பரிவார தெய்வங்களுக்கும் ஆலயம் அமைத்து மணிக்கோபுரமும் பலவர்ணங்களுடன் அலங்கரித்து புதிய ஆலயமாக அமைந்துள்ளது.

ஒன்பது குண்டங்களுடன் கூடிய மகாயாகம் அமைத்து அம்பிகையில் எட்டு மூர்த்திகளையும் அந்தக் குண்டங்களில் ஆவாகித்து ஓமங்கள், வழிபாடுகள் செய்து மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. இந்த ஆலயத்தில் மேலும் பல திருப்பணிகள் நடைபெறுகின்றன. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெறும் மண்டலாபிஷேகத்திலும் அம்பிகையின் பக்தர்கள் கலந்துகொண்டு சொர்ணவரத பத்திரகாளி அம்பாளின் திருவருள் கடாட்சத்தையும் பெற்று நலவாழ்வுடன் வாழவும் நாட்டில் அமைதியும் சாந்தியும் ஏற்பட அம்பிகையை வணங்குவோமாக!

**- தலைவர், உபதலைவர்.**

### ஆதீன முதல்வரின் அருளாசி



அம்பிகை அடியார்களே,

சுன்னாகம் கிழக்கில் எழுந்தருளியிருந்து அருளாட்சிபுரியும் அருள்மிகு சொர்ணவரத பத்திரகாளி அம்பாளுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதனையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

அகிலத்தின் தாயாக விளங்கும் அம்பிகை இப்பதியில் பத்திரகாளியாக எழுந்தருளியிருந்து பக்தர்களின் தடைகளெல்லாம் தகர்த்தெறிந்து வேண்டுவார் வேண்டும் வரமருளிவருகின்றார். 'அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்' பால்நினைந்தூட்டும் தாயாகிய காளி அம்மனை வணங்கி நலம் பெறுவோமாக.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்ற கும்பாபிஷேகம் இத்தலத்திலும் நடைபெறுவது இத்தலத்திற்கும் ஊருக்கும் ஊர்வாழ்மக்களுக்கும் புனிதத்தைத் தருவதாகும். மனிதனை மனிதனாக வாழ வழிவகுப்பது இறைவழிபாடாகும். இறைவழிபாட்டிற்கு உகந்த தலமாகத் திகழ்பவை ஆலயங்களே. இதனாலேயே எம்முன்னோர்கள் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனவும் கூறியுள்ளனர்.


இதனை நன்குணர்ந்து உருவாக்கப்பட்ட இவ்வாலயத்தில் நடைபெறுகின்ற இக்கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து அம்பிகையின் அருளினைப் பெறுவோமாக. இக்கும்பாபிஷேகத்தை நடத்துகின்ற ஆலயப் பரிபாலன சபையினருக்கும் சிவாசாரியார்களுக்கும் சுன்னாகம் வாழ் மக்களுக்கும் இறைவனது ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன முதல்வர்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
**இரண்டாவது குருமகா சந்நிதானம்.**







### வரந்தருவாயே போற்றி போற்றி



சீராரும் சுன்னாகம் மலப்பை மேவும்
சிவம்புத்த சொர்ணவரத காளித்தாயே
பேராரும் தாரணத்தில் ஆனி மாதம்
பிறங்குபுகழ் உத்தரட் டாதிநாளில்
தாராரும் கும்பாபி ஷேகம் ஏற்று
தாராளக் கொலுவிருக்கும் உமையே இந்தப்
பாராரும் மக்களெல்லாம் சுகம் சிறந்து
பல்லாண்டு வாழ அருள் புரிகுவாயே

பலகாலம் சின்னஞ்சிறு கோயிலுள்ளே
பத்திரகாளிச் செல்வி என இருந்து
நலமெல்லாம் அடியவர்க்குப் புரிந்தாயம்மா
நாட்டிலுள்ள பக்தரெல்லாம்
மனம் படைத்து
திலகமெனச் சுன்னாகத் துனது கோயில்
சிறக்கவெனப் பாடுபட்டுச் செய்ததொண்டு
மலையெனவே செழிக்க வைத்த காளியம்மா
வருமடியார் துயர்நீக்கிக் காப்பாயம்மா

அம்மாநின் திருப்பூசை ஆற்றுகின்ற
அந்தணர்கள் பணிபுரியும் தொண்டர்கூட்டம்
செம்மை மிகு ஆலயத்தைக் கட்டினோர்கள்
சிறப்புமிகச் சித்திரங்கள் வண்ணம் செய்தோர்
தம்மிலிய பொருளுதவி புரிந்த சீலர்
தங்கும் நாடுகளில் வாழும் பக்தர்
இம்மையிலும் மறுமையிலும் இன்ப வாழ்வில்
இருக்க வரம் தருவாயே போற்றி போற்றி.

- சுபம்

அளவையூர் அருட்கவி
**சி.விநாசித்தம்பி.**

### வாழ்த்துச் செய்தி



"புல்லினால் வருடம் கோடி புதுமணணால் நூறு கோடி துல்லிய செங்கல்லாலே தூய முந்நூறு கோடி அல்லியங்கோதே கேளாய் அருந்தரும் ஆலயங்கள் கல்லினால் அமைத்த பேர்கள் கையிலை சேர்ந்தார்தாமே".

இறையருளோங்கும் சுன்னாகப் பதியில் வழிபாட்டுப் பெருமைமிகு அன்னை சொர்ணவரத பத்திரகாளி அம்பாளுக்குப் புதிதாகக் கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம், ஸ்நபன மண்டபம், வசந்த மண்டபம், பரிவார மூர்த்திகளாக விநாயகர், பாலமுருகன், சந்தான கோபாலர், வைரவர், மணிக்கோபுரம் என்பன சிற்ப சாஸ்திர முறைப்படி சிற்ப வர்ண வேலை மிளிரும் வண்ணம் சிறப்புற ஆலயம் அமைப்பதற்கு அயராது செயலாற்றிய ஆலய நிர்வாகிகள், உபயகாரர்கள், அடியார்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அடியார்கள் துயர்களையும் அன்னை சொர்ணவரத பத்திரகாளி அம்பாளின் மகாகும்பாபிஷேகம் சிறப்புற அன்னையின் பாதக்கமலங்களைப் பணிந்தேத்துவாம்.

ஆலய கட்டட நிர்மாண சிற்பி
**வைத்திலிங்கம் மகேந்திரராசா**
(அராலியூர்).

### நமக்கருள வேண்டும் தாயே சரணம்!

*பத்திரகாளித் தாயே பதமலர் பணிந்தோம் அம்மா*
*பாதாரவிந்தங்களைப் பற்றியே பிடித்தோம் தாயே*
*நித்திய வரம் வேண்டி நின்னடி கரங்குவித்தே*
*பொன்னடி பரவித் துதித்தோம் பூரணி நீயருள்வாய்*
*சத்தியவதியே தாயே சங்கரன் மகிழும் சங்கரியே*
*சகலகலா வல்லியே சரஸ்வதியே வணக்கம் அம்மா*
*இத்தினமுன்னை நாமும் பக்தியே துதிக்கின்றோம்*
*ஏழையெமக் கருளிட ஓடியே வந்திடுவாய்!*

*அம்பிகையே தாயே பத்திரகாளி அன்னையே*
*அண்டினோரை யாதரிக்கும் அன்னபூரணியே*
*நம்பியே உந்தனடி கைதொழுதே துதித்தோம்*
*நமக்கருள வேண்டும் தாயே சரணம்*
*வெம்பியழுதோம் வேலவனை ஈன்றவளே அம்மா!*
*வேண்டும் வரம் தந்து ஆதரிப்பாய் தாயே!*
*தும்பிமுகனும் தம்பியும் அருகருகே சூழ்ந்து வர*
*அபயமளிக்கும் தாயே அகிலாண்டேஸ்வரி நீயே!*

- சிவநெறிக் கலாநிதி
**இராசையா ஸ்ரீதரன்**

வர்ண அமைப்பு:
**தேவசுந்தரம் - ரவி ஆட்ஸ் குழுவினர்,**
**காங்கேயன்**
சிவன்கோயிலடி, திருநெல்வேலி.

# அம்புலன்ஸ்களில் அளவுக்கதிகமாக நோயாளர்கள் மனிதாபிமான அடிப்படையிலேயே ஏற்றப்படுகின்றனர்

## யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

நோயாளரின் நன்மை கருதியே கொழும்பு செல்லும் அம்புலன்ஸ் வண்டிகளில் அளவுக்கதிகமான நோயாளர்கள் ஏற்றப்படுகின்றனர். மனிதாபிமான அடிப்படையிலேயே இதனை மேற கொள்கின்றோம்.

- இவ்வாறு விளக்கமளித்திருக்கின்றார் யாழ. போதனா ஆஸ்பத்திரியின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகம்.

யாழ்.ஆஸ்பத்திரியில் இருந்து மேலதிக சிகிச சைக்காக நோயாளர்களைக் கொழும்புக்கு அனுப்பும்போது அம்புலன்ஸ் வண்டிகளில் அளவுக்கதிகமாக நோயாளர்கள் ஏற்றப்படுகின்றனர். இதனால், அவர்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

'யாழ் - கொழும்பு பயணத்தில் அவதியுறும நோயாளர்கள்' என்ற தலைப்பில் இது தொடர்பான செய்தி ஒன்றும் கடந்த 4ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது.

நோயாளர்களுக்கு இந்த நெருக்கடி நிலை ஏன் ஏற்படுகின்றது என்று ஆஸ்பத்திரி பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து நோயாளர்கள் அவசர சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வாகனங்கள் மூலம் கொழும்புக்கு அனுபபப்படுகின்றனர். இச்சேவை தினமும் இடம்பெற்று வருகின்றது.

எமது வைத்தியசாலையில் 4 அம்புலன்ஸ் வாகனங்களும் அவற்றிற்கென 5 சாரதிகளுமே உள்ளனர். சாரதிகளில் ஒருவர் எந்த நேரமும் வைத்தியசாலையில் இருக்க வேண்டும். எஞ்சியவர்கள் சுழற்சி முறைப்படி கொழும்புகது அனுபபப்படுகின்றனர்.

சாதாரணமாக ஆசனத்தில் இருந்து பயணிகக் கூடிய நிலையில் உள்ள நோயாளியாக இருந்தால் ஆகக் கூடுதலாக 8பேரும், கடுமையான நோயாளிகள் என்றால் - அதாவது ஸ்ரெசரில் கொண்டு செல்லும் நிலையில் உள்ளவர்கள் என்றால் - 2பேரும் அவருக்கு உதவியாளர்கள் இருவரும் கூடவே ஒரு மருத்துவமாதுவும் அனுபபப்படுவது வழக்கம்.

ஆனால், யாழ்.குடாநாட்டு மக்களின் நன்மை கருதி நாம் ஓர் அம்புலன்ஸ் வாகனத்தில் நோயாளர்கள் மற்றும் அவர்களுக்கான உதவியாளர்கள் என பத்துக்கும் மேற்பட்டவர்களை அனுப்பி வைக்கின்றோம். இதனால், தமக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதாக எவரும் இதுவரை எம்மிடம் முறைப்பாடு செய்யவில்லை.

எமது இந்தச் செயற்பாடானது சட்டத்திற்கு முரணானதாக அமைந்திருந்தாலும் நோயாளர்களின் நன்மைகருதி மனிதாபிமான அடிப்படையிலேயே இச் சேவையைச் செய்கின்றோம். இதனை குற்றமாகப் பார்க்காமல் மனிதாபிமானக் கண்கொண்டு பார்க்கவேண்டும். பணம் செலவழித்து கொழும்பு செல்ல முடியாதவர்களுக்கு இந்த சேவைதான் ஒரே மார்க்கம் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும் - என்று விளக்கமளித்தார் ஆஸ்பத்திரிப் பணிப்பாளர்.(ஐ-5)

# மானிப்பாயில் வீடுவீடாக புற்றுநோய் பற்றி ஆய்வு

வலி.தென்மேற்கு,ஜூலை8

மனிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவல் வீடு வீடாக புற்றுநோய் ஆய்வு மேற்கொளளப்பட்டுவருகிறது.

புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்து புற்றுநோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான சிகிச்சை ஆலோசனைகளை வழங்குமுகமாக இந்த ஆய்வு இம்மாதம் தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பிரிவில் குடும்பநல சுகாதார சேவை அலுவலர்கள், சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் வீடுவீடாகச்சென்று இந்த ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கென வழங்கப்பட்ட படிவத்தில் புற்றுநோய் ஆரம்ப அறிகுறியுள்ளவர்களின் விரங்கள் பதிவுசெய்யப்படுகின்றன. பின்னர், இவர்கள் சரியான முறையில் அவதானிக்கப்பட்டு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டபின்னர் இது தொடர்பான உரிய வைத்திய சிகிச்சைபெறுவதற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

புற்றுநோயாளர்கள் பலர் தமது நோய் பற்றி ஆரம்பத்தில் எதுவும் அறியாது இருந்துவிட்டு நோய் முற்றிய பின்னர்தான் சிக்சைக்காக வைததியசாலைகளை நாடுகின்றனர். இது போன்ற ஆரம்பகட்ட ஆய்வுகள்மூலம் இவர்கள் தமக்கு ஏற்பட்ட நோயை சரிவர அறிந்து உரிய சிகிசசையைப் பெற்று நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-135)

# ஈர நிலப் பிரதேசங்களில் கல் அகழ்வது முற்றாகத் தடை!

## மீறி நடந்தால் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை8

யாழ்.குடாநாட்டில் உள்ள ஈரநிலப் பிரதேசங்களில் கல் அகழ்தலில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ்.பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் இந்த நடவடிக்கையின் காரணமாக சூழல் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது.

கோப்பாய பிரதேச செயலர் பிரிவில் உள்ள புத்தூர், வாதரவத்தை போன்ற இடங்களில் இவ்வாறு அகழப்படும் கற்கள் தரமற்றவையாக உள்ளன. எனினும், அவை கல்லுடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்களாலும் கொள்வனவு செய்யப்படுகின்றன.

எனவே, ஈரநிலப் பிரதேசங்களில் கல் அகழ்வோர் உடன் அதனை நிறுத்த வேண்டும் எனவும், அத்துடன் இந்தக் கல் கொள்வனவில் ஈடுபடும் தொழிற்சாலைகளின் தொழில் உரிமம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்படும் எனவும் சூழல் பாதுகாப்பு அலுவலர் ரி.திருக்குமரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)



இலங்கை வங்கியின் தன்னியக்கப் பணம் எடுக்கும் இயந்திரம் (ATM) ஒன்று அண்மையில் யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலருகே வங்கியின் பிரதிப்பொது முகாமையாளர் பீ.ஏ.சி.பெர்னான்டோவினால் திறந்து வைக்கப்பட்டது. அப்போது எடுக்கப்பட்ட படம்.

நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும், பல்கலைக் கழகத்துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸும் உடன் காணப்படுகின்றனர். (ஐ)



தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் பெண மன நோயாளர்தளுக்கான ஓய்வு மண்டபம் கொமர்ஷல் வங்கியின் சுன்னாகம் கிளையின் நிதியுதவியுடன் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட 21 ஆம் அணியின் முதலாவது குழு மாணவர்களால் அண்மையில் புனரமைக்கப்பட்டது.

மேற்படி நிதிக்குரிய காசோலையை சுன்னாகம் கிளையின் முகாமையாளர் ஏ.ஆர்.குலேந்திரனிடமிருந்து பேராசிரியர் தயா சோமசுந்தரம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (10)

# தூர இடங்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை

## அரசுக்கு சிபாரிசு செய்வாராம் அமைச்சர்

கொழும்பு ஜூலை8

தூர இடங்களில், கஷ்டப் பிதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 2ஆயிரத்திலிருந்து 2ஆயிரத்து 500 ரூபா வரையில் ஊக்கத்தொகை வழங்கும் விதத்தில் அரசுக்கு சிபாரிசு செய்யப்போவதாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜானக்க பணடார தென்னக்கூன் தெரிவித்துள்ளார்.

தூர இடங்களில் வசதிகள் இல்லாமலும் கஷ்டங்களுக்கு இடையிலும் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படவேண்டும் என ஆளுநர்கள் சங்கம் சிபாரிசு செய்துளளது. தற்பொழுது சேவையில் உள்ளவர்களைத் தொடர்ந்து சேவையில் இருக்கச் செய்வதற்கும் புதியவர்களை இம்மாதிரி சேவைகளில் ஈடுபடச் செய்வதற்கும் ஊக்கத் தொகை வழங்கப்படவேண்டும் என்று ஆளுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்று அமைச்சர் பென்தோட்டையில் ஊடகவியலாளர் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

கஷ்டப்பிரதேசங்களுக்கு மாற்றப்படும்போது ஆசிரியர்கள் அங்கு செல்ல தயக்கம் காட்டி வரும் இந்தச் சமயத்தில் இந்த சிபாரிசுகளும் பொருத்தமானது. தேசியப் பாடசாலைகளில் சேர்வதற்கு பெரும் ஆர்வம் காட்டப்படும் அதே வேளை தூரத்திலுள்ள கிராமிய பாடசாலைகளில் கற்பிக்க ஆசிரியர் இல்லாத குறை இருந்து வருகின்றது. இதற்குக் காரணம் ஒன்றில் ஆசிரியர்கள் அங்கு போக மறுக்கிறார்கள் அல்லது அப்பாடசாலைகளுக்கு மாற்றப்பட்ட மறுகணமே வேறுபாடசாலைகளுக்குத் திரும்பி விடுகிறார்கள். எனவே, இவ்வாறு ஊக்கத்தொகை வழங்கப்படுவது நல்ல தீர்வாக இருக்கும் என்று கருதுகிறேன் - என்று அமைச்சர் கூறினார். (ப)

# கோயில் கட்டுமானப் பணிகள்: நீண்டகாலம் தாக்குப் பிடிக்குமா?

அன்று இரவு 1.30 மணி, தூக்கம் கலைந்த வேளை அயலூரில் ஓர் அம்பிகை ஆலயம் பிரபல்யமான பாடகர்கள் பங்குபற்றும் நிகழ்வு நடந்துகொண்டிருக்கிறது. அறிவிப்பாளர் தமக்கேயுரிய பாணியில் ஓர் பாட்டிற்கு விளக்கத்தைக் கொடுக்க பல்வேறு வகையான இசைக்கருவிகள் முழங்க பாடல் தொடர்கிறது... 'உப்புக் கருவாடு ஊறவைத்த சோறு...' பாட்டை முழுமையாய்ப் ரசித்தவர்களுக்குப் பொருள் விளங்கும்.... சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்..... என்றவர்களைப் போற்றும் சமயம் எம்சமயம்.

பாடும் கலைஞராவது ஸீசவாலயம் எனத் தவிர்த்திருக்கலாம்.


அல்லது கேட்டோரோ நடத்தியவர்களோ...

அன்றைய செலவு ஒலி, ஒளி, குழு உட்பட 15,000 ரூபாவிற்கு மேல் இருக்கும்.

### வளர்ச்சியா? வீக்கமா?

தற்பொழுது சைவாலயங்கள் பல புதுப்பொலிவு பெறுகின்றன. கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன. நிச்சயமாக வரவேற்கத்தக்கன. ஆனால்.....

நல்ல அழகான, தரமான பாலை, பனை மரங்களால் ஓடுகளால் வேயப்பட்ட நல்ல நிலையிலுள்ள கூரைகள் அகற்றப்பட்டு சிமெந்து வில்லு மண்டபம் கட்டி அதற்குமேல் கூரைகள போடப்படுகின்றன. இவற்றின் பெறுமதி சில சந்தர்ப்பங்களில் பல லட்சங்களைத் தாண்டி கோடிகளையும் எட்டிவிடுவதுண்டு. அத்தனையும் எம்முறவுகள் அயல்நாட்டில் சம்பாதித்த பணம் இவர்கள் இதனைச் சேர்க்கப்பட்ட பாடு, போய்ச்சேரப் பட்டபாடு அவர்களுக்குத் தான் தெரியும். இதிலும் ஓர் பாரிய குறைபாடு இருப்பதாக ஒரு கட்டடப் பொறியியலாளர் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. வளைவுகள் கூட இருப்பதால் கம்பிகள் சரியான முறையில சீராக சிமெந்தினுள் மறையாது அவை விரைவில் துருப்பிடிக்க வாய்ப்புகள் உண்டாம். (கம்பிகளுக்கும் கொங்கிறீற்றுகளிற்குமிடையில் காற்றிடைவெளிகள் இருந்து துருப்பிடித்தல் தூண்டப்படும்) குறிப்பிட்ட நாள்களுக்குள் அவசர அவசரமாகவே வேலையை முடித்தலும்




காரணமாகிறது. எனவே, மரக்கொட்டகைகளிலும் பார்க்க இவற்றின் காலம்.....

### கும்பாபிஷேகம், திருவிழாக்களின் செலவும் நடைமுறைகளும்

தற்பொழுது இவையும் பல ஆலயங்களில் மிகப் படாடோபமாக நடைபெறுகின்றது.

ஒலி, ஒளி அமைப்பு ஆலயத்திலிருந்து ஏறக்குறைய ஒரு கிலோ மீற்றரிலும் கூடிய அளவு பல ஒலிபெருக்கிகள் ஒளி பாய்ச்சும் மின்குமிழ்கள்.

மந்திர உச்சாடனங்கள் காதைப்பிளக்கின்றன. நோயாளிகள், பள்ளிச்சிறார்கள் பாதிக்கப்படுவது கண்கூடு. ஒலியும் ஓர் சுற்றாடல் மாசாக்கியே. எங்களுக்கு போற்றுதற்குரிய மந்திர ஒலி வேற்று மதத்தினருக்கு மாரித்தவக்கைகளின் கத்தல் ஒலியாக விமர்சிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இத்தனைக்கும் ஆலயத்தில் கூடும் பக்தர் கூட்டமோ 50-100ஐ தாணடாத சந்தர்ப்பங்களும் உண்டு.

மந்திரத்தை ஒலிபெருக்கிமூலம் ஒலி பெருக்கலாமா? மந்திரங்கள் மந்திரங்களாக அமைதியாக, இரகசியமாக ஓதப்படுபவை என்றும் இதற்கு மாறாகவும் இக்கருத்துக்கள் வாதத்தில் உண்டு. தீர்ந்தபாடில்லை.... தீர்த்தபாடில்லை.

இப்படிப் பல செயற்பாடுகள் எங்கள் சைவ ஆலயங்களில் எங்களால் எடுக்கப்படுகின்றன. மொத்தத்தில் சீர்தூக்கிப் பார்த்தால் இவற்றை சூழல், மக்கள் தொகை, வழிபாடுகள் என்பவற்றைக்கருத்தில் கொண்டு மிகக்குறைவாக 30% - 40% செலவுகளைக் குறைக்கலாம்: தவிர்க்கலாம். வெளிநாட்டுப்பணம் எப்பொழுதும் வரும் என்றில்லை... அப்பாவி மகன் ஊர்க கோவிலுக்கு தருவான் பிள்ளையின் பிள்ளை....? இன்று எத்தனை பாடல் பெற்றதலங்கள் இந்தியாவில் பாழடைந்தநிலையில் உள்ளனவாம். வருங்காலத்தில் படாடோபமான இவற்றைத் தீந்தையூசக்கூட எம்மால், எம்சந்ததியால் முடியுமா என சிந்தித்து அவர் தரும் பணத்தை அளவோடு செலவு செய்வோமாக.

இதற்கு எதிரான பல்விளக்கங்களை பலர் தர முன்வரலாம். ஏன் என்னாலேயே முடியும், விவாதம் அல்ல இது விளங்கினால் சரி.

- .அன்னைதாஸன்

# மருத்துவப் பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம்

கொழும்பு,ஜூலை8

1996,97ஆம் ஆண்டுக்குரிய மருத்துவப் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவது பற்றிய அறிவித்தலை சுகாதார அமைச்சு வெளியிட்டிருக்கிறது.

உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் 1996, 97ஆம் ஆண்டுக்குரிய மருத்துவ பட்டதாரிகளுக்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் மருத்துவப் பட்டம் பெற்று 16ஆவது சட்டத்தின கீழ் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கும் உள்ளக நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாக அமைச்சு அறிவித்துள்ளது.

சுகாதார சேவைகளின் பணிப்பாளர்நாயகம் டாக்டர் அதுல கஹூன்டலியனகே இது பற்றி தெரிவிக்கையில்:-

மருத்துவ நியமனங்களுக்கு விண்ணப்பித்துள்ள அனைவரையும் ஜூலை 15ஆம் திகதி காலை 9.30மணிக்கு பொரளையிலுள்ள மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் கேட்போர் கூடத்துக்கு வருகைதருமாறு கேட்டுக்கொண்டார்.

இலங்கை மருத்துவசபையின் தற்காலிக பதிவு தொடர்பான சான்றிதழ்களின் புகைப்படப் பிரதிகளையும் பிறப்பு சான்றிதழ்களின் மூலப்பிரதிகளையும் மற்றும் தேசிய அடையாள அட்டைகளையும் தம்முடன் கொண்டுவரும்படி அவர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள். (ப)

## கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு,ஜூலை8

செவ்வாய்க்கிழமை தொடக்கம் கொழும்பு புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தின் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. சில நாசகார சக்திகள் தலைநகருக்குள் ஊடுருவி இருப்பதாகவும், அவை புறக் கோட்டை மத்திய பஸ் நிலையத்தின் மீது குறிவைத்துள்ளதாகவும் அநாமதேய தகவல்கள் கிடைத்துள்ளனவாம். இதனைத் தொடர்ந்தே மத்திய பஸ் நிலையப் பொலீஸார் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலீஸாருடன் இணைந்து பஸ்நிலையத்தில் இயங்கும் இராணு வப் பொலீஸாரையும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும்படி உத்தர விடப்பட்டுள்ளதாம். இன்று முதல் சந்தேகத்துக்கிடமாக நடமாடும் பாதசாரிகளுடன் வாகனங்களும் தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்படும் என மத்திய பஸ்நிலைய பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறினார்.(க)

## வருடாந்த விழா

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் 31ஆவது வருடாந்த விழாவும், வலயம் I, பிராந்தியம் II இற்கான தலைவரின் உத்தியோகபூர்வ விஜய மும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்கக் கேட் போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

மேற்படி நிகழ்வில் வலயத் தலைவர் லயன். எஸ்.சிவநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். விருந்தினர் உரையை யாழ். பல்க லைக்கழக உடற்கூற்றியற்துறைப் பேராசிரியர் எஸ்.வி.பரமேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.(10-ரி)

## வறிய மாணவர்களின் நலன்பேணும் திட்டங்கள்

தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் வறிய மாணவர்களின் கல்வி நலன்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக 'கொடி எழல்' நிகழ்வின் மூலம் பெறப்பட்ட நிதியினைக் கொண்டு அரியாலை, கொழும்புத்துறை, நல்லூர் ஆகிய பகுதிகளில் உள்ள இனங்காணப்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் தொகுதி தொகுதி யாக வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான முன்னோடிக் கருத்தரங்குகளும் நடத்தப்படவுள்ளன என்று ஒன்றியத்தின் தலைவர் ச.நிலக்ஷன் தெரி வித்துள்ளார். (10)


இலவசக் கருத்தரங்கு

மகளிருக்கு ஓர் அரிய வாய்ப்பு

பிரபல அழகுக்கலை நிபுணர் திருமதி நளினி சிவகுமார் (Advance Diploma In Herbal Beauty Culture அவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அழகுக்கலை பற்றிய இலவசக் கருத்தரங்கையும் அழகுக்கலை தொடர்பான பாவனைப் பொருள்கள் பற்றிய தெளிவான விளக்கத்தையும் (தயாரிப்பு நிறுவனம் கிடைக்கும் இடங்கள் ) நடத்தவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில்

★ இடம்: யாழ். Y.M.C.A. மண்டபம்

காலம்: 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணி

வடமராட்சியில்

★ இடம்: இராஜலக்சுமி திரையரங்கு, நெல்லியடி

காலம்: 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி

அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை வழங்குவோர்:

யாழ். குடாநாட்டு மக்களுக்கு நற்சேவையாற்றிவரும

பவர் செல்லூலர் ரேடிங் கொம்பனி

இலங்கையின் எப்பாகத்துக்கும் கேபிள் இணைப்புக்கள் இன்றி அன்ரனா மூலம் இயங்கக் கூடிய மேசைத் தொலைபேசிகளை வழங்கிவரும் 'பவர் செல்லூலர்' ரேடிங் கொம்பனி' யாழ். மக்களின் நன்மை கருதி 24 மணி நேரத்தில் இணைப்புக்களை வழங்கி வருகிறது. அதன் புதிய கிளை நிறுவனம் 205/1, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் கொம்பிளக்ஸில் அமைந்துள்ளது.

பவர் செல்லூலர் ரேடிங் கொம்பனி

இது ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் இணை நிறுவனமாகிய மொபிட்டல் ஆகும்

இங்கு கையடக்கத் தொலைபேசிக கான திருத்த வேலைகளும் அதன் உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள் ளலாம். சகல விதமான கையடக்கத் தொலைபேசிகளின் UNLOCK சீர் செய்து தரப்படும்


Office
185,1st floor
kasthuriyar Road,
Jaffna.
Tel/ fax 021-2227070

SHOP205/1, Kasthuriyar
Road, Jaffna.
Tel: 0712 399220

(36238)32-12-16-37)


கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்து
அவர்களின்

பதினைந்தாவது நினைவுதினம்



| மண்ணரங்கில் | விண்ணரங்கில் |
|---|---|
| 11 - 02 - 1924 | 08 - 07 - 1989 |

பார்வியக்கும் புகழ்பூத்த காங்கேயன் மைந்தனே!
பக்தியுடன் மேடை நாடகம் படைத்திட்ட வித்தகனே!
பதியதனில் பதிவான முதிர்ஞான இசைஞான நடிகமணியே!
மடைதிறந்த வெள்ளமாய் மேடையிலே முழங்கிய கலாநிதியே!
சுதி சேர சுரம் பாடும் சொத்தேரியம் வசந்த கோவே!
சாரீர வல்லோனே நடிப்பிசை ஞான சகலகலா வல்லவனே!


"சாரங்கா"
காங்கேசன்துறை.

(33853)(34-14-19-21)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# உள்ளம் விட்டகலாத

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் மாணிக்கம் இராஜநாதன்

மலர்வு
16.03.1962

உதிர்வு
20.06.2003

அன்புத் தெய்வமே!
கண்ணோரம் நீர் கசிந்து முடியவில்லை
ஆண்டொன்று ஆனதையா
மாறாத நினைவுதனை மனதிலே
வரைந்து கொண்டு
தவறாமல் உமையே தினம் தினம்
எண்ணுகின்றேனையா!
ஆறுதலுக்கு ஆயிரம் உறவுண்டு
ஆனால் 'அப்பா' என்று அழைக்க
யாருமில்லையே?


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

8ஆம் கட்டை வீதி,
கணேஸ்வரம்,
அளவெட்டி.

(33771)(39)

உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.




# இந்தியாவின் வளமான மாநிலத்தில் பட்டினியால் குழந்தைகள் மரணம்

இந்தியாவில் அதிக வருமானம் மற்றும் தொழிற்சாலைகள் உள்ள வளமான மாநிலம் மகாராஷ்டிரா. இங்கு அதிக அளவில் குழந்தைகள் மரணம் அடைவது தெரியவந்துள்ளது.


கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் இந்த ஆண்டு மே மாதம் வரை இறப்பு விகிதம் பற்றிக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் 9 ஆயிரம் குழந்தைகள் பட்டினியால் பலியாகி இருப்பது தெரியவந்துள்ளது.

மராட்டிய மாநிலத்தில் உள்ள 15 மாவட்டங்களில் அதிக அளவு குழந்தைகள் மரணம் அடைந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள். இறந்த குழந்தைகள் அனைத்தும் 6 வயதுக் குட்பட்டவை.

இதுபற்றி மாநில சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் சுபாஷ் சோலங்கி கூறும்போது, பசிக் கொடுமையால் மட்டும் குழந்தைகள் இறக்கவில்லை. எடை குறைவு, வயிற்றுப் போக்கு, முறையான பிரசவம் இல்லாமை உடபடப் பல்வேறு காரணங்களால்தான் குழந்தைகள் பலியாகி உள்ளனர் என்று தெரிவித்தார்.

முன்கூட்டியே பிறப்பதால் 11 சதவீத குழந்தைகளும், குறைந்த எடையுடன் பிறப்பதால் 16 சதவீதமும், வயிற்றுப் போக்கு நோயால் 2.72 சதவீதமும் பிறப்புக் குறைபாட்டால் 1.6 சதவீத குழந்தைகளும் பலியாவது தெரியவந்துள்ளது.

இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 23 லட்சம் குழந்தைகள் பலியாவதாக 'யுனிசெவ்' நிறுவனம் அறிவித்துள்ளது. இதில் அரைப் பகுதியான குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பலியாகின்றன. (ஓ)



தமிழகத்தின் சிவகங்கை மாவட்டம் பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் கோயிலில் இன்று நடை பெறவிருக்கும் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கோயில் முழுவதும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

# பௌத்த பெண் துறவிக்கு தமிழகத்தில் நேர்ந்த கதி



காஞ்சிபுரம்,ஜூலை8

கனடாவைச் சேர்ந்த பிக்குனி தமிழகத்தில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார். அத்துடன், அவர் கடுமையாகத தாக்கப்பட்டுக் காயமடைந்தும் உள்ளார்.

கனடாவின் கிச்சானர் நகரைச் சேர்ந்த எலினா ரெய்னர் என்ற பௌத்த பெண் துறவியே பாதிக்கப்பட்டுச் சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தியாவுக்கு புனிதப் பயணம் மேற்கொண்ட இவர், கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னையிலிருந்து நேபாளம் செல்வதற்குச் சென்னை 'சென்ரல்' ரயில் நிலையம் நோக்கிக் காரில் புறப்பட்டார். இவர் பயணித்த கார் நடுவழியில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதனையடுத்து ஏற்பட்ட தகராறில் கார்க் கண்ணாடி உடைக்கப்பட அதன் சாரதி தப்பி ஓடிவிட்டார்.

மொழிப்பிரச்சினை காரணமாக வழிகேட்டு அறிய முடியாத எலினா, வாடகை வாகனங்கள் எதுவும் கிடைக்காததால் தனியார் வாகனங்களை நிறுத்தி உதவிகேட்டார். ஆனால், எவரும் உதவ முன்வரவில்லை.

கடைசியாகக் கார் ஒன்றில் வந்த இருவர் எலினாவை ரயில் நிலையத்தில் இறக்கி விடுகிறோம் என்றுகூறி ஏற்றிக்கொண்டனர். ஆனால், ரயில் நிலையத்துக்குச் செல்லாமல் கார் ஆள் நடமாட்டமற்ற பகுதிக்குச் சென்றது. அங்கு வைத்து அவர்கள் இருவரும் எலினாவைக் கடுமையாகத் தாக்கிமிரட்டி, பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினர். இதனால் எலினா மயங்கிச் சாய்ந்தார். அவரை அங்கேயே விட்டுவிட்டு இருவரும் தலைமறைவாகி விட்டனர்.

பின்னர் எலினாவை பொதுமக்கள் மருத்துவமனையில் சேர்த்தனர்.

இது தொடர்பாகத் தமிழகப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராகுல் காந்தி தனிக்குடித்தனம்



புதுடில்லி,ஜூலை8

இந்தியக் காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தியின் மகன் ராகுல் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அமெதி தொகுதியல் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ராகுல் இதுவரை டெல்லியின் ஜன்பத் ரோட்டிலுள்ள சோனியாவின் வீட்டிலேயே தங்கி இருந்தார். இப்போது ராகுல் எம்.பி. ஆகிவிட்டதால் அவருக்கு என்று தனி வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. துக்ளக் லேன் பகுதியில் அவருக்கு வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வீட்டுக்குக் குடி போக ராகுல் முடிவுசெய்து இருக்கிறார்.

தனது தீவிர பணிக்காகத் தனி அலுவலகம் ஒன்றையும், தனிக் குழு ஒன்றையும் ராகுல் தொடங்குகிறார். இதற்குத் தனி வீடுதான் ஏற்றது என்று ராகுல் கருதுகிறார். சுதந்திரமாகத் தனித்துச் செயற்படவும் ராகுல் விரும்புகிறார்.

விரைவில் அவர் தனது தாய் சோனியாவை விட்டுப் பிரிந்து புதிய வீட்டுக்குப் போகிறார். துக்ளக் லேன் பகுதியில் உள்ள புதுவீட்டைவிட சோனியாவின் வீடுதான் அவருக்குப் பாதுகாப்பானது என்பதே பாதுகாப்பு அதிகாரிகளின் கருத்து.

ஆனாலும், ராகுல் அதை ஏற்கவில்லை. துக்ளக் லேன் வீட்டைத் தனது தலைமை அலுவலகமாகவும், தங்கும் இடமாகவும் பயன்படுத்த அவர் முடிவுசெய்துவிட்டார்.

# நடிகர் விஜயகாந்த் புதுக்கட்சி தொடங்குவாரா?



சென்னை,ஜூலை8

இந்தியாவில் சமீபத்தில் இடம்பெற்ற தேர்தலில் நடிகர் ரஜனிகாந்த் ஆதரித்த கூட்டணி படுதோல்வியடைந்தது. ரஜனிக்குக் கிடைத்த இந்த அடியால் நடிகர் விஜயகாந்த் புதுக கட்சி ஆரம்பித்து அரசியலில் குதிக்கத் தயங்கி வருகிறார்.

புதுக்கட்சி தொடங்குவதாக இருந்த அவர், சென்னை கோயம்பேட்டில் உள்ள அவரது ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்தில் இடம பெற்ற விழாவுக்குப் பின் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கட்சி ஆரம்பிப்பது சாதாரண விடயமல்ல. நீங்கள் ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமென்றாலும் பலருடன் கலந்து ஆலோசித்து, பலரது கருத்துக்களைக் கேட்டு, ஆராய்ந்துதான் ஆரம்பிப்பீர்கள். அதுபோலத்தான் இதுவும்.

தமிழகம் முழுவதிலிருந்தும் ரசிகர்மன்ற நிர்வாகிகள் விழாவுக்கு வந்திருக்கின்றனர். அவர்களுடன் ஆலோசித்து எனது முடிவைப் பின்னர் தெரிவிப்பேன். கட்சி தொடங்குவதாக இருந்தால் எனது பிறந்தநாளில் அறிவிக்கலாம். அடுத்த ஆண்டு தமிழ்ப் புத்தாண்டில் அறிவிக்கலாம். எப்போது வேண்டுமானாலும் அறிவிக்கலாம். இப்போது என்ன அவசரம்? 'கஜேந்திரா' படத்துக்குப் பா.ம.க. இடையூறு செய்யும் எனப் பயந்துதான் நான் அரசியலுக்கு வரும் முடிவை அறிவிக்கவில்லை என்று சிலர் கூறுகிறார்கள். நான் ஒரு முடிவு எடுத்துவிட்டால் அதிலிருந்து பின்வாங்கமாட்டேன். 'கஜேந்திரா'வுக்கோ வேறு எந்தப் படத்துக்கோ இடையூறு செய்யவேண்டாம் என்று பா.ம.க. தொண்டர்களுக்கு ஜி.கே.மணி கட்டளையிட்டுள்ளார். அதனால் அந்தப் படத்துக்கு இடையூறு எதுவும் வராது.

தமிழக முதல்வரையும் ரஜினிகாந்தையும் நான் சந்திக்கப்போவதாக வந்த செய்திகளில் எதுவும் உண்மை இல்லை.

12வயதிலேயே அரசியலுக்கு வந்தவன் நான். ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றிருக்கிறேன். எனது தந்தை காங்கிரஸில் தீவிரமாக இருந்தவர். சினிமாவுக்கு வந்ததால்தான் நான் அரசியலைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்தேன். தமிழக முதல்வர்கள் பலரும் கலைத்துறையைச் சேர்ந்தவர்கள்தான். ராமதாஸ் கூட மூன்று படங்களில் நடித்திருக்கிறார். ஆகவே, நடிகர்கள் அரசியலுக்கு வரக்கூடாது என்பது தவறாகும் - என்றார் அவர். (ஓ)



அசாம் மாநிலத்தில் 'தியுரி' மொழிக்குத் தன்னாட்சி அங்கீகாரம் வழங்கக் கோரி மாணவர் அமைப்பினர் உண்ணாவிரதம் இருந்தனர். அப்போது அவர்கள் மொட்டை போட்டுப் போராட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# தமிழ்ப்படத்துக்குத் தமிழ்ப்பெயர் வைக்காவிட்டால் போராட்டம்!

## விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் அறிவிப்பு



சென்னை,ஜூலை8

தமிழ் நாட்டில் தமிழ்ப்படத் தயாரிப்பாளர்கள் தமிழ்ப்படம் எடுக்கும்போது அதற்கு ஆங்கிலத்தில் பெயர் வைத்து படம் எடுத்தால் அப்படப்பிடிப்பு எங்கே நடந்தாலும் அங்கே திரண்டு வந்து தடுப்போம் என்று திருமாவளவன் தலைமையிலான தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் அறிவித்துள்ளது.

இது பற்றி விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் திருமாவளவனிடம் செய்தியாளர்கள் கேட்டார்கள். கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

*கேள்வி*: எதற்காக இந்த அறிவிப்பு? நீங்களும் சினிமாக்காரர்களுக்கு எதிராகப் புறப்பட்டு விட்டீர்களா?

*பதில்*: எந்தத் தனிப்பட்ட நடிகருக்கு எதிராகவும் என் குரலை நான் ஒலிக்கவில்லை. எந்த மண்ணில் படம் எடுக்கிறீர்களோ, எந்த மக்களின் சட்டைப் பையிலிருக்கும் காசை வசூல் செய்கிறீர்களோ, அந்த மக்களின் தாய் மொழியில் படத்தின் பெயரையாவது வையுங்கள் என்பதுதான் எங்களின் கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை முன்வைதது இப்போது போராட்டம் அறிவித்திருந்தாலும், பல மாதங்களுக்கு முன்பே ஒவ்வொரு நடிகரையும நேரில் சந்தித்து, நீங்கள் நடிக்கும் படத்துக்குத் தமிழ்ப் பெயர்கள் வையுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். பொதுவாகத் தமிழ் சினிமாவில் தமிழரல்லாதவர் ஆதிக்கம் அதிகம் இருப்பதால் இப்படியெல்லாம் நடக்கிறது.

*கேள்வி*: அரசியலுக்குள் நுழைந்து, புதுக் கட்சி ஆரம்பிக்கும் எண்ணம் விஜயகாந்துக்கு இருப்பதாகச் சொல்கிறார்களே?

*பதில்*: வரட்டும், நடிகர்கள் அரசியலுக்கு வரக்கூடாது என்று மறுக்கும் ஜனநாயக மறுப்புத் தன்மை எனக்கு இல்லை.

ஆனால், சினிமாவில் ஏற்படுத்திக் கொண்ட புகழை, செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியலில் காலூன்றலாம் என்ற நினைப்பைத்தான் நிராகரிக்கிறோம்.

*கேள்வி*: சினிமாவைத் தாண்டி சமூக சேவையும் செய்பவர்கள்தானே நடிகர்கள்?

*பதில்*: இரண்டு கோடி, மூன்று கோடி சம்பளம் வாங்கிவிட்டு, அதிலிருந்து நூறு பேருக்கு இஸ்திரிப்பெட்டி வாங்கிக் கொடுத்தால் வள்ளல் பட்டம் கிடைத்துவிடுமா என்ன?

நூறு பேருக்குச் சோறு போடுவதும் நான்கு பேருக்கு ஓட்டோ வாங்கித் தருவதும் சமூகப் பணியல்ல. உதவிப் பணிகள் வருமான வரி விலக்கிலிருந்து தற்காத்துக்கொள்ளப்போட்டுக் கொள்ளும் முகமூடிகள். லட்சக் கணக்கில் பணம் போட்டுத் திருமண மண்டபம் கட்டிவைத்திருந்த ரஜினிகாந்த், திடீரென ஒரு நாள் அதைப் பொதுமக்களுக்கு அர்ப்பணிப்பதாகச் சொன்னார் ஏன். அந்த மண்டப இடம் தொடர்பாக வில்லங்கம் இருந்ததுதான் ரஜினியின் அந்த முடிவுக்குக் காரணம்.

எனவே, நடிகர்கள் காலை முன்னே வைத்தாலும் பின்னே வைத்தாலும் கணக்குப் பார்த்துத்தான் வைப்பார்கள்.

*கேள்வி*: ரஜனி மகாராஷ்டிரர், விஜயகாந்த் தெலுங்கர் என்று பேதம் பார்த்து எதிர்க்கிறீர்களா?

*பதில்*: இல்லை. நிச்சயமாக இல்லை! தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக உழைத்த மகாராஷ்டிராவினர், தெலுங்கர்கள் ஏராளமாக உண்டு. பெரியாரின் தாய்மொழி கன்னடம்தான். ஆனால், அவர் தன் வாழ்நாளையே தமிழர்களுக்கு அர்ப்பணித்தவர். (ப)

## சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

எமது மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு அதிர்ஷ்டம் பார்க்கும்நாள் 07.07.2004 என அறிவித்திருந்தோம். அது தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. அதிர்ஷ்டம் பார்க்கும் நாள் பின்னர் உதயனில் பிரசுரிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- 3571-3590, 5361-5380 வரையான இலக்கமுடைய அதிர்ஷ்டலாபச் சீட்டு செல்லுபடி அற்றது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

முகாமைத்துவக் கற்கைகள்,
வணிகபீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(33865)(35-34-14)



## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்க வர்த்தக முகாமையாளர்
திரு.க.ஜெயசீலன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**கனகரத்தினம் சிவபாக்கியம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ.சங்க
ஊழியர் நலன்புரிச்சங்கம்.

(33883)(42-34-14)



## கண்ணீர் அஞ்சலி

கோட்டைக்காடு, சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின் முன்னாள் செயலாளரும் உயர்நீதிமன்றப் பதிவாளரும் - வவுனியா, நல்லூர் பிரதேச செயலக உதவி அரச அதிபரும் ஆகிய

**கெ.பாலசிங்கம்**

அவர்கள் 04.07.2004 இல் காலமானதையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஆலய பரிபாலன சபையும்,
இந்து இளைஞர் தொண்டர் சபையும்.


கோட்டைக்காடு. மல்லாகம்.

(33866)(34-14)



## நெஞ்சை விட்டு அகலாத
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 - 04 - 1962



உதிர்வு 20 - 06 - 2003

**அமரர் தங்கராசா நிரஞ்சன்**

திதி: 08-07-2004

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உமது நினைவுடனேயே நானிங்கு வாழ்கின்றேன்
எங்கு பார்த்தாலும் உங்கள் திருமுகம்தான் தெரிகிறதே
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டிநிற்கின்றேன்.

இலகடி,
அல்வாய் மேற்கு, அல்வாய். (33868)(26-34-14) தகவல்: - மனைவி.


## லயன்ஸ் கழக நலத்திட்டங்கள்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டில் பல்வேறு நலத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இதற்கென, கழக அங்கத்தவர்களைக் கொண்ட 15 உபகுழுக்களை கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் நியமித்துள்ளார்.

சலரோகம், பார்வைக்கு முதலிடம், சுகாதாரம், நிதி, வீதிப் பாதுகாப்பு, சூழல் பாதுகாப்பு, கல்வி, விவசாயம், விளையாட்டு, முதியோர் பராமரிப்பு, சர்வதேச லயன்கழக நிதி, சமூக சேவை, தலைமைத்துவம், லியோ கழகத் தலைமை, இளைஞர் நலவாழ்வு ஆகிய உபகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று கழகச் செயலாளர் லயன் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஜ-117)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலி.மேற்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கும் விவசாயக் குழுக்கூட்டம் முற்பகல் 11 மணிக்கும் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் விவசாய முன்னேற்றங்கள் பற்றி ஆராயப்படவுள்ளன. சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களின் அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (10-175)

## எஸ்-லோன் நிறுவன அன்பளிப்பாக சாவகச்சேரியில் வீதிப்பெயர்கள்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 64 வீதிகளுக்கு பெயர்ப் பலகைகள் நடப்படவுள்ளன.

'எஸ்-லோன்' குழாய் நிறுவனத்தினர் இந்த வீதிப் பெயர்ப்பலகைகளையும் 'சாவகச்சேரி நகரம் வரவேற்கிறது' என்னும் பெயர்ப்பலகையையும் நகரசபையிடம் அன்பளிப்பாக கையளித்துள்ளனர்.

இதேவேளை, நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீதிகளுக்கும், பெயர்ப்பலகைகள் நடப்படவுள்ளன. யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு ஏற்கனவே இந்த நிறுவனத்தினரால் பெயர்ப்பலகைகள் நடப்பட்டன. (ஜ-117)

## பாடசாலைகளுக்கு சமையற்பாத்திரங்கள்

வடமராட்சி கிழக்கு,ஜூலை8

உலக உணவுத்திட்டத்தின் அனுசரணையுடன் மாணவர்களுக்கு சமைத்த உணவினை வழங்க வசதியாகப் பாடசாலைகளுக்கு சமையற் பாத்திரங்களை விநியோகிக்க 'நிக்கொட்' நிறுவனம் முன்வந்துள்ளது. இச்சமையல் பாத்திரங்களை வழங்குவதற்கு 'நிக்கொட்' நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் சமைத்த உணவினை தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையுள்ள மாணவர்களுக்கு வழங்கவுள்ள பாடசாலைகளில் மருதங்கேணி, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இந்த சமையல் பாத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. (ஜ-182)


**இந்தியப் பரம்பரை ஜோதிடர்**
**மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை**



ஸ்ரீ சோட்டாநிக்கரை, பகவதி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன் மீண்டும்

**P.T.R., சாமி** இரட்டையர்கள்

யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம்; நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப்பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

**ஸ்ரீ பாலாஜி விடுதி,**
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (கன்னாதிட்டிச் சந்தி அருகில்).
தொலை.பே. 222-2341
(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை).

(33885)
(26-14-34)



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



நல்லூர், சங்கிலியன் வீதியைச் சேர்ந்த
திரு. திருமதி கண்ணன் - சசிகலா
தம்பதிகளின் செல்வப்புதல்வன்

செல்வன்

**திரோக்**

தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (08-07-2004)வியாழக்கிழமை
டோகாவில் இருக்கும் தனது இல்லத்தில்
அன்பு அப்பா, அம்மாவுடன்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா மற்றும் அப்பப்பா,
அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, ராசன் பெரியப்பா, லலிப் பெரியம்மா,
சவுதி மாமா, கௌரி அத்தை, மச்சாள் ஜனுக்சி, சுவிஸ் சிறிமாமா,
றொபேக்கா அத்தை, மச்சான் மிதோஸ், ஜேர்மனி நித்தி மாமா,
கோமதி அத்தை, டோகா கமல் சித்தப்பா, தீபாச் சித்தி,
பிரியன் சித்தப்பா (டோகா), பிரான்ஸ் சதீஸ் மாமா மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நல்லூர்க்
கந்தன் அருள்பெற்று பல்கலையும் கற்றுப்
பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

61, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P. No: 222 2743

தகவல்:
சதீஸ் மாமா (பிரான்ஸ்)

(33768)(42-14)



# VACANCY
## (WALK IN INTERVIEW)

We need the right Person for the following Positions.

**1. Receptionst** - Female
Age:- 18-30 Years
Must be Fluent in English and Computer Literate.

**2. Security Guard**
Preferably with Prior experience.
Age:- 25-40

**3. Clerk** - Male
Be able to handle MS Word and Other Packages
Age:- 23-30

**4. Office Helper** - Male
Age:- 23-35

Time:- 3.00-5.00p.m.
Date:- 10.07.2004

***Please Produce All relevant Certificates and 2 testimonials from non-related referees.***

**London English College.**
No - 105 (71) Arasady Road, Jaffna. -
T.P No-021-222-5889,0777 252 180, 0776 303 539.
E-mail - lecjaffnabranch@yahoo.com


(33864)(34-14)



## அகவை அறுபதில் தடம் பதிக்கும்

தமிழ் குழந்தை உயர்திரு.நா.குழந்தைவேலு அவர்களுக்கு

**எமது வாழ்த்துக்கள்**



தமிழ் உலகில் புகழ்பூத்த மாமணியே உன் தமிழ் கண்டு
மெய் சிலிர்த்துப் போனதே இப்பூமி
அமிழ்தான தமிழுக்கு சுவை சேர்த்த குரல் வளத்தைக்
கொண்ட தமிழ்க் குழந்தை வேலா!
மகிழ்வோடு நடைபயின்று அகவை அறுபதையும்
புகழோடு மணம் பரப்பி தமிழ் பணி புரிந்தவரே!
முகிழ்ந்தெடுத்த முத்தாக தமிழ் சொத்தாக வையகத்தில்
வளத்துடன் வாழ வாழ்த்துகிறோம் வாழ்த்து!

- நண்பர் குழாம்.

(33860)(34-14)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவபாலன் நாமகள்**

திதி - அபரபக்க சப்தமி

நாமகளே! நடுவழியில் போனதேன்?
நாங்கள் காலமெல்லாம் கலங்குவதற்கா?
இறைவனடி சேர்ந்த எம் குல விளக்கே!
உங்கள் ஆத்மா சாந்தி பெற
எங்கள் குல தெய்வம் நுணுவில் பிள்ளையாரைப்
பிரார்த்திக்கின்றோம்

(33877)

தோற்றம் 22.10.1975

மறைவு 20.06.2003

"அம்பிகா டிஸ்பென்சறி"
சரசாலை வடக்கு.
சாவகச்சேரி

கணவன்,
பிள்ளைகள்
குடும்பத்தினர்.

# தலைவர் பதவியை என்றுமே நான் விரும்பியவன் அல்லன்

## சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு



சென்னை,ஜூலை8

இந்திய அணி தொடர்ந்து வெற்றிகளைக் குவிக்கவேண்டும். அணித்தலைவர் பதவியை எப்போதுமே நான் விரும்பியதில்லை என்று சென்னையில் நடைபெற்றுவரும் பயிற்சி முகாமில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகின்றன. இதற்கான இந்திய உத்தேச அணி வீரர்கள் சென்னையில் கடந்த சில நாள்களாகப் பயிற்சி செய்துவருகின்றனர். இந்த முகாம் இன்றுடன் முடிவடைகிறது. இந்நிலையில், பயிற்சிக்கு இடையே தனது துடுப்பாட்டம் பற்றியும் அணியைப் பற்றியும் மனம் திறந்து பேசியுள்ளார் சச்சின் டெண்டுல்கர்.

எனது துடுப்பாட்டப் பாணியை மாற்றவேண்டும். நீண்ட நேரம் நிலைத்து நின்று நிதானமாக விளையாட வேண்டும் என ரசிகர்கள் விரும்புகிறார்கள். என்னைப்போன்று அதிக துடுப்பாட்ட சராசரியும் ஆட்ட சராசரியும் உள்ளவர்கள் தங்களது வழக்கமான பாணியில் தொடர்ந்து விளையாடுவதுதான் சிறந்தது. மேலும் அணியின் வெற்றி ஒரு தனிப்பட்ட வீரரைச் சார்ந்தது அல்ல, 11 பேருடைய உழைப்பு அது. ஒரு சீனியர் என்ற முறையில் எனது பங்கு சற்று அதிகமாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

சச்சின் கடந்த சில ஆண்டுகளாகவே முதுகுவலியால் அவதிப்பட்டு வருகிறார். இவரைப் போலவே அணியில் சில வீரர்களும் காயத்தால் அணியில் தொடர்ந்து இடம்பெறமுடியாமல் தவிக்கின்றனர்.

முந்தைய அணிகளோடு ஒப்பிடும்போது தற்போதைய இந்திய அணி முழு உடல் தகுதியுடன் உள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே நாங்கள் அதிகமான ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறோம். இதனால் வரர்கள் நீண்ட பயணம் மேற்கொள்வது அவசியமாகிறது. இதனால் எங்களின் உடல்நிலையும் பாதிக்கப்படுகிறது. போதிய நாள்கள் இடைவெளி கிடைக்காதபோது, எங்களால் காயத்திலிருந்து உடனடியாக மீள முடியவில்லை. மேலும் சர்வதேச அரங்கில் ஒவ்வொருவரும் அதிக திறமையுடன் போராட வேண்டி இருக்கிறது. இதனால் உடல் ரீதியாகச் சில பிரச்சினைகள் ஏற்பட்டு விடுகின்றன.

அணித்தலைவர் பதவியைப்பற்றி இப்போது எண்ணிப் பார்க்கக்கூட நான் விரும்பவில்லை. எனது எண்ணமெல்லாம் கிரிக்கெட்டில் எனது பங்களிப்பைச் சிறப்பாகச்செய்ய வேண்டும் என்பதில் தான் இருக்கிறது. தலைவராக இருந்தபோதும் சரி, இப்போதும் சரி... அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று தான் விரும்புகிறேன். இந்திய அணி விளையாடும் போட்டிகளில் எல்லாம் வெற்றிபெற வேண்டும் என்பதுதான் எனது விருமபமும்கூட. நான் அடிக்கடி சொல்வது இது தான்... எனக்கு எப்போதுமே அணித்தலைவர் பதவிமேல் நாட்டம் இருந்தது இல்லை இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (10)

# 'தூஸ்ரா' பந்துவீச்சு முறைக்கு தீர்வுகாண முரளி நடவடிக்கை

லண்டன்,ஜூலை8

தனது 'தூஸ்ரா' பந்துவீச்சுத்தொடர்பான பரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார் இலங்கையின் சாதனை வீரர் முத்தையா முரளிதரன்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதி விக்கெட்டுக்கள (527) வீழ்த்தி சாதனை படைத்துள்ள முரளிதரனின், 'தூஸ்ரா' பந்துவீச்சு முறைக்கு ஐ.சி.சி. தடைவிதித்துள்ளது. இந்த முறையில் இவர் பந்துவீசும்போது கையை விதிமுறைகளுக்கு மீறி அதிகமாக சுழற்றுவதாக ஆஸ்திரேலிய தொடரின் போது புகார் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு பந்துவீசும் போது பந்தானது வலது கை துடுப்பாட்ட வீரர்கள் அடிக்கமுடியாதபடி அதி விரைவாக விலகிச் செல்லும்.

இந்தக்குறையை ஆய்வு செய்ய மேற்கு



ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் உள்ள உடல் அசைவு தொடர்பான மையத்திற்கு முரளிதரன் அனுப்பிவைக்கப்பட்டார். அங்கு இவரது பந்துவீச்சு முறை சோதனை செய்யப்பட்டது.

தற்போது லண்டனில் உள்ள முரளிதரன், இந்திய டாக்டர் ஒருவரின் உதவியுடன் தனது பிரசசினைக்குத் தீர்வுகாணமுயற்சி மேற்கொண்டு வருகின்றார். இவருக்கென 3 கம்பிகளை நைலோன் துணியில் இணைத்து ஒரு பட்டி தயார் செய்யப்பட்டுள்ளது. இதை இவர் முழங்கைப் பகுதியில் கட்டிப்பந்து வீசும் போது முழங்கை அசைவு பெரும்பாலும் நின்று விடுகிறது. இது பற்றி முரளிதரன் கூறுகையில், எனது முழங்கை பிறப்பிலேயே வளைந்து உள்ளது இதுதான் பிரச்சினைக்கு முக்கிய காரணம் என்று தெரிவிததுள்ளார். (10)

# 2007 உலகக் கிண்ணக் கிரிக்கெட் மேற்கிந்தியத்தீவின் 8 இடங்களில்

லண்டன்,ஜூலை8

2007 உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் மேற்கிந்தியத் தீவுகளின் 8 இடங்களில் நடக்க உள்ளது என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் அறிவித்துள்ளது.

போட்டிகள் பெப்ரவரி முதல் ஏப்ரல் வரை நடைபெறவுள்ளன. 9 ஆவது முறையாக நடைபெறும் இப்போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் முதல் முறையாக நடத்துகின்றது. 1975, 1979 ஆம் ஆண்டுகளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி உலகக் கிண்ணத்தை வென்றுள்ளது.

ஆண்டிகுவா, பார்படோஸ், ஜமேக்கா, செயின்ட கிட்ஸ், டெயின்ட் லூசியா, டிரினடாட் அண்ட் டொபாகோ, கிரனேடா, கயானா ஆகிய இடங்களில் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

பல ஆண்டுகளாகக் கிரிக்கெட்டில் மேற்கிந்தியத்தீவுகள் ஆதிக்கம் செலுத்தி உலகக் கிரிக்கெட் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளதுமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் 16 அணிகள் பங்கேற்கின்றன. 51 ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. எந்தெந்தப் போட்டிகள் எங்கெங்கு நடைபெறும் என்று எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் வாரியக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். (10)



இலங்கை வங்கி யாழ்.மேற்தரக்கிளையின் பாதுகாப்பு அதிகாரியாக அண்மையில் பதவி உயர்வுபெற்ற த.கருணாகரன் இலங்கை வங்கியின் மகரகம பயிற்சிக்கல்லூரியில் இடம்பெற்ற பதவி உயர்வு பெற்றவர்களுக்கான பயிற்சிப்பாசறையில் அதி சிறந்த விளையாட்டு வீரருக்கான விருதினை இலங்கை வங்கியின் பொதுமுகாமையாளர் பி.பளிகேனாவிடமிருந்து பெறுவதையும் அருகில் பாதுகாப்புப்பணிப்பாளர் கேணல் பி.ஜீ.யூ.பீரிஸ் நிற்பதையும் படத்தில் காணலாம். (10-190)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை8

யாழ்.அரசடி ஞானக்குழந்தை இல்லப் பாலர் பாடசாலையின் 12 ஆவது ஆண்டு பாலர் விளையாட்டு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இல்லப் பொறுப்பாசிரியர் திருமதி கேதாரபூரணி ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலையின் உப அதிபர் க.தியாகலிங்கமும் சிறப்புவிருந்தினராக சைவப்புலவர் இ.ஸ்ரீதரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (10)

★ ★ ★

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் கழகங்களுக்கிடையிலான ஹொக்கிச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

★மாலை 4மணி - கிறாஸ்கொப்பர் வி.க. எதிர் சென்றலைட்ஸ் வி.க.

★மாலை 5மணி - வடமராட்சி வி.க. எதிர் ஓல்ட்கோல்ட்ஸ் வி.க. (10)

★ ★ ★

யாழ்மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் பாடசாலைகளுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரை இறுதியாட்டங்கள் நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளன.

★பத்திரிசியார் கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி (பத்திரிசியார் கல்லூரி மைதானம்).

★யாழ்.மத்திய கல்லூரி எதிர் யாழ்.இந்துக் கல்லூரி (யாழ்.மத்தியகல்லூரி மைதானம்). (10-190)

★ ★ ★

யாழ்மாவட்ட உதைபந்தாட்ட லீக்கில் பதியப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

மாலை 4.15 மணி - கொய்யாத்தோட்டம் வி.க. எதிர் எவறஸ்ட் வி.க.

மாலை 5.15 மணிக்கு சென்மேரிஸ் வி.க. எதிர் சென்.அன்ரனிஸ் வி.க. (10-190)

## ஐரோப்பியக் கிண்ணத்தைச் சுவீகரித்த நாடுகள்

லண்டன்,ஜூலை8

உலகக்கிண்ணக் காறபந்துப் போட்டிகளுக்கு நிகராக நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெற்றுவரும் ஐரோப்பியக் கிண்ணக் காற பந்துப் போட்டிகளில் இதுவரை கிண்ணத்தை வென்ற நாடுகள் வருமாறு:-

சோவியத் யூனியன் (1960), ஸ்பெயின் (1964), இத்தாலி (1968), மேற்கு ஜேர்மனி (1972), செக்.குடியரசு (1976), மேற்கு ஜேர்மனி (1980), பிரான்ஸ் (1984), ஹொலண்ட் (1988), டென்மார்க் (1992), ஜேர்மனி (1996), பிரான்ஸ் (2000), கிறீஸ் (2004). (10)

# முரளியின் சாதனையை முறியடிப்பது இலகுவானதொரு விடயமல்ல

## ஷேன்வோர்ன் தெரிவிப்பு



சிட்னி,ஜூலை8

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பந்து வீச்சில் உலகசாதனை படைத்துள்ள முத்தையா முரளிதரனின் சாதனையை முறியடிப்பது சந்தேகமே என்று ஆஸ்திரேலியாவின் ஷேன்வோர்ன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஷேன்வோர்ன் மூன்று விக்கெட்டுக்களை எடுத்தார். இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் எதுவும் எடுக்கவில்லை.

முரளிதரன் 527 விக்கெட்டுக்களை வீழ்த்திச் சாதனை படைத்துள்ளார். முன்னதாக 517 விக்கெட்டுக்களோடு இருந்த ஷேன்வோர்ன் முதல் டெஸ்ட் போட்டியில் வீழ்த்திய 3 விக்கெட்டுக்களையும் சேர்த்து 520 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். முரளிதரனின் சாதனையை முறியடிக்க இன்னும் 8 விக்கெட்டுக்களை அவர் வீழ்த்த வேண்டும்.

ஆனால், 8 விக்கெட்டுக்களை இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வீழ்த்துவது சந்தேகமே என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டித் தொடரில் இலங்கை அணியில் முரளிதரன் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# விளையாட்டு

# இளவரசர் வில்லியம்ஸ் எனது நண்பர் - காரலோவின்

லண்டன்,ஜூலை8

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸிற்காகத்தான் காத்திருப்பதாக டெனிஸ் நட்சத்திரமான பிரான்ஸ் நாடடைச் சேர்ந்த தாதியானா காலோவின் தெரிவித்துள்ளார்.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் டெனிஸ் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்ட இவரிடம் செய்தியாளர்கள் உங்களுக்கு நண்பர்கள் எவரும் இல்லையா? என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

16 வயதான இவர் மீது தான் விம்பிள்டன் டெனிஸ் போட்டிகளைக் கண்டு ரசித்தவர்கள் அனைவரினதும் பார்வை விழுந்தது.





மூன்று சுற்றுக்குத் தெரிவான இவர், நான்காவது சுற்றில் அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஷிடம் தோற்று மேற்படி சுற்றுப்போட்டியிலிருந்து வெளியேறினார்.

இந்த பிரான்ஸ் நாட்டு டெனிஸ் நட்சத்திரத்திடம் இளவரசர் வில்லியம்ஸ் மாட்டிக் கொள்வாரா? (10)

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28 ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட 'நாச்சிமா சோலைக்காடு' அல்லது 'சோலை' என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும். K.சிவராஜா, 'ராஜவாசா' 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இலக்கம் 021-222-3408, 2574199. (33735)

தரமான நம்பர்-1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றாஜீவ, ஆனைக்கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867, P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (33761)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 20 வயது, சித்திரை 2ஆம் பாதம், 2இல் செவ்வாய் O/L வரை படித்த சைவபோசன அழகிய மணமகளுக்கு சைவ மணமகன் தேவை. தொடர்பு விளம்பர இல. 2322, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (33884)

### தவறிவிட்டது

சின்னையா மயூரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (832873845V) 02.07.2004 வெள்ளிக்கிழமை அன்று நெல்லியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இ.திருக்குமரன், நெல்லண்டை வீதி, பருத்தித்துறை என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். T.P. 071 - 7802375. (33886)

# கிரிமினல் குற்றங்களுடன் தொடர்புடைய பொலீஸாருக்கும் பதவி உயர்வுகளாம்

கொழும்பு,ஜூலை7

பல்வேறு கிரிமினல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பொலீஸாருக்கும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. கொள்ளை, வழிப்பறி, போதைப்பொருள் கடத்தல், பாலியல் வல்லுறவு போன்ற குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்களும் பதவி உயர்வைப் பெற்றுள்ளனர்.

நீதிமன்றங்களால் ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கும் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கும் கூட பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் பொலீஸ் திணைக்களத்தில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகளின்போதே இம மாதிரியான குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

இது நேர்மையான பொலீஸ் அதிகாரிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திறமையான அதிகாரிகள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர் என்று குறை கூறப்படுகின்றது இதனால் பாதிக்கப்பட்ட பொலீஸ் அதிகாரிகள் நியாயம் கோரி உயர்நீதிமன்றம் செல்லத் தீர்மானித்துவிட்டனர்.

அண்மையில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் பொலீஸ்மா அதிபரால் சிபாரிசு செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் அமையவில்லையாம். பொலீஸ் ஆணைக்குழுத தலைவரால் ஜனாதிபதியின் தலையீட்டின் பேரில் தயாரிக்கப்பட்ட பட்டியலின் படியே பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

பதவி உயர்வு பெற்றவர்களுள் பலர் கிரிமினல் நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்தவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள். இத்தகைய கிரிமினல்கள் தொடர்பாக ஆதாரத்துடன் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோதும் பதவி உயர்வு விடயத்தில் அவை உதாசீனப்படுத்தப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

330 பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் தலைமை பொலீஸ் இன்ஸ்பெக்டர்களாகவும், 130 தலைமை பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்களாகவும் பதவி உயர்வைப் பெற்றுள்ளனர்.

இவர்களுள் பத்துப்பேர் நேரடியாகவே குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள். குறிப்பாக இன்ஸ்பெக்டர் அஜித் தேவப்பிரிய சமரக்கோன் என்பவர் அழகு ராணியாகத் தெரிவு செய்யப்பட்ட ஓர் இளம் பெண்ணைக் கொலை செய்தார் என்பதற்காக அவருக்கு நீதிமன்றம் ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்துள்ளது. இந்த நபரும் தலைமையகப்பொலீஸ் இன்ஸ்பெக்டராக பதவி உயர்வு பெற்றுள்ளார் என பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கப் பேச்சாளர் ஒருவர் குற்றம் சுமத்துகின்றார்.

கலவர காலங்களின்போது பெருந்தொகையான தமிழர்களைக் கொன்று, அவர்களின் சடலங்களை பொல்கொட வாவியில் போட்டவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் விஷேட அதிரடிப்படை வீரர்களுக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்கும் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் ஏற்கனவே நாட்டைவிட்டுத் தப்பி ஓடிவிட்டார் எனவும் தெரியவந்துள்ளது.

பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள மற்றுமொரு இன்ஸ்பெக்டர் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு உதவி வழங்கி வந்தார் என்பதோடு இவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இருப்பவர் எனக் கூறப்படுகின்றது.

இப்படியானவர்களுக்குத்தான் இம்முறை பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்று குறை கூறப்படுகின்றது.

இந்தப்பதவி உயர்வுகள் முற்றிலும் அநீதியானவை என பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சங்கத்தலைவர் டீல் குணரட்ண கருத்துத் தெரிவித்துள்ளார்.

(க)

# அரச காணிகளைப் பெறுவது எப்படி?

**அரச காணிகளைப் பயன்பாட்டுக்காகப் பெற்றுக்கொள்வது எப்படி என்பது தொடர்பான விளக்கங்களைத் தொகுத் துத் தருகிறார் வடக்கு - கிழக்கு மாகாண செயலாளரும், முன்னாள் காணி, மாகாண காணி ஆணையாளருமாகிய சொ. அமிர்தலிங்கம். பொதுமக்களுக்குப் பயன்படக் கூடிய அவரது கட்டுரையின் முதற்பகுதி இது.**

அரச காணிகளைப் பெறுவது எப்படி எனப் பலருக்கும் தெரியாது. எனவே, இது சம்பந்தமாக சகலரும் அறியும் பொருட்டு இக்கட்டுரை வரையப்பட்டது.

அரச காணிகளைப் பெற காணி அபிவிருததிச்சட்டம் சம்பந்தமாக விளக்கம் தேவை. இச சட்டம்தான் உழவர் வகுப்பினருக்கு அரச காணியை பகிர்ந்தளிக்கவும் உரிமை வழங்கவும் வழிவகுத்துள்ளது.

காணி அபிவிருத்திச் சட்டம் 1935ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுவதற்கு முன்னோடியாக 1929ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட காணி ஆணைக்குழுவின் சிபார்சுகள் காரணமாக இருந்துள்ளன. இக்குழுவானது செய்த சிபார்சின் அடிப்படையில் கீழ்க்காணும் முக்கிய நோக்கத்தை அடைவதற்காக 1935ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, காணி அபிவிருத்திச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. அதன் நோக்கங்கள் ஆவன, 1935ஆம் ஆண்டு காலம்வரை அபிவிருத்திக்குள்ளாக்கப்படாத அரச காணிகளை ஒரு திட்டமிட்ட அடிப படையில் மேம்படுத்துவதற்கான முறையினை உருவாக்குதல், சனச்செறிவு கூடிய பிரதேச மக்களினது காணித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான புதிய குடியேற்றத் திட்டங்களை உருவாக்குதல், காணி பயன்பாட்டுத் திட்டமொன்றை அமுல்படுத்தல், காணி பகிர்ந்தளிப்பதில் ஒழுங்கு முறையைப் பேணுதல், வறிய மக்களின் காணியில்லாப் பிரச்சினையை தீர்த்தலும், சிறுநிலப்பரப்பிற்கு உரித்துள்ள மக்களது உரிமையைப் பாதுகாத்தலும் ஆகும.

### சட்டத்திருத்தம்

காணி அபிவிருத்திச் சட்டமானது காலத்திற்குக்காலம் தேவையின் நிமித்தம் திருத்தங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இவற்றுள் 1969ஆம் ஆண்டு 16ஆம் இலக்க திருத்தச் சட்டமும், அதன்பின் 1981ஆம் ஆண்டு 27ஆம் இலக்க திருத்தச்சட்டமும் குறிப்பிடக்கூடியதும் தற்போதைய சூழலில் முக்கிய கவனத்திற்கு உரியதுமாகும்.

காணி அபிவிருத்திச் சட்டத்தில் காணி பெறுவதற்கான நபர்களை தெரிவு செய்தல், காணி உரிமைகள் மாற்றம், காணி உரிமை கையளித்தல், காணிகளை உபபிரிவுகளாகப் பிரித்தல், காணி உரிமைப்பத்திரத்தை இரத்துச செய்யும் நடைமுறைகள் என்பன அடங்குகின்றன. காணி பகிர்ந்தளிப்பானது ஒருநபருக்கு வேண்டிய உரிமைப்பத்திரத்தை வழங்குவது மூலமும் அதைத் தொடர்ந்து வழங்கப்படுகின்ற காணிக்கொடை (ஜெயபூமி ஒப்பு) மூலமும் நடைபெறுகின்றது. காணி அபிவிருத்திச் சட்டத்தின் 19ஆவது பிரிவின் 03ஆம் உபபிரிவின்படி கீழ்க்காணும் நடைமுறைகள் உத்தரவுப்பத்திரம் வழங்குதல் தொடர்பாக அனுசரிக்கப்படல வேண்டும். காணியை நில அளவை செய்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு விஸ்தீரணம் குறிக்கப்படுதல் வேண்டும். விற்பனை விலையை நிர்ணயித்து அதற்குரிய பணத்தை வருடாந்தக் கொடுப்பனவு மூலம் அறவிடுதல். இந்நடைமுறையானது 1981ஆம் ஆண்டின் பின்னர் பெரிய நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ், மத்திய வகுப்பினருக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு மாத்திரம் பொருத்தமானதாகும். வழங்கப்படுகின்ற உத்தரவுப்பத்திரத்தில் காணி பயன்பாட்டுமுறை, அபிவிருத்தி என்பன குறிப்பிடப்படல் வேண்டும். காணியின் விற்பனை விலை முழுமையாகக் கொடுக்கப்பட்டதன் பினனர் உத்தரவுப்பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றப்பட்டதன் பேரில் அக்காணிக்கான காணிக்கொடை (ஜெயபூமி ஒப்பு) வழங்கப்படலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் உத்தரவுப்பத்திர உரிமையாளர் காணியை அபிவிருத்தி செய்துள்ளார் என்பதுடன், அதில் வசித்துள்ளார் என்பதையிட்டும் பிரதேச செயலாளரை திருப்திப்படுத்த வேண்டும். காணிக்கொடை வழங்குவதற்கு முன்னோடியாக கீழ்க்காணும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை திருப்திப்படுத்துதல் வேண்டும். அக்காணி நீர்ப்பாசனக் காணியாக இருக்குமிடத்து தொடர்ந்து மூன்று வருடங்கள் பயிர்செய்யவேண்டும். அக்காணி மேட்டுக்காணியாக இருக்குமிடத்து உத்தரவுப் பத்திரகாரர் இக்காணியில் ஒரு வருடத்திற்கு மேலாக வசித்துவருதல் வேண்டும்.

**சொ.அமிர்தலிங்கம்**

வழங்கப்படுகின்ற ஒவ்வொரு காணிக்கொடையும் அக்காணியானது உபபிரிவுகளாக அல்லது துண்டாடப்படக் கூடிய அலகு விகிதம் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

இதற்கு மாறாக காணிக்கொடைக்குப் பொறுபபானவர் காணிகளை துண்டாடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் காணிகளை வழங்கும்போது அததகைய நடவடிக்கையானது சுவாத்தியத்திலும், மழைவீழ்ச்சியிலும் வேறுபாடுகள் ஏற்படுவதைத தவிர்த்துக்கொள்வதற்கும் சுற்றாடல் பாதுகாப்பு, வனவிலங்கு பாதுகாப்பு போன்றவற்றுக்கு வேண்டிய அளவு காணிகளை ஒதுக்கி வைப்பதற்கும அமையவேண்டும். அதேபோன்று நீர்த்தேக்கங்களை போசிக்கும் பிரதேசங்களில் 1500 மீற்றர் சமஉயரக்கோட்டுக்கு மேற்பட்ட பிரதேசங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக எடுத்துக் கொள்ளக்கூடாது. அதேபோன்று நீர்வழிகள், கால்வாய்கள், ஓடைகள், ஆறுகள் முதலியவற்றுக்கும் பாதைகளுக்கும் உரிய காணிகளை ஒதுக்கவேண்டிய அதேவேளையில் 30 பாகைக்கு மேல் சரிவான பிரதேசங்களையும், மண்ணரிப்பைத் தடுப்பதற்குரிய பிரதேசங்களையும் தேர்நதெடுக்கக்கூடாது. இதற்கிணங்க கீழ்க்காணும் காணிகள் பகிர்ந்தளிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப்படல் வேண்டும்.

நீர்ப்பாதைகளுக்கும், வாய்க்கால்களுக்கும் ஒடைகளுக்கும், ஆறுகளுக்குமான ஒதுக்கம், நீர்ப்பாசனத்திற்கும், குளங்களுக்குமான ஒதுக்கம், நீர்த்தேக்கங்களைப் போசிக்கும் பகுதிகள், காட்டு ஒதுக்கங்கள், 30 பாகைக்கு மேல சரிவான காணிகள், கடல் மட்டத்திலிருந்து 5000 அடிகளுக்கு மேல் அமைந்துள்ள காணிகள், செழிப்பில்லாத மண்ணைக் கொண்ட காணிகள்,அதிக கற்பாறைகளைக் கொண்ட காணிகள், பாதைகளுக்கான ஒதுக்கங்கள், கடற்கரையோரப்பகுதிகளுக்கான ஒதுக்கம் என்பன ஒதுக்கிவைக்கப்படல் வேண்டும். பகிர்நதளிக்கும் உகந்த காணிகளாக, செழிப்பான மண்ணையுடைய காணிகள், நீர்வசதிகளை உடைய இடங்களுக்கு அடுத்துள்ள காணிகள், 30 பாகைக்கு குறைவான சரிவுகளைக் கொண்ட காணிகள் சமவெளியான இடங்களும், பள்ளத்தாக்குகளும், நகர்ப்பிரதேசங்களில் வர்த்தகம், வீடமைப்பு முதலிய நோக்கங்களுக்கு உகந்த இடங்களும், நகர, ஓரளவு நகரப் பிரதேசங்களில கைத்தொழில் நோக்கங்களுக்கு உகந்த இடங்களும் பகிர்ந்தளிக்கக்கூடிய காணிகளாகும்.

### காணிக்கச்சேரி

காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அரச காணிகளை பகிர்ந்தளிப்பது பகிரங்க காணிக்கச்சேரி மூலம் செய்யப்படுதல் வேண்டும். காணியை பகிர்ந்தளிப்பதற்கான அனுமதியை பிரதேச செயலாளர்கள் மாகாண காணி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு அனுமதி பெறப்பட்டதன் பின்னர் பிரதேச செயலாளரினால் அல்லது மாகாண காணி ஆணையாளரினால் உரியபடி அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களே காணிக்கச்சேரியை நடத்த முடியும். காணிக்கச்சேரியை நடத்துவதற்கான அனுமதியைப் பெறுவதற்காகச் செய்யப்படும் விண்ணப்பத்தில் காணி அமைந்துள்ள இடம், பகிர்ந்தளிக்கப்படுவதன் நோக்கம், காணி பகிர்ந்தளிக்கப்படும் வகுப்பு, பகிர்ந்தளிக்கும் அலகு காணிக்கச்சேரி நடத்தப்பட உள்ள இடம் திகதி ஆகியன குறிப்பிடப்படவேண்டும். காணிகச்சேரிக்கான அறிவித்தல் பிரசித்தப்படுத்தப்பட்டு கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் காணி ஆணையாளரின் படிவம் 105இல் அட்டவணைபடுத்த வேண்டும். இவ்வாறு அட்டவணைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான முழு விவரங்களையும் கிராமசேவையாளருக்கு அனுப்பி சரிபார்த்து காணிகச்சேரி நடைபெறுவதற்குரிய திகதிக்கு முன்னர் முடிவுறுத்தல் வேண்டும். காணி பயன்பாட்டுக்குழு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி சுற்றுநிருப இலக்கம் 01/335 இல் காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினால் தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பீட்ட ஒரு காணித்துண்டானது விண்ணப்பதாரர் ஒருவருக்கு நன்மையைக் கொடுக்குமெனவும், அக்காணியை காணிக்கச்சேரி இன்றி பகிர்ந்தளிப்பது குறிப்பிட்ட காணிக்கு பங்கம் ஏற்படாது எனவும் காணி ஆணையாளர் கருதும் பட்சத்தில் அக்காணியை பகிர்ந்தளிப்பதற்கு சட்டத்தின் 20(அ) பிரிவின் கீழ் அனுமதி வழங்கலாம். எனினும் 8 ஏக்கருக்கு மேற்பட்ட காணித்துண்டு இவ்வுபபிரிவின் கீழ் வழங்குதல் முடியாது. இந்த அதிகாரமானது மாகாண காணி ஆணையாளருக்குத் தற்போது கையளிக்கப்பட்டுள்ளது. இதைக் காணி அபிவிருத்திச் சட்டத்தின் 20 (ஏ) பிரிவின் கீழ் காணிகளை பகிர்ந்தளித்தல் எனலாம்.

### பின்னுரித்தாளர்

அனுமதிப்பத்திரகாரர் அல்லது அளிப்பிற்கு உரித்துடைய ஒருவர் தனது பின்னுரித்தாளியாக தனது வாழ்க்கைத்துணையை நியமிக்காது இறக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது வாழ்க்கைத்துணை காணிக்கான உரிமையைக கோரத்தவறும் பட்சத்தில் அல்லது அவரது வாழ்க்கைத்துணை அவர் இறப்பதற்கு முன் இறந்துவிட்டால் பின்னுரிமை யாருக்கு சென்றடையும் என்பதை நிர்ணயித்தல் அடுத்துறுதல் எனப்படும். உத்தரவுப் பத்திரதாரர் தனது வாழ்க்கைத்துணையை அல்லது 3ஆவது அட்டவணையில் குறிப்பிட்ட ஒருவர் தவிர்ந்த வேறு எவரையும் பின்னுரித்தாளியாக நியமிக்க முடியாது. காணி உத்தரவுப்பத்திரத்திற்கு அல்லது காணிக்கொடைக்கு உரித்தான ஒருவர் திருமணமாகாதவராய் இருக்கும்பொழுது பின்னுரித்தாளி ஒருவரை நியமித்திருந்தால் அவ்வுரிமைக்காரர் திருமணம் செய்ததும் பின்னுரித்தாளி தமது பின்னுரிமையை இழக்கின்றார். காணியின் விஸ்தீரணத்தைக் கருத்தில் கொண்டு உபபிரிவுகள் பிரிப்பதற்குள்ள நிபந்தனைகளை மீறாமலும் ஒன்றுக்கு மேற்பட்ட பின்னுரித்தாளிகளை நியமிக்கமுடியும். காணியின் ஒரு பகுதிக்கு அல்லது துண்டுக்கென பின்னுரித்தாளிகளை நியமிக்க முடியாது. நிபந்தனைகளின் அடிப்படையில் பின்னுரித்தாளிகளை நியமிக்க முடியாது. உரிமைக்காரரினால் நியமிக்கப்பட்ட எந்தப் பின்னுரிமையும் உரிமைக்காரரினால் எந்த நேரத்திலும் இரத்துச் செய்யப்படலாம். இரத்துச்செய்யப்பட்ட பின்னுரிமைக்குப் பதிலாக புதிய பின்னுரிமையை நியமிக்கலாம். ஏற்கனவே இரத்துச் செய்யப்பட்ட பின்னுரிமைக்காரர் மீண்டும் நியமிக்கப்படலாம். பின்னுரிமை நியமனம் அல்லது இரத்துச் செய்தல் உரிமைக்காரரின் வாழும் காலத்திலேயே பதிவு செய்யப்படுதல் வேண்டும். அவர் இறந்த பின் செய்யப்படும் எந்தப்பதிவும் சட்டபூர்வமாகாது. பின்னுரித்தாளர் ஒருவரை நியமிப்பது இரத்துச் செய்தல் அதற்குரிய படிவத்தில் 03 பிரதிகளில் செய்யப்படல் வேண்டும். உத்தரவுப்பத்திரமானது காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படாதிருக்குமாயிருந்தால் பின்னுரித்தாளியின் நியமனமோ இரத்துச் செய்தலோ உத்தரவுப் பத்திரகாரரது எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அதற்குரிய குறிப்புக்களை உத்தரவுப்பத்திரத்தில் இரு பிரதிகளிலும் செய்வதுடன் காணிப் பேரேட்டிலும் செய்து அத்தாட்சிப்படுத்தல் வேண்டும். பின்னுரித்தாளி ஒருவர் இறக்கும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நியமனமானது அவரது மரணத்தின் பின் செல்லுபடியாகாது. ஏற்கனவே உள்ள ஒரு பின்னுரித்தாளர் நியமனத்தை இரத்துச் செய்யாமல் புதிய ஒருவரை பின்னுரித்தாளியாக நியமிக்க முடியாது. எனினும் நியமனத்தை இரத்துச் செய்வதும், புதிய நியமனம் ஒன்றைச் செய்வதும் ஒரே ஆவணத்தின் மூலமே செய்யப்படலாம். காணியின் பின்னுரிமை நியமனம் அல்லது இரத்துச் செய்தல் மரணசாசனத்தின் மூலமும் செய்யப்படலாம். எனினும், இத்தகைய மரணசாசனத்தின் மூலமான நியமனமோ, இரத்துச் செய்தலோ உரிமைக்காரர் இறந்த திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். இல்லாவிடில் இது செல்லுபடியாகாது. வாழ்க்கைத்துணை ஒருவர் பின்னுரித்தாளியாக நியமிக்கப்பட்டிருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன உத்தரவுப்பத்திர உரிமைக்காரர் இறந்ததன் பின் அக்காணிக்காக உரிமை கோரமுடியும். எனினும், இத்தகைய வாழ்க்கைத்துணை பின்னுரித்தாளியாக நியமிக்கப்படாத பட்சத்தில் அவர் அக்காணிக்கான சீவிய உரித்துடையவராவார். இத்தகைய வாழ்க்கைத்துணை மீண்டும் திருமணம் செய்பவராயின் அவர் தனக்குரிய சீவிய உரித்தை இழப்பதுடன் இக்காணிக்காக கீழ்க்காணும் ஒருவர் உரித்துடையவராவார். இறந்த உத்தரவுப்பத்திரதாரரினால் நியமிக்கப்பட்ட பின்னுரிமையாளர், பின்னுரிமையாளர் ஒருவரும் நியமிக்கப்படாதிருந்தால் காணி அபிவிருத்திச் சட்டத்தின் 03ஆம் அட்டவணையில் குறிப்பிட்ட ஒருவர் எனினும் வாழ்க்கைத்துணை பின்னுரிமையாளராக நியமிக்கப்பட்டிருப்பின் மேலேயுள்ள பிரிவு ஏற்புடையதாகாது. சீவிய உரித்தை அனுபவிக்கின்ற ஒரு வாழ்க்கைத்துணை பின்னுரித்தாளி ஒருவரை நியமிக்கவோ அல்லது அக்காணியை ஏதாவது முறையில் கைமாற்றவோ இயலாது. சீவிய உரித்துக்கு உரித்தான வாழ்க்கைத்துணை ஒருவர் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கமைய காணிக்கொடை ஒன்றை பெறுவதற்கு அருகதையுடையவராவார். காணியைக் கைமாற்ற அதிகாரம் இல்லை. (வரும்)



# கணினி வைரஸ்கள்... கவனம்...!

கணனி வைரஸ்கள் இன்றைய கணனி உலகத்தில் மிகப் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. இன்றைய இணையப் பாவனையின் வளர்ச்சியும் இவ்வைரஸ்களை மிக வேகமாக உலகின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவுவதற்கு வழிசெய்துள்ளது.

உங்கள் கணனிக்கு வரும் வைரஸ்கள் உங்களுக்கு தெரியாது ஏராளமான செயல்களைச் செய்யும்.

உங்கள் கணனி இணைய இணைப்பில் இருப்பின் கட்டாயம் நீங்கள் ஒரு வைரஸ்ஸினைக் கண்டுபிடிக்கக்கூடிய நிகழ்வு ஒன்றினை வைத்திருத்தல் அவசியம் அத்துடன் வைரஸ் நிகழ்வு உள்ளது தானே என்றும் அலட்சியமாகவும் இருந்துவிடாதீர்கள். அவைகளையும் தாண்டி வைரஸ்கள் வரக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. அத்துடன் வைரஸ் நிகழ்வினை அடிக்கடி up date செய்யுங்கள். பொதுவாக நீங்கள் வைரஸ் நிகழ்வு ஒன்றினை வாங்கினால் சுமார் ஒருவருடத்திற்கு இலவசமாக அவர்களின் தளங்களில் இருந்து up date செய்ய முடியும்.

அடுத்து உங்களுக்கு தெரியாதவர்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் மின்னஞ்சல் தொடர்பாகவும் அவதானமாக இருங்கள். உங்களிடம் வைரஸ்களைக் கண்டுபிடிப்பதற்கான நிகழ்வு இல்லாவிடின் அவற்றினைக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமம் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள். ஒவ்வொரு முறையும் புதிது புதிதாக வந்து கொண்டிருக்கும் வைரஸின் தாக்கம் மிக மோசமானதாக உள்ளது. சில வைரஸ்கள் உங்கள் கணனிக்கு வந்து தங்கி விவரங்களை சேகரித்து வெளியே அனுப்பிக்கொண்டிருக்கும்.

அதேபோல் சில வைரஸ்கள் உங்கள் கணனிக்கு வந்து தூங்கிவிடும். குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியின் பின் அவை தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளைச் செய்யத் தொடங்கும். ஆதலால் கணனியில் வைரஸினால் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைக்கவும், வைரஸ் வருவதனால் ஏற்படும் இழப்புக்களைத் தவிர்க்கவும் வைரஸிற்காக எதிர்ப்பு நிகழ்வு ஒன்றினை கட்டாயம் போட்டு வையுங்கள். ✧

# தவளையைப் பிரசவித்த பெண்?

ஈரானில் பெண் ஒருவர் தவளையை ஈன்றுள்ளார் என்று ஈரானிய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானின் தென்பகுதி நகரான ஈரான் ஷஹ்றில இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வு எப்படிச் சாத்தியமானது எனத் தெரியவில்லை. ஆனால், மேற்படி தவளை மனித இயல்புகளை ஒத்திருப்பதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். குறித்த பெண், இரு குழந்தைகளுக்குத் தாயாராம்.

அழுக்கான குளமொன்றில் நீந்தும் போது தவறுதலாக பெண்ணின் பிறப்புறுப்பின் உள்ளே சென்ற 'வாற்பேத்தை' அங்கு வளர்ச்சியடைந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. மருத்துவ உயிரியல் நிபுணரான டாக்டர் அமினி பாக்ட் இது தொடர்பாக கூறுகையில், விரல்களின வடிவம், நாக்கின் அளவு, வடிவம் என்பவற்றில் மனித இயல்பை இத்தவளை ஒத்திருப்பதாக தெரிவித்துள்ளார். ✺


# சனிக்கிரகத்தின் துணைக்கோளில் உயிர்வாழ முடியுமா?

சனிக் கிரகத்தின் துணைக்கோளான டைட்டனில் மெதேன் புகார்கள் காணப்படுகின்றன என்று ஆகப் பிந்திய தகவல்கள் கூறுகின்றன.

'காசினி - ஹியூஜென்ஸ்' எனும் விண்கலம் (Cassini - Huygens) அனுப்பிய புகைப்படங்கள் விஞ்ஞானிகளை இந்த அனுமானத்துக்கு இட்டுச் சென்றுள்ளன.

### காசினி விண்கலம்

'காசினி' விண்கலம் 1997 ஆம் ஆண்டு புளொரிடா மாநிலத்தின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்டது. காசினி விண்கலத்தை நாஸா, ஐரோப்பிய விண்வெளி முகவரகம் மற்றும் இத்தாலி விண்வெளி முகவரகம் ஆகியன இணைந்து நிர்மாணித்தன. இதற்கென 30 ஆயிரம் கோடி ரூபா செலவிடப்பட்டது. காசினி விண்கலம், கடந்த ஏழு ஆண்டுகள் இடைவிடாது பயணஞ்செய்து - 200 கோடி




*1) பூமியுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கான 'அன்ரெனா' உள்ள பகுதி.*

*2) காந்தப்புலத்தை அளவிடும் கருவி உள்ள பகுதி.*

*3) இரண்டு கமராக்கள் உள்ளன. இவை 300 ஆயிரத்துக்கும் அதிகமான படங்களை எடுக்கவல்லன.*

*4) சனிக்கிரக வளையத்தின் வெப்ப நிலையை அளவிட்டு தொகுத்து - பகுப்பாய்வு செய்து கொள்ளுகின்ற கீழ்ச்சிவப்பு ஸ்பெக்ரோ மீற்றர்.*

*5) றேடியோ சமதானிகளை கொண்ட வெப்ப மின்னியல் ஜெனரேட்டர்கள-இவை 750 வாற்று மின்னை உற்பத்தி செய்யக் கூடியவை.*

*6) காசினி விண்கலத்துக்கு இரண்டு 'எஞ்சின்கள்' உண்டு. ஒன்று மேலதிகமானது.*

*7) விண்கலத்தின் திசையில் அல்லது வேகத்தில் சிறிய மாற்றங்களை ஏற்படுத்த உதவும் கருவி.*

*8) டைட்டனில் தரையிறங்கவுள்ள 'ஹியூஜென்ஸ்' ஆய்வுக்கலம்.*

*9) ஏற்றம்பெற்ற துணிக்கைகளையும் சூரியச் சுழல்களையும் அளவிடும் பிளாஸ்மா ஸ்பெக்றோ மீற்றர்.*

**மொத்த நிறை 5600 கி.கி**
**உயரம் 6 மீற்றர்**

மைல்கள் தூரத்தைக் கடந்து - அண்மையில் சனிக்கிரகத்தின் சுற்றுப்பாதையை அடைந்துள்ளது. கண்ணை மூடித்திறக்கும் நேரத்துக்குள் 'காசினி' 3 மைல் தூரம் சென்றுவிடும்.

இதுவரை விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரியதும் மிகச்சிக்கலானதுமான ஆய்வு நடவடிக்கை இதுவெனக் கூறப்பட்டது.

'காசினி' என்பது 1625 ஆம் ஆண்டில் பிறந்த இத்தாலிய வானியல் அறிஞரின் பெயராகும். இவர், பாரிய தொலைக்காட்டிகள் மூலம் சனிக் கிரகத்தின் லபேட்டஸ், றீயா, டெத்தஸ், டியோன் ஆகிய துணைக் கோள்களைக் கண்டுபிடித்தார்.

'ஹியுஜென்ஸ்' என்பது 1629 ஆம் ஆண்டில் பிறந்த ஒல்லாந்தைச் சேர்ந்த கிறிஸ்டியன் ஹியூஜென்ஸின் பெயராகும். இவரே டைட்டனைக் கண்டுபிடித்தார். அத்துடன் சனிக்கிரகத்தின் வளையங்களையும் இவர் கண்டறிந்தார்

### சனிக்கிரகம்

சனிக்கிரகம், சூரியனிலிருந்து 6 ஆவதாக அமைந்துள்ளது. வியாழனுக்கு அடுத்ததாக மிகப் பெரிய கிரகம் இதுவாகும். 120 ஆயிரத்து 536 கிலோமீற்றர் விட்டமுடையது. சூரியனிலிருந்து 142 கோடி கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. சனிக்கிரகத்தின் மையப் பகுதி உலோகப் பாறைகளால் ஆனது. அதனுள் திரவ நிலையில் உலோக நைதரசனும் வளிமண்டலத்தில் ஐதரசன், ஹீலியம் ஆகியவையும் உள்ளன எனக் கருதப்படுகிறது.

சனிக்கிரகத்தைச் சூழ பாரிய - தெளிவான - வளையங்கள் காணப்படுகின்றன. இந்த ஏழு வளையங்களும் 'ஏ' முதல் 'ஜீ' வரை பெயரிடப்பட்டுள்ளன. இவை அனைத்துமே சுமார் 100 மீற்றருக்கும் குறைவான தடிப்பைக் கொண்டவை.

சனிக்கிரகத்துக்கே அதிக துணைக்கோள்கள் உண்டு. டைட்டன் உட்பட 31 துணைக் கோள்களும் வளையங்களுக்கு உட்புறமாகக் காணப்படுகின்றன.

### முந்தைய முயற்சிகள்

சனிக்கிரகத்தை ஆராய்வதற்காக இதற்கு முன்னர் பயனீர் - 1, பயனீர் - 2, வொயேஜர் - 1 ஆகிய விண்கலங்களை அமெரிக்கா அனுப்பியிருந்தது. அவை சனிக்கிரகத்தை நெருங்கி ஆய்வு நடத்தின. 'காசினி' விண்கலம் சனிக்கிரக வளையங்களை ஊடுருவி ஆய்வு நடத்தவுள்ளது.

## சுடரும் விஞ்ஞானம்

**ராஜபுத்திரன்**

சனிக்கிரகத்தின் மிகப்பெரிய துணைக் கோளான டைட்டனின் பனிக்கட்டியாக உறைந்த மேற்பரப்பின் படமொன்றை முதன்முதலாக 'காசினி' விண்கலம் அனுப்பியுள்ளது. ஆனால், காசினி விண்கலம், அங்கு நீர் இருப்பதற்கான எந்த சான்றுகளையும் படம்பிடிக்கவில்லை. இதனால் விஞ்ஞானிகள் குழப்பமடைந்துள்ளார்கள்.

### டைட்டனில் முகில் கூட்டம்

'காசினி'யின் ஆகப்பிந்திய படங்களின் மூலம் அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தின் அளவுடைய முகிற் கூட்டமொன்று டைட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. படத்தில் டைட்டனின் மேற்பரப்பில் இருண்டதும் பிரகாசமானதுமான அமைப்புக்கள் தென்படுகின்றன. ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

டைட்டனின் மேற்பரப்பின் இத்தோற்றப் படங்களை பூமியிலிருந்து 200 ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து 'காசினி' அனுப்பியுள்ளது.

"நாங்கள் முன்னெப்போதும் இதனைப் பார்த்ததில்லை. இது மிகவும் வித்தியாசமாகவுள்ளது. தற்போது வரை நாங்கள் டைட்டனின் மேற்பரப்பை ஆராய்ச்சி செய்து கொண்டுதானிருக்கிறோம்" என்று விஞ்ஞானி எலிசெபத் ரேட்டில் கூறுகிறார்.

"தெளிவில்லாத, வட்டவடிவமாக தெரிவது பிரமாண்டமான எரிமலையின் வாயாக இருக்கலாம். நேர்கோடுகளாகித் தென்படுகின்ற அமைப்புக்கள் ஐதரோ காபன்களின் ஓட்டமாகவோ களங்கங்களாகவோ இருக்கலாம்" என்றார் எலிசெபத்.

டைட்டனிலுள்ள இரசாயனச் சேர்க்கைகள், பூமியில் உயிரினங்கள் தோன்றும் முன்னதாக - பல பில்லியன் வருடங்களுக்கு முன்னர் - இருந்த சேர்க்கைகளை ஒத்திருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

### விஞ்ஞானிகளின் அதிர்ச்சி


புறஊதா ஸ்பெக்ரோ மீற்றர் மற்றும் காண்பியல் பிரிவு விஞ்ஞானியான கெவின் பெயினஸ் கூறுகையில்: "விஞ்ஞானிகள் மிகவும் திகைத்துப் போயுள்ளார்கள். ஏனெனில், டைட்டனில் அழுத்தமான மேற்பரப்பில் தெறிப்படையும் சூரியக் கதிர்களின் ஊடாக அங்கு நீர் இருப்பதற்கான எந்த சான்றுகளையும் அவர்களால் காணமுடியவில்லை" - என்றார்.

கலிபோர்னியாவின் பஸடீனாவிலுள்ள நாஸாவின் (NASA - National Aeronautics and Space Administration) ஆய்வுக் கூடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் விஞ்ஞானி கெவின் பெயினஸ் மேலும் கூறுகையில்: "நாங்கள் சில ஒளிச்சுடர்களையே பார்த்தோம். அதற்கு மேல் நாங்கள் ஒன்றையும் பார்க்கவில்லை என்றே நினைக்கிறோம். அதனால் நாங்கள் சிறிது அதிர்ச்சியடைந்துள்ளோம்" என்றார்.

"வெளியிடப்பட்ட படங்களில், டைட்டனின் தென்முனையில் முகில் கூட்டங்கள் போலத் தென்படுபவை மெதேன் வாயுச் சேர்க்கைகளாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. அவை பிரகாசமான புள்ளிகளைப் போலத் தோற்றமளிக்கின்றன. சில உருகும் ஐஸ்கிறீமைப் போல இருக்கின்றன". என்கிறார் விஞ்ஞானி எலிசெபத்.

அண்மைக்காலத்தில் கிடைத்துள்ள டைட்டனின் படங்கள், அத்துணைக்கோள் தொடர்பாக விஞ்ஞானிகள் இதுவரை கொண்டிருந்த கொள்கைகளை கேள்விக்குளளாக்கியுள்ளன. டைட்டனின் பிரகாசமான மேற்பரப்பு, அடர்த்தியான பனிப்படையால் ஆனது எனவும் இருண்ட மேற்பரப்பு, ஐதரோகாபன் போன்ற சேர்க்கைகளால் ஆனது எனவும் இதுவரை கருதிய நிலையின எதிர்நிலையே உண்மையாக இருக்குமென இப்போது விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 'காசினி' விண்கலத்திலிருந்து ஹியூஜென்ஸ் ஆய்வுக்கலம் பிரிக்கப்பட்டு டைட்டனில் தரையிறக்கப்படவுள்ளது. அங்கு 4 வருட காலம் சனிக்கிரகத்தையும், டைட்டனையும் ஹியூஜென்ஸ் விண்கலம் ஆய்வு செய்யும்.



டைட்டனின் தென்துருவத்தில் வெள்ளைப்புள்ளியாக (வட்டமிடப்பட்ட பகுதி) தென்படுவது முகிற் கூட்டங்களாகும்.

டைட்டனின் மேற்பரப்பில் அரிசோனா மாநிலத்தின் விஸ்தீரணம் உடைய முகிற் கூட்டங்கள் - 450 கி.மீ குறுக்களவு உடைய இவை 15 கி.மீ உயரத்துக்குக் காணப்படுகின்றன.

ஆரம்பகாலத்தில், 400 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமி இருந்ததற்குச் சமனான தன்மை டைட்டனில் காணப்படுகிறது. எனவே, அங்கு உயிர்வாழ முடியுமா என்ற ஆராய்ச்சி தீவிரமாக நடந்து வருகிறது. ✪

# வைத்தியர் அமெரிக்காவில் இருந்தபடி பிரான்சில் நோயாளிக்குச் சத்திர சிகிச்சை



*இணையத்தின் மூலமாக சுமார் 14 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள ஒருவருக்கு சத்திரசிகிச்சை செய்துள்ளார்கள். அமெரிக்காவில் இருந்தபடியே பிரான்சிய நகரமான ஸ்ராஸ்பேக் வைத்தியசாலையில் இருந்த 68 வயதான பெண்மணிக்கு இந்தச் சிகிச்சை செய்யப்பட்டது. மேற்படி சத்திரசிகிச்சையின் போது சகலவிதமான கருவிகளும் பாவிக்கப்பட்டன. முதல் தடவையாக இவ்வாறான இணைய மூலமான சத்திரசிகிச்சையில் வைத்தியர்கள் ஈடுபட்டனர். இத்தகைய முயற்சி வைத்திய உலகில் புதிய நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. நோயாளியை நோக்கியபடி வீடியோ கமரா பொருத்தப்பட்டிருந்தது. மின்னல் வேகத்தில் அதி கூடிய வேகமான இணைய இயந்திரங்கள் செயற்பட்டன. அதனால் வீடியோ படங்கள் 155 மில்லி செக்கன்களில் பிரான்சில் இருந்து அமெரிக்காவிற்குப் பரிமாறப்பட்டன. அதேநேரம் அமெரிக்காவில் இருந்து அதைப் பார்த்தபடியே கணனியில் பொருத்தப்பட்டிருந்த விசேடமான கை போன்ற கருவியை வைத்தியர்கள் இயக்கினார்கள். அது, கொடுத்த கட்டளைகளுக்கு ஏற்ப பிரான்சில் உள்ள றோபேட் கருவி சத்திரசிக்சையை செய்து முடித்தது. வயோதிப மாதுவின் சலப்பையை வெட்டி நீக்கும் சிகிச்சையே இம்முறையில் செய்யப்பட்டது.* ☆

## இணுவில் லயன்ஸில் பதவியேற்பு வைபவம்

யாழ்ப்பாணம்,ஜூலை8

இணுவில் லயன்ஸ் கழகத்தின் 2004 -2005 ஆண்டுக்கான கழக நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம் எதிர்வரும் 11ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆர் -10 இன் பிராந்தியத் தலைவர் லயன் எஸ்.ரவீந்திரா கலந்துகொள்வார். (10-204)


### துயர் பகிர்கின்றோம்

எமது கம்பனியின் யாழ்.பிராந்தியத்துக்கான இலத்திரனியல் பொருள்களின் சேவை முகவரான (Service Dealer For Audio/Video) திரு. C.K.ரமேஸ் அவர்களின் பாசமிகு தகப்பனார்

**மானுவேல்பிள்ளை சிறில்**

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அவர்களது குடும்பத்தாரின் துயரில் நாமும் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

SHARP BE SHARP

பிறவுண் அன் கம்பனி யாழ்ப்பாணம்

தொ.பே.021.2225150

(C/36269) (43-11-12-37)


## சமய சந்நிதிகளில்

குடத்தனை,ஜூலை8

வியாபாரிமூலை, பழவத்தை தோப்பு மணல் ஞானவைரவர் ஆலயத்தின் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (10-78)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை8

பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமாள் ஆலய கும்பாபிஷேக தின அஷ்டோத்திர சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை 10 மணி முதல் நடைபெறவுள்ளது. (10-28)

★ ★ ★

சுழிபுரம்,ஜூலை8

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய மகா சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (10-28)

★ ★ ★

வலி.தென்மேற்கு,ஜூலை8

பனிப்புலம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெற வுள்ளன. (10-135)


## IBMS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம்-2004/2005

புதியநிர்வாகக் கட்டமைப்பின் கீழ் அதி நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் முற்றிலும் வித்தியாசமான முறையில் எமது முதலாவது புலமைப்பரிசில் திட்டத்தினை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.



விண்ணப்ப முடிவு திகதி : 31.07.2004

உங்கள் திறமைகளுக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம்.

- DIPLOMA IN MICROSOFT OFFICE 3 Months
- DIPLOMA IN DESK TOP PUBLISHING 3 Months
- DIPLOMA IN INTERNET TECHNOLOGY 3 Months
- DIPLOMA IN HARDWARE ENGINEERING 4Months

எமது புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக கற்கை நெறியில் இணைந்துகொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் முற்றிலும் இலவசமான ஆங்கில வகுப்புகள் வடக்கின் பிரபல ஆங்கில ஆசிரியரினால் வழங்கப்படவுள்ளன.

மாதிரி விண்ணப்பப்படிவம்

Full Name:.................
Address:....................
N.I.C. No:..................
Date of Birth:............
Course:......................
Date................ Signature..........

மேற்படி மாதிரி விண்ணப்பப் படிவத்தினை சுயமாகத் தயாரித்து, பூர்த்திசெய்து ரூபா 100 பரீட்சைக் கட்டணத்துடன் (19 வயதிற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு பரீட்சைக் கட்டணம் ரூபா 50 மட்டும்) கீழ்க்காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். காசுக்கட்டளையாக அனுப்ப விரும்புவோர் DIRECTOR, IBMS என்று பெயரிட்டு பணம் பெறும் நிலையம் POST OFFICE, JAFFNA எனக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் வந்து சேரவேண்டிய முகவரி: DIRECTOR, IBMS 410, K.K.S. ROAD, JAFFNA.

**Institute of Business Management Studies**
"The Centre for Information Technology"

**Head Office**
# 410, K.K.S. Road,
Jaffna.
T.p: 021 222 3165

**Branches**
N.M.M.V. Road, Nelliady.
Sangaththannai,
Chavakachcheri.


### கருத்தரங்கு

ஆசிரியர் வாண்மை விருத்திக் கருத்தரங்கு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற வுள்ளது. இக்கருத்தரங்கில் ஆர்வமுள்ள ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (எ-9)

### கலந்துரையாடல்

யாழ்மாவட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் பதிவு செய்த மத்தியஸ தர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல மத்தியஸ தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் திருமதி ஜெ.சரவணபவ ஐயர் கேட்டுள்ளார். (10)


# What next after A/L ?

**Thinking of a career in Business or Computing?**

**Association of Business Executives - UK**

abe

University of Sunderland, UK offers the final year in Jaffna for abe diploma holders
&

## Shortest route to MBA

enroll now

Seminar will be held on
**9th July 2004**
at
**Uthayan Publications Auditorium**
**361, Kasturiar Road, Jaffna.**
**9.30 a.m. to 12 noon**

Recognition and Exemptions granted from many Universities in

UK, USA, Australia, Canada, New Zealand etc.

**Certificate course / Diploma Level I**

**Courses Commencing in July 2004**

UniVentures Institute of Business Management
55 , Martyn Road, Jaffna
Tel: 0777 715987, www.abeuk.com



# ராஜ் லங்கா ரூர்ஸ்

**உடனடி வெளிநாட்டு வேலைவாய்ப்பு**

| வேலை விவரம் | தொகை | | சம்பளம் |
|---|---|---|---|
| 1. சைற் மனேஜர் (ஆண்) (பச்சுலர் டிகிறி இன் மெக்கானிக்கல் & எலக்ரிக்கல் எஞ்சினியர் 10வருட அனுபவமும், ஹொஸ்பிற்றலில் 5 வருட அனுபவமும் உள்ளடங்கலாக) | 2 | SR2500 | ரூபா65,000 |
| 2. எலக்ரிக்கல் என்ஜினியர் (ஆண்) | 5 | SR2500 | ரூபா65,000 |
| 3. மெக்கானிக்கல் என்ஜினியர் (ஆண்) | 5 | SR2500 | ரூபா65,000 |
| 4. பயோமெடிக்கல் என்ஜினியர் (ஆண்) | 2 | SR3000 | ரூபா78,000 |
| 5. அக்றிக்கல்சர் என்ஜினியர் (ஆண்) | 5 | SR2500 | ரூபா65,000 |
| 6. பயோமெடிக்கல்ரெக்னீசியன் (ஆண்) | 5 | SR1500 | ரூபா39,000 |
| 7. ஜெனரல் மெக்கானிக்கல் ரெக்னீசியன் (ஆண்) | 5 | SR1000 | ரூபா26,000 |
| 8. எலக்ரோனிக் ரெக்னீசியன் (ஆண்) | 3 | SR1000 | ரூபா26,000 |
| 9. லோண்ட்றி ஒப்பரேட்டர் (ஆண்) | 4 | SR 650 | ரூபா16,900 |
| 10. அப்ஹோல்ஸ்ரர் (ஆண்) | 3 | SR 650 | ரூபா16,900 |
| 11. ரெயிலர் (ஆண்) | 3 | SR 650 | ரூபா16,900 |
| 12. ஜெனரல் எலக்ரீசியன் (ஆண்) | 5 | SR 800 | ரூபா20,800 |
| 13. மேசன் (ஆண்) | 6 | SR 650 | ரூபா16,900 |
| 14. பிளம்பர் (ஆண்) | 4 | SR 650 | ரூபா16,900 |
| 15. பெயின்ரர் (ஆண்) | 5 | SR 650 | ரூபா16,900 |
| 16. பேனிச்சர் காப்பென்ரர் (ஆண்) | 5 | SR 650 | ரூபா16,900 |
| 17. வாட்டர் ரீட்மென்ற் ஒப்பரேட்டர்(ஆண்) | 5 | SR 800 | ரூபா20,800 |
| 18. சுவேஜ் ரீட்மென்ற் ஒப்பரேட்டர்(ஆண்) | 5 | SR 800 | ரூபா20,800 |
| 19. ரெலிபோன் ஒப்பரேட்டர் (ஆண்) | 5 | SR 800 | ரூபா20,800 |
| 20. பாபர் (ஆண்) | 5 | SR 800 | ரூபா20,800 |
| 21. ஹெஸ்கியூ/செக்குறிட்டி செக்ஷன் இன்சாஜ் (ஆண்) | 3 | SR1000 | ரூபா26,000 |
| 22. செக்குறிட்டி செக்ஷன் இன்சாஜ்(ஆண்) | 3 | SR 900 | ரூபா23,400 |
| 23. செக்குறிட்டி காட் (ஆண்) | 30 | SR 750 | ரூபா19,500 |
| 24. பில்டிங் கொன்ரோலர் (ஆண்) | 5 | SR 800 | ரூபா20,800 |
| 25. ஜெனரேட்டர் ஒப்பரேட்டர் (ஆண்) | 5 | SR 700 | ரூபா18,200 |
| 26. மெடிக்கல் வேஸ்ற் டிஸ் போசல் சுப்பவைசர் (ஆண்) | 2 | SR2000 | ரூபா52,000 |
| 27. கிளீனிங் சுப்பவைசர் (ஆண்) | 8 | SR 800 | ரூபா20,800 |
| 28. கிளீனிங் சுப்பவைசர் (பெண்) | 8 | SR 800 | ரூபா20,800 |
| 29. ஹெட் ஒவ் லோண்ட்றி டிப்பாட்மென்ற் (ஆண்) | 2 | SR1250 | ரூபா32,500 |
| 30. ஜெனரேட்டர் மெக்கானிக் (ஆண்) | 2 | SR 950 | ரூபா24,700 |
| 31. ஓட்டோ எலக்ரீசியன் (ஆண்) | 2 | SR 950 | ரூபா24,700 |
| 32. பொய்லர் ரெக்னீசியன் (ஆண்) | 2 | SR 950 | ரூபா24,700 |
| 33. HAVC ரெக்னீசியன் (ஆண்) | 2 | SR1000 | ரூபா26,000 |
| 34. A/C ரெக்னீசியன் (ஆண்) | 2 | SR 900 | ரூபா23,400 |
| 35. எலக்ரிக்கல் ரெக்னீசியன் (ஆண்) | 2 | SR 950 | ரூபா24,700 |
| 36. சேப்பர் கொன்றோல் ஒப்பரேட்டர்(ஆண்) | 2 | SR 750 | ரூபா19,500 |
| 37. அம்புலன்ஸ் ட்றைவர் (ஆண்) | 5 | SR 800 | ரூபா20,800 |
| 38. லைற் வெயிக்கில் ட்றைவர் (ஆண்) | 10 | SR 600 | ரூபா15,600 |
| 39. ட்றக் ட்றைவர் (ஆண்) | 10 | SR 700 | ரூபா18,200 |
| 40. ஜனிற்றர் (ஆண்) | 88 | SR 450 | ரூபா11,700 |
| 41. ஜனிற்றர்ஸ் (பெண்) | 100 | SR 450 | ரூபா11,700 |
| 42. கிளீனிங் லேபர் (பெண்) | 50 | SR 450 | ரூபா11,700 |
| 43. லேடிங் லேபர் (பெண்) | 4 | SR 450 | ரூபா11,700 |
| 44. ஸ்ரெரிலைஷேசன் (ஆண்) | 2 | SR 450 | ரூபா11,700 |
| 45. அயன் லேபர் (ஆண்) | 6 | SR 450 | ரூபா11,700 |
| 46. லோண்டறி லேபர் (ஆண்) | 2 | SR 450 | ரூபா11,700 |
| 47. அக்றிக்கல்சர் லேபர் (ஆண்) | 5 | SR 450 | ரூபா11,700 |
| 48. காகோ லேபர் (ஆண்) | 2 | SR 450 | ரூபா11,700 |
| 49. லோடிங் அன் அன்லோடிங் லேபர் (ஆண்) | 20 | SR 450 | ரூபா11,700 |
| 50. சிவில் லேபர் (பெண்) | 6 | SR 600 | ரூபா15,600 |

**உடனடி வேலை வாய்ப்பு**

**DOHA QATAR**
1. MASONS 60 QR 650-700
2. STEEL FIXER 35 QR 650-700

**SAUDI ARABIA**
1. DIESEL/PETROL MECHANIC 01 SR 1000
**VISA IN HAND**
2. PETROL MECHANIC 01 SR 800

**ஒழுங்குகளும் நிபந்தனைகளும்**

இலவச உணவு, தங்குமிட வசதி, மருத்துவம், போக்குவரத்து வசதிகள் என்பன நிறுவனத்தால் வழங்கப்படும். இரண்டு வருட ஒப்பந்தம்.
★ ஒரு நாளுக்கு எட்டுமணிநேர வேலை. ★ ஒப்பந்த முடிவில் திரும்பிவரும் விமானப் பயணக் கட்டணம் நிறுவனத்தால் பொறுப்பேற்கப்படும். ஏனைய நிபந்தனைகள் யாவும் சவூதி அரேபிய தொழிலாளர் சட்டத்துக்கு அமைவாக நடைமுறைப் படுத்தப்படும்.

**கடவுச்சீட்டு மற்றும் தகுந்த ஆவணங்களுடன் உடனே சமுகமளிக்கவும்**

கொழும்பிலிருந்து வருபவர் மூலம் நேர்முகத்தேர்வு (10,11.07.2004) சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.
இரண்டு வாரத்தில் பயணத்துக்குத் தயாராக இருப்பவர்கள் உடன் சமுகமளிக்கவும்.
தொடர்புகளுக்கு:

**ராஜ் லங்கா ரூர்ஸ்**
220A, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
T.P: 0777 686161,
0777 917597

(சி36242)(37-11-12)




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலய இந்து இளைஞர் பேரவையினால் உருவாக்கப்பட்ட 'வாசலில் ஒளிவீசு' என்ற பக்திப்பாடல் இசைத்தட்டு மற்றும் ஒலி நாடா ஆகியவற்றின் ஒலிநாடா வெளியீட்டு விழா நேற்று நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் செஞ்சொற் செல்வன் ஆறு திருமுருகன் தலைமை உரை நிகழ்த்துவதையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை நிகழ்த்துவதையும் முதல் இருபடங்களில் காணலாம். இசைத்தட்டு, ஒலிநாடாவை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் வெளியீட்டு வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக்குருக்கள், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பேராசிரியர் மா.வேதநாதன், பேராசிரியர் சபா ஜெயராசா, கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர்.

(படங்கள் வசந்தன்)

### ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைகளம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவு நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புத்தூர் சோமஸ்கந்தாக்கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ-6)

**ஆசிரியர் போட்டிப் பரீட்சை**

நுண்ணறிவு, அரசறிவியல், ஆசிரியர்கள்
திரு. T.திருமுருகன், பொன்சந்துரு
எழுதிய பொது அறிவு சமகாலவிடயங்கள்.
ஆசிரியர் கற்பிக்கின்ற நிறுவனங்கள்
மற்றும்
பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.
(33908)(36)

**ராஜா யாழ்ப்பாணம்**
சூர்யா, ஜோதிகா, (இருவேடம்) விவேக் நடித்த



பேரழகன்
தினசரி: 10.30,2.30,6.30, (பு.நே)
09.07.2004 முதல்
(ரீலீஸ்)
வானவில்
(C/35994)(37)

**நிறைஞ்சனாஸ் சங்கானை**
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



கில்லி
தினசரி: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
SHE [இரவு 8.45]
(C-35653)(37)

**நாகம்ஸ் சுன்னாகம்**
மாதவன், அமோகா, பூஜா, நாமு
நடித்த



ஜேஜே
தினசரி:
11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/35739)(37)

# கல்விசார் அதிகாரிகள் பற்றிய விசாரணைகளுக்கு விசேட பிரிவு

## இம்மாதம் முதல் செயல்படும்

கொழும்பு,ஜூலை8

கல்வி அமைச்சின் அதிகாரத்துக்குள் சகல கல்விசார் அதிகாரிகள் தொடர்பான எல்லாவித குற்றச்சாட்டுக்களையும் விசாரிப்பதற்கென விசேட புலனாய்வு மற்றும் ஒழுக்காற்று பிரிவு ஒன்றை கல்வி அமைச்சு நிறுவியுள்ளது. கல்வி அமைச்சின் நிர்வாகம் மற்றும் நிதி சார்பான மேலதிக செயலாளரின் கீழ் இந்தப் பிரிவு செயற்படும்.

கடந்த காலங்களில் நிதி மற்றும ஒழுக்காற்று தொடர்பான விசாரணைகள் முறையாக நடைபெறவில்லை, அதனால் முக்கியமான பல விடயங்கள் கவனிக்கப்படாமல் போய்விட்டன.

இதன் விளைவாக ஏறத்தாழ 300 விசாரணைகள் கிடப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இவைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாகாண கல்வி அதிகாரிகள மற்றும் பலர் பற்றிய விசாரணைகள் முற்றுப் பெறாமல் உள்ளன என்று கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையென்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பிரிவு தற்போது நடைமுறையிலுள்ள சட்டங்களின் கீழ் செயல்படும் என்றும் விசாரணைகள் இந்த மாதம் முதல் ஆரம்பமாகி நீதியான முறையிலும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(க)

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் பொன்னுத்துரை ஸ்ரீபாலனின்
அன்புச் சகோதரன்

**பொன்னுத்துரை ஜெகநாதன்**

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
(33915)(11-12-36) யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்.

# வலி.கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி
# கேள்வி அறிவித்தல் - 2004

கீழ்க்குறிப்பிட்ட வேலைக்கு இக்ராட் எம்-9 பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி - 12.07.2004 ஆம் திகதி முதல்
16.07.2004 ஆம் திகதி வரை.

கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி - 19.07.2004 ஆம் திகதி
மு.ப. 10.00 மணி வரை.

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி -19.07.2004 ஆம் திகதி பி.ப. 3.00 மணி

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை '*செயலாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், நீர்வேலி*' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை '*பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இல.29, செட்டித் தெரு, நல்லூர்*' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 19.07.2004 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடியவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படாத பெறுமதி சேர்வரி |
|---|---|---|---|---|
| 01. | உரும்பிராய் சிவன் வீதி திருத்தம் பகுதி 111 [RRRN நிதி] | 5000.00 | 500.00 | 75.00 |

இது தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
07.07.2004

இராசரத்தினம் இராசதுரை
செயலாளர்.

(சி-36268)(36-11-12)

### முன்பள்ளி ஆசிரியர்களுக்கு

வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட முன்பள்ளி ஆசிரியர்களுககான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முதன்மை ஆசிரியர், உதவி ஆசிரியர் உட்பட அனைத்து ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(-9)

சிவமயம்

**அருளாசி தந்து ஆசீர்வதித்து அருள்பெற வாழ்த்தி வணங்குகின்றோம்.**



எமது ஆலயத்தில் 12 வருடகாலமாக பூஜை ஆராதனை செய்து சேவையாற்றிய

**பிரம்மஸ்ரீ பாலகுமாரசாமி சர்மா**
**ஆனந்தராஜ சர்மா**

அவர்களுக்கு இன்று 08-07-2004 காலை 8.40 மணி முதல் 10.00 மணி வரையான சுபநேரத்தில் புத்தூர் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் குருப்பட்டம் தரித்து சிவாச்சார்ய அபிஷேகம் நடைபெறுவதையிட்டு நாம் பெருமகிழ்வடைகின்றோம். நாங்கள் அவரை அருளாசி தந்து எம்மை ஆசீர்வசித்து அருளுமாறு வாழ்த்த எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானவைரவர் கிருபாக்கடாச்சத்தினால் அவரது சேவை தொடர்ந்து சிறக்க வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ ஞான வைரவர் ஆலய தேவஸ்தானம்,
புத்தூர் கிழக்கு, காளியானை.

நிர்வாகத்தினரும்
ஆலய அங்கத்தினரும்.
(33911)(11-12-36)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரத்தினம் சிவபாக்கியம்

அளவெட்டி மேற்கைச் சேர்ந்த திருமதி கனகரத்தினம் சிவபாக்கியம் அவர்கள் 06.07.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் சுசிலாதேவி, ஜெயசுந்தரம் (RDA), ஜெயசீலன் (வர்த்தக முகாமையாளர் அளவெட்டி மல்லாகம் M.P.C.S) சந்திராதேவி, ஜெயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.07.2004) புதன் கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முத்தடி மடலேன்,*
*கே.கே.எஸ் வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கோண்டாவில்.*
(33913)(36-11-12)

தகவல்:
ஜெயசீலன்
(மகன்).

## ஆறுமுகம் சிவராஜா

**(உரிமையாளர் மல்லிகா மிக்சர் மாளிகை, யாழ்ப்பாணம்)**

வேலணை, சோனாவத்தையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவராஜா அவர்கள் நேற்று 07.07.2004 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மல்லிகா மிக்சர் தொழிலகம்,*
*கூளாவடி, ஆனைக்கோட்டை.* (33912)(36-11-12)

தகவல்:
குடும்பத்தினர்.

## பொன்னுத்துரை ஜெகநாதன் (ஜெகன்) (நயினாதீவு)



நயினாதீவு 2ஆம் வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும் தேவாலய வீதி (Church Lane), கொக்குவில கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை ஜெகநாதன் அவர்கள் 06.07.2004 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் பொன்னுத்துரை அமரர் திருவருட்செல்வி ஆகியோரின் பாசமிகு மகனும் வடிவாம்பிகையின் அன்புக் கணவரும் பழநிவேல்-பகதமீரா ஆகியோரின் மருமகனும் ஐஸ்வர்யா, லாவன்யா, குகப்பிரியன், பிரணவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பலதா (இத்தாலி), பத்மநாதன (கொழுமபு), சிவலோகநாதன் (கொழும்பு), திவாகரன், ஸ்ரீபாலன் (ஆசிரியர்), ஜெயலதா, பிரேமலதா, ஜெயகாந்தன், நிரஞ்சனா, சரத்பாபு (கொ.இ.கல்லூரி), ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதாம்பிகை (கனடா), ஜெகநாதன், ஜெகதீஸ்வரன் (கனடா), பத்மநாதன் (டென்மார்க்), கிருபாகரன (இத்தாலி), பரமசொரூபி, சுமேந்திராதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.07.2004) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக பி.ப. ஒரு மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

*சேச் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.* (33912)(11-12-36)

தகவல்:
வடிவாம்பிகை (மனைவி),
பொன்னுத்துரை (தந்தை),
பழநிவேல் (மாமனார்).

# உலகம் கணிப்பிடும் அளவுக்கு இராணுவம் பலப்படுத்தப்படும்

## புதிய இராணுவத் தளபதி கண்டியில் தெரிவிப்பு

கண்டி,ஜூலை8

"உலகம் கணிப்பிடும் அளவுக்கு இலங்கையின் இராணுவப்பலம் வலிமைப்படுத்தப்படும்" - இவ்வாறு இலங்கையின் புதிய இராணுவத தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட கண்டியில் தெரிவித்தார்.

அவர் புதிய தளபதியாகட் பதவி ஏற்ற பின்னர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சென்று வழிபாட்டில் கலந்துகொண்டார். அவரை தியவதன நிலமே வரவேற்றார். அங்கு செய்தியாளர்களைச் சந்தித்த இராணுவத் தளபதி மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டையும் மக்களையும் காப்பாற்ற வேண்டியது எமது கடமை. இதன் பொருட்டு வலிமை பொருநதிய படை அவசியம். ஜனாதிபதியும் ஏனையோரும் நாட்டின் சமாதானத்தை நிலை நாட்ட எடுக்கும் முயற்சிகளுக்கு இராணுவம் பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

யுத்தமின்றி சமாதானத்தை முன்னெடுக்க வேண்டுமென்ற பேச்சுக்கள் தொடர்பாக எடுக்கப்படும் முயற்சிகளையும் நாம் வரவேற்றோம். யுத்தமொன்று தற்செயலாக இடம்பெற்றால் அதற்கும் முகம் கொடுக்க இராணுவம் தயாராகவே இருக்கிறது" என்றார்.

அவர் மல்வத்த அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்கர்களையும் சந்தித்து ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டார்.

அஸ்கிரிய பீடாதிபதி வண.உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் இராணுவத் தளபதியை ஆசீர்வதித்து பேசுகையில் கூறியதாவது:-

ஆட்சியாளர்களின் திறமையின்மை காரணமாகவே இராணுவத்தினர் மானசீக அடிப்படையில் கடந்த காலத்தில் இருக்கக் காணப்பட்டனர். நாடு இப்பொழுதுள்ள சூழ்நிலையில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் யுத்தம் மூண்டால் அதற்கு ஈடுகொடுக்கும் பொருட்டு இராணுவம் வலிமை உடையதாக அமைய வேண்டும் - என்றார். இராணுவத் தளபதியின் நியமனம் குறித்து தனது திருப்தியையும் மகாநாயக்கர் தெரிவித்தார்.

மல்வத்த பீடாதிபதி வண.திப்புட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் இராணுவத் தளபதிக்கு அவரது வாசஸ்தலத்தில் வைத்து ஆசீர்வதித்தார். (க)

### புலிகள் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கமும் இல்லை. நேற்றைய தாக்குதல் சம்பவத்துக்கு விசேடமான காரணம் என்று எதுவும் கிடையாது. புலிகளின் பாசிச நடவடிக்கைகளுக்கு நீண்டகாலமாக நான் இடையூறாக இருந்து வருகிறேன். அதனால் என்னைக் கொலைசெய்ய புலிகள் பல தடவைகள் முயற்சிக்கிறார்கள். அவை வெற்றியளிக்கவில்லை.

இந்தக் குண்டுவெடிப்பின் பின்னரும் சமாதான முயற்சிகளை மனந்தளராமல் முன்னெடுககும்படி ஜனாதிபதியை நான் கோரியுள்ளேன். அதேபோன்று பிரபாகரனிடமும் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளேன். கடந்த கால தவறுகளை விமர்சனத்துக்கு உட்படுத்திவிட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வைக்காண முன்வருமாறு கேட்டுள்ளேன். அவ்வாறு பிரபாகரன் முன்வருவாரானால் நான் அரசியலில் இருந்தும் ஒதுங்கிக் கொள்வேன் - என்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. (எ-9)

### லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப் படைத்தரப்பின் இத்தகைய போர் நிறுத்த மீறல்களைக் கட்டுப்படுத்த முடியாதவராக படைத்துறை அமைச்சைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் ஜனாதிபதியால் சமாதான முயற்சிகளை உண்மையாக முன் னெடுத்துச் செல்லமுடியாது என்றும் பாலசிங்கம் எச்சரிக்கை விடுத்தார்.

நோர்வே வெளிநாட்டமைச்சர் ஜோன் பீற்றர்சன் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்கைப் புதுடில்லியில் நேற்றுமுன்தினம் சந்தித்து இலங்கை சமாதான முயற்சிகள் குறிதது பேச்சு நடத்தியிருந்தார். இந்தச் சந்திப்பின போது விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்மும் உடனிருந்தார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், சொல்ஹெய்ம் இந்தியா செல்லவில்லை. அவர் லண்டன் சென்று அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துச் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாகக் கலந்துரையாடினார். (க)

### சமாதானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிருப்தியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். - என்று அதில் உள்ளது.

ஸ்ரீல.சு.கட்சியின் தலைமைச் செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேன இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்களின் மூலம் ஐ.ம.சு. கூட்டமைப்பு தளராது நாட்டினுள் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நாம் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவோம் - என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

### பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையகம்' என்னும் தனியான அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் பாதுகாப்புச் செயற்பாடுகளின் அளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். வாகனங்களையும், பொதுமக்களையும் சோதனையிடுவதை அதிகரித்து இருக்கிறோம்.

அத்துடன், வீதித்தடைகளையும், ரோந்து நடவடிக்கைகளையும் அதிகரித்துள்ளோம்" - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமேத பெரேரா தெரிவித்தார். (எ-9)

### கொள்ளுப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால், அந்த யுவதி அங்கிருந்து வெளியேறி அமைச்சின் முன்னால் உள்ள வீதியில் போய் நின்றதுடன் நீண்டநேரமாக அங்கும், இங்கும் நடமாடிக் கொண்டிருந்துள்ளார்.

இதனால், அமைச்சின் கடமையிலிருந்த இரண்டு பெண் பொலீஸார் அந்த யுவதியைக் கைதுசெய்து கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான அந்த யுவதியை பொலீஸ் நிலையத்தில் வைத்து, பெண் பொலீஸார் சோதனையிட்ட போது, அந்த யுவதி தன்னுடலில் பொருத்தப்பட்டிருந்த குண்டை வெடிக்கச் செய்தார் என்று கருதப்படுகின்றது.

இதனால், அந்த யுவதியும் அங்கு கடமையிலிருந்த சிரேஷ்ட பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், ஒரு சார்ஜன்ட், இரண்டு கான்ஸ்டபிள்களுமாக ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டு சிவிலியன்களும், எட்டு பொலீஸாரும் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்கோலைக் குண்டுதாரியுடன் காணப்பட்டவர் எனக் கருதப்படும் மற்றொரு யுவதியையும், பொலீஸார் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாரிடம் பின்னர் ஒப்படைக்கப்பட்டார்.

அரசும், புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின் தலைநகரில் இடம்பெற்ற முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இதுவாகும் எனக் குறிப்பிட்ட பொலீஸ மா அதிபர் இந்திரா டி சில்வா, இந்தக் குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர்கள் யார் என்பதை உடனடியாகக் கூறமுடியாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, தலைநகரிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள அனைத்துப் பொலீஸ் நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலீஸ் மா அதிபர் கூறினார்.

### பல்கலை.மாணவருக்கு அவசர கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல், இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பல்லைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மருத்துவ பீட மாணவி புஸ்பமாலாவின் விடயம் பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் -

இதனால், அனைத்து மாணவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் -

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். செல்வக்குமாரன் கேட்டுள்ளார். (எ-1[illegible])

## தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தன!

ஆறு மாகாணசபைகளுக்குமான தேர்தல் பிரசாரப் பணிகள் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைகிறது எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி மேல், வடமத்திய, மத்திய, ஊவா, தென், சப்பிரகமுவ ஆகிய ஆறு மாகாணங்களுக்குமான மாகாணசபைத் தேர்தல் நடைபெறுகின்றது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் தேர்தல் திணைக்களம் பூர்த்தி செய்துள்ளது.

தேர்தல் பிரசாரப் பணிகள் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்ததால், பிரதான அரசியல் கட்சிகள் தமது இறுதிக்கட்ட தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தன.

### யுத்த நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறோம். இது குறித்துப் பேசுவதற்காக விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொள்ள முயற்சிததோம். ஆனால், இயலவில்லை.

எங்களைப் பொறுத்தவரை எந்தவொரு சம்பவம் இடம்பெற்றாலும் இரண்டு தரப்புகளுடனும் தொடர்புகொண்டு அதுகுறித்து விசாரிப்போம் - இப்படி திஸா சிம்போகர் கூறினார். (எ-9)

### ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவப் புலனாய்வுப் பிரிவு தகவல் வெளியிட்ட வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி செயதது என்ன?

கொழும்பில் குண்டுகள் வெடிக்காது எனக் கூறி முன்னைய அரசு, வாளாவிருந்ததால் தற்கொலையாளிகள் அமைச்சு அலுவலகங்களுக்குள் கூட செல்ல முடிந்திருக்கிறது.

எனவே, மக்கள் இந்த நிலைமையை அறிவுடன் ஆராய்ந்து தேசத்தின் பாதுகாப்பை [illegible] படுத்த முன்வரவேண்டும் - என்று அதில் உள்ளது. (எ-9)

## யாழ். பல்கலை. மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

சம்பந்தப்பட்ட மாணவியின் பரீட்சை வினாத்தாள்களை வேறொரு பல்கலைக்கழகப் பேராசிரியர் மூலம் மீள் பரிசீலனை செய்ய பல்கலைக்கழக நிர்வாகம் எடுக்கும் முடிவைத் தாம் கண்டிப்பதாகவும் -

இது தமக்கு கௌரவப் பிரச்சினை என்றும்- மருத்துவ பீடத்துறைசார் தலைவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, சம்பந்தப்பட்ட மாணவி மனித உரிமை ஆணைக்குழுவில் செய்த முறைப்பாட்டில் தவறான தகவல்கள் உள்ளன என்றும் - இதுதொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் கவனமெடுக்கவில்லை என்றும் - துறைசார் தலைவர்கள் குற்றம் சுமத்தினார்கள்.

இந்தச் சந்திப்பில் மாணவியின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பாக சுமுகமான தீர்வுகள் எதுவும் எட்டப்படவில்லை.

இந்நிலையில் மருத்துவபீட மாணவர்கள் பிற்பகல் 5.30 மணிக்கு கூட்டமொன்றை நடத்தினார்கள். இதில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.செல்வகுமார் உண்ணாவிரதமிருந்த மாணவி கி.புஷ்பமாலாவின் சகோதரர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சுமார் 2 மணித்தியாலங்கள் இடம்பெற்ற அந்தக் கூட்டத்தின் பின்னர் மாணவி உண்ணாவிரதமிருந்த இடத்திற்கு மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆர்.விமலன், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் வந்தனர்.

அந்தவேளையில் பல்கலைக்கழக மாணவர்களில் ஏராளமானோர் அங்கு திரண்டிருந்தனர். அவர்கள் முன்பாக உண்ணாவிரதத்தை கைவிடும்படி புஷ்பமாலாவைக் கேட்டுக்கொண்ட மருத்துவபீட மாணவர் தலைவர், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இது தொடர்பில் எடுக்கும் முடிவுக்கு மருத்துவபீட மாணவர் ஒன்றியம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்தார். இதனையடுத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் சார்பில் அதன் முடிவை தலைவர் எஸ்.செல்வகுமார் மாணவி கி.புஷ்பமாலாவிடம் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

மருத்துவபீட மாணவியாகிய கி.புஷ்பமாலாவுக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறியத்தருவதாவது:-

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறும், தங்களுடைய கோரிக்கைகள் முற்றுமுழுதாக நிறைவேற்றப்படும் வரைக்கும், பல்கலைக்கழக மாணவர்களின் அனைத்து விரிவுரைகளையும் பகிஷ்கரித்து, தாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான முடிவினைப் பெற்றுத்தருவோம் என்பதையும் கூறுகின்றோம்.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் அசமந்தப் போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறோம், இந்த உண்ணாவிரதத்தினால் தங்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய உடல் உளத் தாக்கங்களுக்கு நாம மனம் வருந்துகின்றோம். எங்களுடைய மாணவர்களுடைய முடிவுக்கு இதுவரைக்கும் ஒத்துழைப்பு வழங்கியமைக்கு ஒன்றியம் சார்பாக நன்றியைக் கூறுகின்றோம் என்று அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இந்த வாக்குறுதியை ஏற்று, தனது உண்ணா விரதத்தை கி.புஷ்பமாலா முடித்துக்கொண்டார்.

உடல் சோர்ந்த நிலையில் காணப்பட்ட அவர் அம்புலன்ஸ் வாகனம் மூலம் யாழ். மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

ஒரு மாணவியின் உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தவேளை நிர்வாகத்தால் அதனை முடிவுக்குக் கொண்டுவரமுடியாத போது - மாணவர்கள் தலையிட்டு அந்த மாணவியின் உயிரைக் காப்பாற்றியமையும் -

மாணவி உண்ணாவிரதம் இருந்த சமயம் மருத்துவபீடத்தினதோ, பல்கலைக்கழகத்தினதோ நிர்வாகத் தலைவர்கள் மாணவியைச் சந்தித்து பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்காமையும் - குறிப்பிடத்தக்கவை.

(ஒ-13-86)


பொதி விநியோக சேவையில் வெற்றிகரமான
TNT இரண்டு வருடப்பூர்த்தி - 20% விசே. கழிவு

சர்வதேச கூரியர் சேவை, உள்நாட்டு கூரியர் சேவை, சர்வதேச தபால் சேவை போன்ற சேவைகளுக்கு 20% சிறப்புத் தள்ளுபடியினை (20% Special Discount) வழங்குகின்றோம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



தொடர்புகளுக்கு எமது புதிய முகவரி
TNT கூரியர் சேவை,
56/15, ஸ்ரான்லி வீதி,
(யாழ். பெரிய தபாற்கந்தோருக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P- 222 8771, 0777-270452, 0777-915824

உங்கள் அன்பளிப்புப் பொருள்களை மட்டுமல்ல, உங்கள் அன்பினையும் எடுத்துச்சென்று சேர்க்கின்றோம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இவ் விசேட சலுகை 2004 ஜூலை 19 வரை மட்டுமே!

இத்துடன் ரூபா 200/= பெறுமதியான VOUCHER உம் வழங்கப்படும். இதனை இரண்டு மாத காலத்துக்குள் சமர்ப்பிப்பவர்களுக்கு பொதிகளை அனுப்பும்போது கழிவு வழங்கப்படும்.



கலையகம் ஆவரங்கால்
ஆசிரியர் போட்டிப் பரீட்சை
துரித வகுப்புகள்
By: தவசேகர்
(33917) (40) சனி. ஞாயிறு காலை 6.00



CHEMISTRY
(GROUP CLASSES)
ORGANIC INORGANIC
(புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன)
DIAS B.Sc.(Hons) Spl. Chem.
T.P.No:- 0776 176397
104/4, குறுக்கு வீதி, அத்தியடி.
(33881) (40)



புதிய பிரிவு ஆரம்பம்
Ms Office 12.07.2004
SKY COMPUTERS (PVT) LTD
No. 89, Kandy Road,
Chundikuli, Jaffna.
(Near Kachcheri).
(C/36216)(40)



ஞானோதயா அக்கடமி
சாவகச்சேரி
A/L 2005 DAY CLASS
Che. - அன்பழகன் (அன்பு)
Phy. - கருணாநிதி
Bio. - பொன் திவாகர்
C.Maths. - ஜெயந்தன்



மதுபாரத் இந்து மகளிர் ஒழுங்கை யாழ்.
ஆறே மாதத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH
with
GRAMMAR
By:த.தனேந்திரன் B.Com.(Hons).M.M.Spl.H.N.Dip.in ACC. P.G.Dip.in.Edu.
பகுதி நேரவிரிவுரையாளர் (English) தொழில்நுட்பக்கல்லூரி
ஆரம்பம்: 10.07.2004. சனி 5 மணி (33915) (29)



ஆசிரியர் போட்டிப் பரீட்சை
புதிய பிரிவுகள்
திங்கள், வியாழன், வெள்ளி -4 p.m.
(30 மணித்தியாலம்)
ஆரம்பம்: 08.07.2004 வியாழன் 4 p.m
(அச்சடித்த பாடக்குறிப்புகள் இலவசம்)
திகழ் கல்வி நிறுவனம்
(33880) (40) K.K.S வீதி, இணுவில்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.